யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?

(ஒரு விதவைப் பெண்ணின் சுயசரிதை)

ஆசிரியர்

நாரண - துரைக்கண்ணன்

(திருத்தமான இரண்டாம் பதிப்பு)

KVC0606

பிரசுரம்

ஆனந்த போதினி காரியாலயம்,

சௌகார்பேட்டை, சென்னை

1943

இந்நூலாசிரியர்

தமிழ் மக்கள் வாழ்க்கை விசித்திரங்களைப் படம் பிடித்துக் காட்டும் சமூகக் கதைகள், நாடகங்கள் பலவற்றையும், நம் தேசியத் தலைவர்கள், மகான்கள், கவிகள், மேனாட்டுச் சுதந்திர வீரர்கள், ராஜதந்திர நிபுணர்கள், சர்வாதிகாரிகள் சரித்திரங்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறார்.

உரிமையுரை

விதவைத் தளையில் கட்டுண்டு
விடுதலை யடைய வழி காணாது வருந்தும்
எனது தமிழ் நாட்டுச் சகோதரிகளுக்கு
இச்சிறு நூல் அர்ப்பணம்.

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

"மனித வாழ்க்கை என்பது கணிதப் புத்தகமல்ல; அது ஒரு விசித்திரமான நவீனம்" என்று பிரபல மகாராஷ்டிரக் கதாசிரியரொருவர் தாம் எழுதிய நவீனமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார். இது முற்றும் உண்மையாகும். மனித வாழ்க்கை ஒரு விசித்திரமான நவீனம் என்பதில் சந்தேகமில்லை. மனித வாழ்க்கையில் நிகழ்ந்து வரும் பல நிகழ்ச்சிகள் கற்பனைக் கதைகளைக் காட்டிலும்—அபார கற்பனா சக்தி படைத்த கதாசிரியர்கள் சிருஷ்டிக்கும் கற்பனைக் கதைகளைக் காட்டிலும்—விசித்திரமானவையாய் இருக்கின்றன; ருசிகரமானவையாய் இருக்கின்றன. ஆகவே, சிறு கதைகள், பெருங் கதைகளை எழுதும் கதாசிரியர்கள் தாங்கள் கற்பனை செய்து எழுதும் கதைகளுக்குரிய விஷயங்களுக்காக வேறெங்கும் போகவேண்டியதில்லை. மனித வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கண்கொண்டு பார்த்தால் போதும்; காது கொடுத்துக் கேட்டால் போதும். பல ருசிகரமான கதைகளைச் சிருஷ்டித்து விடலாம். இவ்விதம் மனித வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைச் சித்திரிப்பதுதான் சிறு கதை அல்லது பெருங் கதையின் பொதுவான இலக்கணமாகும். மனித வாழ்க்கையில் என்ன நிகழ்கின்றதோ அதை அப்படியே சித்திரித்து விட்டுக் கதாசிரியன் விலகிவிட வேண்டும் என்பது ஒரு கட்சி. இல்லை யில்லை; மனித வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை ஜீவனாகக் கொண்டு, அதற்கு மெருகு கொடுக்கும் முறையில் கற்பனா சக்தியை யுபயோகித்து உசிதமான வகையில் கற்பனையைக் கலந்து எழுவதுதான் சிறுகதை இலக்கணமாகும் என்பது மற்றொரு கட்சி.

எது எப்படியிருந்தாலும், மனித வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் சிறு கதைகளோ அல்லது பெரிய கதைகளோ மனிதனின் இதயத்தைப் பண்படுத்துவனவாய் இருக்க வேண்டும். அவ்விதம் எழுதப் படுபவை தாம் மனித சமூகத்தைச் சீர் திருத்தி யுயர்த்த முடியும்; இலக்கிய வகையில் வைத்து எண்ணப்படும்; கலை யுருப் பெறும்.

இன்று வெறுங் கற்பனைக்கு முக்கியத்துவம் கொடுப் பதைவிட, மனித வாழ்க்கையில் நிகழும் உண்மை நிகழ்ச்சி களைப் படம் பிடித்துக் காட்டுவதற்குத் தான் பிரதான ஸ்தானம் தரவேண்டும். ஏனென்றால், இன்று தமிழ்ச் சமுதாயத்தில் பல முக்கியப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியனவாய் இருக்கின்றன. வறுமை காரணமாகவும் அறியாமை காரணமாகவும் சமூகத்தில் பலவிதமான ஊழல்கள் மலிந்து மூடப்பழக்க வழக்கங்களும் அர்த்த மற்ற கொள்கைகளும் ஆதிக்கங் கொண்டு தமிழ் மக்களை அலக்கழித்து வருகின்றன. ஆக்வே, வாழ்க்கைப் பிரச் சினைகளை நேர்முகமாக அலசும்—சமூகச் சட்டத் திட்டங் களின் கொடுமைகளைச் சித்திரித்துக் காட்டும்—சமூகக் கதைகள் அத்தியாவசிய மாகும் என்றால் மிகையாகாது. இன்றைய சமூகக் கட்டுப்பாட்டுக் கொடுமைகளாலும், அரசாங்கத்தின் சுயேச்சாதிகாரச் சட்டங்களாலும் நடக் கும் கோர கிருத்தியங்களை—பரிதாப கரமான காட்சிகளை நினைக்கும் போதெல்லாம் சமூகத்தின் நெஞ்சு துடிக்கும் படி இச் சமூகக் கதைகள் வாயிலாகச் செய்ய வேண்டும்; ஒவ்வொரு ஆண் பெண்ணின் சிந்தனையையும் சிதறடிக் கும்படியாகச் செய்யவேண்டும். அப்போதுதான் தமிழ்ச் சமூகத்துக்கு விமோசனம் ஏற்படும்.

"தீண்டாமை, கதர், கோயில் திறப்பு, சமுதாய அக் கிரமங்கள், சாதிக் கட்டுப்பாடுகள், விதவைகள் துயரம்

இவைகளுக்குத்தான் கதைகள் எழுந்தனவா? அல்லது கதைகளுக்காகத் தான் இவைகள் உண்டாயினவா?

"சமூகக் கதைகளில் உருக்க மில்லாமல் போகவில்லை. நம் நாட்டு நிலைக்கு அவைகளும் வேண்டியவை தான்; ஆனால், சமுதாயம் முன்னேற்ற மடைந்து விட்டால், பிறகு அவைகள் ரஸமற்றுச் சப்பென்று போய் விடும். நிரந்தரமாக எக்காலத்திலும், நம் உள்ளத்தை அவைகள் தொட்டுக் கொண்டிருக்க முடியாது. வெறும் நீதிகளுக் காகவோ வேறு குறிப்பிட்ட நோக்கங்களுக் காகவோ கதைகள் கட்டப் பட்டால், அவை இலக்கியக் கலையின் உயர்ந்த பீடத்திலிருந்து இறங்கி விடுகின்றன" என்று சிறு கதை 'கிரிடிக்' ஒருவர் கூறுகிறார். நான் சொல்லுகிறேன்: அவர் குறிப்பிட்டிருக்கிறபடி சமுதாயம் முன்னேற்ற மடைந்து விட்டால் அப்போது பார்த்துக் கொள்வோம். அதுவரை சமூகப் பிரச்சினைகளை ஓரளவேனும் தீர்ப்பதற்குரிய சமூகக் கதைகள் வெளிவரத்தான் வேண்டும் என்று. நம் நாட்டின் தற்போதைய நிலைக்கு சமூகப் பிரச்சினைகளை அலசும் சமூகக் கதைகளும் வேண்டியவை தான் என்று மேற்படி 'கிரிடிக்'கே ஒப்புக் கொள்ளுகிறார்; ஆதலால், நிரந்தரமாக எக்காலத்திலும் நம் உள்ளத்தை அவைகள் தொட்டுக்கொண் டிருக்கா விட்டாலும் பரவாயில்லை; கலையின் உயர்ந்த பீடத்தி லிருந்து இறங்கி விட்டாலும் பாதக மில்லை. மனித சமூகத்தின் வளர்ச்சியை— உயர்வை வைத்துத்தான் இலக்கியமோ, கலையோ ஒழிய, ஜனசமூகம் சீர் குலைந்திருந்தால், கலை, இலக்கியங்கள் உண்டாக முடியாது. அவ்விதம் இருப்பதாகச் சொன்னாலும், அக் கலை, இலக்கியங்கள் அஸ்திவார மில்லாத கட்டிடங்கள் போலவே கலகலத்துப் போய் விடும். மனிதனுக்காகத்தான் கலை, இலக்கியங்களேயொழிய, மனிதனில்லாமல் கலை, இலக்கியங்கள் இல்லை என்பதை மேனாட்டுக் கலை, இலக்கியங்களை உருப்போட்டு, வெறுங் கலா ரஸனையி

லேயே கருத்தைச் செலுத்தும் 'கிரிடிக்'குகள் கவனிக்க வேண்டும்.

ஆகவே, சுருக்கமாக ஒரு வார்த்தையில் சொன்னால், மனித வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கண்டு, அவற்றிடையே உள்ள உண்மையையும் ரஸத்தையும் அறிந்து கலைப் பொருளாக மாற்றிக் கலா சிருஷ்டியில் புகுத்தும் உண்மைக் கதைகள் இக்காலத்தில் ஏராளமாக வெளிவர வேண்டும். கலா ரஸனை மிகுந்த அவ்வித உண்மைக் கதைகள் மனித இதயத்தைப் பண்படுத்தி—சமூகத்தின் சாபக்கேடுகளைப் போக்கி—உயர் நிலைக்குக் கொண்டுவரக் கூடியனவாய் இருக்க வேண்டும்.

தற்காலத்தில் வெறுங் கற்பனைக் கதைகளைக் காட்டிலும் உண்மைக் கதைகளுக்குத்தான் மக்களிடையே மதிப்பும் கவர்ச்சியும் அதிகமாய் இருந்து வருகிறது. உண்மை நிகழ்ச்சிகளை யடிப்படையாகக் கொண்ட கதைகளால்தான், மக்களின் உள்ளங்களைப் பண்படுத்த முடியும்—சமூகத்தைச் சீர்திருத்தி யமைக்க முடியும் என்ற உண்மையை அறிஞர்கள் இப்போது அதிகமாக உணரத் தொடங்கி யிருக்கிறார்கள்.

மேனாடுகளில் உண்மைக் கதைகளை வெளியிடுவதற்கென்றே பல பத்திரிகைகள் நடத்தப்பட்டு வருகின்றன. 'True Story Magazine' போன்ற பத்திரிகைகளில் ஆடவரும் மகளிரும் தத்தம் வாழ்க்கையில் நிகழ்ந்த வியக்கத்தக்க நிகழ்ச்சிகளை—ருசிகரமான அனுபவங்களை—எழுதி வருகின்றனர். புத்தக உருவிலும் ஆயிரக் கணக்கான உண்மைக் கதைகள் வந்திருக்கின்றன.

நம் நாட்டிலும் ஒரு சிலர் உண்மைக் கதைகளை எழுதிப் பத்திரிகைகளில் வெளியிட்டு வருகின்றனர். சமீபத்தில் புதிய தமிழ் வாரப் பத்திரிகை யொன்று உண்மைக் கதைகளை வெளியிடுவதில் ஊக்கங் காட்டி வருவது மகிழ்ச்

சிக்குரிய தாகும். ஆனால், உண்மைக் கதைகளை எழுது வது, வெளியிடுவதன் அடிப்படையான நோக்கத்தை நம் நாட்டில் பெரும்பாலார் இன்னுஞ் சரியாக அறியா மையால், இம்முயற்சி வெற்றிகரமாக நடைபெற வில்லை என்று குறிப்பிட வேண்டி யிருக்கிறது. இதற்குக் கார ணம் உண்மைக் கதைகள் எழுதுவோரில் பலர் தாங்கள் எழுதும் கதை படிப்பவர்க்குச் சிறந்த படிப்பினையை உண்டு பண்ணுவதாயிருக்க வேண்டும்; மனித உள்ளத் தைப் பண்படுத்துவதா யிருக்க வேண்டும் என்னும் உய ரிய நோக்கத்தை மனதில் கொள்ளாது, சமூகத்தில் நிக ழும் ரஸாபாஸங்களை யெல்லாம் அப்படியே சித்திரிக்கத் தொடங்கி விடுவதே யாகும். இவ்விதக் கதைகள் கீழ்த்தர மான உணர்ச்சிகளை யெழுப்புவதற்கு ஏதுவா யிருக்கின் றன என்பதை அவர்கள் உணரத் தவறி விடுகின்றனர். மற்றும் சிலர், பகைமை காரணமாகவோ வேறு எக்காரண மாகவோ குறிப்பிட்ட ஒரு சிலருடைய குணாதிசயங்களையும் செயல்களையும், குறிப்பிட்ட சில குடும்பங்களின் இரகசியங் களையும் அப்படியே எழுதி விடுகின்றனர். இது பெருந் தவறு. எக்காரணத்தைக் கொண்டும், தனி மனிதரையோ, குடும்பத்தையோ, சமூகத்தையோ பாதிக்கும் படியாகக் குறிப்பிட்டு எழுதக்கூடா தென்பதை உண்மைக் கதை யெழுதுவோர் முக்கியமாக மனதிற் பதித்தல் வேண்டும்.

*** *** ***

'பான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்!' என்னும் இக் கதை, நம் சமூகத்தில் விதவை மகளிருக்கு இழைக்கப் பட்டுவரும் அநீதிகளை யெடுத்துக் காட்டும் நோக்கத்தோடு எழுதப்பட்ட உண்மைக் கதையாகும். ஆனால், இது நான் மேற்குறித்த இலக்கணங்க ளெல்லாம் பொருந்திய தாய் இருக்கிறதா என்றால், அதைப் பற்றி நான் எது வும் சொல்வதை விட, இதைப் படிக்கும் அறிஞர்கள் அபிப்பிராயங் கூறுவதுதான் முறையாகும். ஆனால், நான்

ஒன்று சொல்வேன். கதை எழுதுவதென்றால், வெறுங் கற்பனைக் கதைகளைவிட, உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் கதைகள் தான் படிப்போர் மனத்தைப் பண்படுத்தக் கூடும் என்று நான் கருதி எழுதிய "யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?" "இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்?" "காதலனா? காதகனா?" "தரும பூஷணம்" "உயிரோவியம்" ஆகிய கதைகளெல்லாம் சகோதர சகோதரிகளால் மனமுவந்து வரவேற்கப்பட்டிருக்கின்றன. ஏன்? நான் உண்மை நிகழ்ச்சிகளைத் தழுவி யெழுதிவரும் மற்றும் பல சிறு கதைகளும் பல்லாயிரக் கணக்கான மக்களால் பாராட்டப்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து நம் மக்கள் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை இலக்கிய மெருகிட்டுச் சித்திரிக்கும் எழுத்துச் சித்திரங்களையே மகிழ்ந்து படிக்கிறார்கள் என்று தெரிகிறதல்லவா!

இக்கதை சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் வெளிவந்தபோது, நம் சமூகத்தில் ஒருவிதப் பரபரப்பை யுண்டு பண்ணியது. சென்னைமா நகரிலுள்ள கனதனவான்கள் சிலர் இக் கதை தத்தம் குடும்பங்களின் வரலாற்றைத் தான் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது என்று தவறான எண்ணங் கொண்டு முணுமுணுக்கலாயினர். இது எப்படியிருக்க முடியும்? ஒரு கதை ஏககாலத்தில் ஏழெட்டுக் குடும்பங்களின் வரலாறாக இருக்க எவ்வாறு சாத்தியப்படும்? இப்படி நினைப்பது பைத்தியக்காரத்தனமல்லவா! கதாநாயகி காமாட்சி போன்று எத்தனை பேர் நம் தமிழ்ச் சமூகத்தில் இல்லை? காமாட்சிபோல் கைம்மைக் கொடுமைகளால் எத்தனை பெண்கள் கஷ்டப்பட்டு வருந்தி வருகின்றனர்? வைதவ்யம் என்னும் விதவைத் தன்மை எவ்வெக் குடும்பத்தில் நிலவியிருக்கிறதோ அங்கெல்லாம் காமாட்சி போன்ற மகளிர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆகவே, காமாட்சியின் சித்திரம், தமிழ்ச் சமூகத்

தில் நிலவிவரும் வைதவ்யத்தின் சித்திரமாகும். தமிழ் நாட்டில் சமய சாஸ்திரத்தின் பெயரால் மூடத்தனமாகக் கடைப் பிடிக்கப் பட்டுவரும் சமூகக் கொடுமைகளில் ஒரு பகுதியையே இக்கதை பிரதிபலித்துக் காட்டுகிறது என் பதை நாளடைவில், குற்றஞ் சாட்டியவர்களும் உணர லாயினர்.

நான் இக்கதையைச் சித்திரிப்பதற்கு மூலகாரணமா யிருந்தவர் மங்கையர்க்கரசி என்னும் பெண்மணியார். அந் நங்கை என் சகோதரி நிலையி லுள்ளவர். அவர் இளமையிலேயே விதவையானவர். அவரை அக்கைம் மைக் கோலத்தில் காணும்போ தெல்லாம் என் இளம் உள்ளம் தீவிரமாகத் துடிதுடிக்கும். அச் சகோதரிபால் கொண்ட ஆன்ம நேயங் காரணமாக உண்டான இவ் விரக்க உணர்ச்சி விரிவடைந்து விதவைக் கோலத்தில் எந்த மங்கையரைக் கண்டாலும் கழிவிரக்கம் ஏற்பட லாயிற்று. இத்துடிப் புணர்ச்சியே நாளடைவில் இக் கதை வடிவமாகப் பரிணமித்தது என்று சொல்ல வேண் டும். மேற்குறித்த சகோதரியின் விமோசனத்தைக் குறித்து நான் கதை எழுதப்போக, தொலையாத விதவை வாழ்க்கை யிருளில் புழுங்கிக் கிடக்கும் தமிழ் நாட்டி லுள்ள விதவைச் சகோதரிகள் அனைவருக்கும் விமோ சனத்தை யுண்டுபண்ண இந்நூல் ஓரளவேனும் தூண் டுதலாக அமைந்ததைக் காண மகிழ்கிறேன். எனது நொந்த உள்ளத்துக்கு இதுவே ஒருவித ஆறுதலாகும்.

சமீபத்தில் படத்தொழிலில் ஈடுபட்டுள்ள எனது நண்பர்கள் சிலர் நான் தீட்டியுள்ள சமூகக் கதைகளை வெள்ளித் திரைக்குக் கொண்டுவர வேண்டு மென்று தீர்மானித்து, என்னிடம் அதுபற்றிப் பேச வந்தனர். "உயிரோவியம்", "யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?" "இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்?" என்ற கதைகளை முதலில் படமாக எடுக்கவேண்டு மென்பது அவர்கள்

ஆவல். இக்கதைகளுக்குரிய கதாபாத்திரங்களுக்கு இன்னின்னாரை நடிக்கச் செய்ய வேண்டும் என்று அவர்கள் ஒருவருக் கொருவர் கலந்து பேசும்போது, காமாட்சி பாத்திரத்துக்கு இன்று தமிழ் நாட்டில் இணையற்று விளங்கும் ஒரு நடிகையை அமர்த்த வேண்டும் என்று குறிப்பிட்டனர். இதைக் கேட்டதும் நான் என்னையே முற்றும் மறந்து, "ஐயோ! அவ்விதம் செய்து விடாதீர்கள்" என்று கூச்சலிட்டேன். நண்பர்கள் திடுக்கிட்டுப் போயினர். சில விநாடிகளுக்குப் பின்னரே என் பைத்தியக்காரச் செயலை யுணர்ந்து வெட்க முற்றேன். என் பதைப்புக்குக் காரண மென்ன வென்றால், நண்பர்கள் குறிப்பிட்ட நடிகை என் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திர மானவர். அவரை வேஷத்தில்கூட விதவைக் கோலத்தில் காண என் மனம் சகிக்கவில்லை. எனவேதான்; அவரை விதவை காமாட்சியாக நடிக்கச் செய்ய வேண்டுமென்றதுமே நான் அலறினேன். இவ்விஷயத்தை இங்கு எதற்காகக் குறிப்பிட்டேன் என்றால் அவ்வளவுதூரம் என் மனம் வைதவ்ய நிலையை வெறுக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்கே யாகும். இவ்வெறுப்பு தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆண் மகனுக்கும் ஏற்பட வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். இந்நூலின் முதற் பதிப்பு எனது இப் பிரார்த்தனையைத் தமிழ் நாட்டாருக்கு அறிவித்தது. இப்போது வெளிவரும் இரண்டாம் பதிப்பு இப் பிரார்த்தனையை நிறைவேற்றிவைக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவரும் சமயத்தில், தமிழ் நாட்டின் தவப் புதல்வரான தமிழ்ப் பேரறிஞர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் மணிவிழா வந்துறுவதால், அப் பெரியார்பால் எனக்குள்ள அன்பை வெளிப் படுத்தும் முறையில் திரு. வி. க. மணிவிழா கழகத்தின் வேண்டுகோட் கிணங்க, திரு. வி. க. மணிவிழா நினைவு வெளியீடாக இந்நூலை வெளியிடுகிறேன்.

"ஜீவோதயம்"
சென்னை.
7-7-43.

அன்பன்:
நாரண—துரைக்கண்ணன்.

நான்முகம்

நமது இந்து சமூகத்தில் பெண்களுக்கு எவ் விஷயத்திலும் பூரண சுதந்திரங் கிடையாது. கல்வி கற்க உரிமையில்லை; கணவன்மாரைத் தாங்களே தேர்ந் தெடுத்துக் கொள்ள உரிமையில்லை; கணவனை யிழந்தால் மறுமணஞ் செய்துகொள்ள உரிமையில்லை. சமூகக் கட்டுத்திட்டங்கள் பெண்களை ஆண்மக்களுக்கு நிரந்தர அடிமைகளாக ஆக்கி வைக்கக் கூடியனவாய் இருக்கின்றன. இவ்வித சமூகக் கொடுமைகளி னின்றும் பெண்களை விடுவிக்க, சமூகச் சீர் திருத்தப் பெரியோர்கள் சிலர் தீவிர முயற்சி யெடுத்துக் கொண்டனர். அதன் பயனாக, பெண்கள் ஒரு சில நன்மைகளை யடைந்தார்க ளென்றாலும், அவர்கள் இன்னும் போதுமான அளவு சுதந்திரத்தை யடையவில்லை யென்றே சொல்ல வேண்டும். மற்ற விஷயங்களில் எப்படி யிருந்தாலும், பெண்கள் விதவைத் தன்மை யென்னுங் கொடிய தளையில் கட்டுண்டு படுந் துயர மிருக்கிறதே, அது சொல்லத்தரமன்று. நம் சமூகத்தில் பாலிய விவாகங்களாலும் மற்றும் பல பொருந்தா மணங்களாலும் விதவைகள் இலட்சக் கணக்கில் பெருகி யிருப்பதை யாவரும் அறிவர். இவர்களில் எத்தனை பெண்கள் தங்கள் குடும்பத்துக்குக் களங்கம் வரக்கூடா தென்ற எண்ணத்தால், இயற்கை யுணர்ச்சியை அடக்கி மனம் புழுங்கி உடல் மெலிந்து இறக்கின்றனர்? எத்தனை மகளிர், சுயநல ஆடவர்களின் சூழ்ச்சி வலையில் சிக்கித் தங்கள் அருங் கற்பை யிழந்து, பின்னர் உற்றார் உறவினரால் துரத்தி யடிக்கப்பட்டு நடுத்தெருவில் நிராதரவாகத் தியங்கி நிற்கின்றனர்! எத்தனை மங்கையர்கள் இரகசியமாகப் பிற ஆடவரைச் சேர்ந்து பிள்ளை பெற்று, தங்கள் கூடா வொழுக்கத்தைப் பிறர் அறியாவாறு மறைக்க, அக் குழந்தைகளைக் கொன்று எறிந்து, அதன் பயனாக, சிறைவாசஞ் செய்கின்றனர்? எத்தனை காரிகைகள் தங்களைக் காப்பாற்றுவார் இன்மையால், பிறருக்கு அடிமையாக

இருந்து வேலை செய்தும், மற்றும் பல இழி தொழில்களைச் செய்தும் துன்புறுகின்றனர்? ஐயகோ! இவைகளை யெல்லாம் நினைந்தால் நெஞ்சம் துடிக்கின்றது. விதவைகளின் இப் பரிதாப நிலைமையை எவரேனுஞ் சிந்தித்துப் பார்க்கின்றனரா?

இறந்த கணவனோடு மனைவியைப் போட்டுக் கொளுத்தும் சதி வழக்கம் மிகக் கொடியதென்று இராஜாராம் மோகன் ராய் சட்டத்தின் மூலமாகத் தடுத்தார். ஆனால் அச் சதி வழக்கத்தினுங் கொடியதாகிய விதவைத் தன்மையை ஒழிக்க, அருள் நெஞ்சங் கொண்டவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் நம் இந்து மக்கள் மனங் கொள்ள வில்லையே! அதற்கென்ன செய்வது! இளமையிலேயே விதவை நிலையை யடைந்தோர் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று சட்டஞ் செய்யப்பட் டிருக்கிறது. இளம் விதவைகளுக்கு மறுமணஞ் செய்துவைக்க விதவா விவாக சபை முதலிய சமூக சீர்திருத்த சங்கங்கள் முயற்சி செய்து வருகின்றன. எனினும் பயனென்ன? பொது மக்கள் பெரும்பாலோரது ஆதரவு இருந்தால் தானே எக் காரியமும் நடைபெறும்? இவ்வித முயற்சிக்குப் பெண்களிலேயே பலர் முரண்பட் டிருக்கிறார்க ளென்றால் அதிகஞ் சொல்லுவானேன்! நமது தமிழ்ச் செல்வியாகிய பண்டிதை அசலாம்பிகை அம்மையார் போன்றவர்கள் தங்கள் ஆயுள் முழுதும் பெண்ணுரிமைக்காகப் போராடி வருபவர்கள். அவர்கள் சொற்பொழிவுகளின் வாயிலாகவே, நம் சமூகத்தில் மகளிர் மிகவும் சிறுமையாக நடத்தப் படுகின்றனர் என்னும் உண்மையை என்போன்றார் அறிய நேர்ந்தது. அத்தகைய அவர்களே, விதவை மாதர்க்கு மறுமணங் கூடாது என்றும், விதவைகள் அனைவரும் நிலதவசியார் போன்று நோன்பு இருக்கவேண்டு மென்றும் கூறுவார்களானால், வேறு சாதாரண மகளிர் நிலையைக் கூறவும் வேண்டுமோ! இந்நிலையில் அரசாங்க சட்டங்களும், சீர்திருத்த முயற்சிகளும் விழலுக் கிறைத்த நீரைப் போன் றல்லவோ பயனற்று ஒழியும்.

ஆகவே, நம் சமூகத்திலுள்ள ஊழல்களேயும், கொடிய பழக்க வழக்கங்களேயும் போக்க வேண்டுமானுல், அவை களின் அவகேடுகளைப் பொதுமக்கள் அனைவரும் உணரும் படி செய்து, அவர்களாகவே அவை தவருனவை என்று அறிந்து ஒதுக்கும்படி செய்யவேண்டும். உலகானுபவமும், மெய் யறிவுமுடைய சீர்திருத்தப் பெரியோர்கள் அதற் கான வழிகளேக் காண்பார்கள் என்று நம்புகிறேன்.

மேற் கூறிய நோக்கத்தைக் கொண்டே அறிவிற் சிறிய யான், நம் சமூகத்திலுள்ள விதவைக் கொடுமையை உரு வகப்படுத்தி, "யான் ஏன் பெண்ணுய்ப் பிறந்தேன்?" என் னுங் கற்பனைக் கதையை 1932-ம் வருடத்தில் "திராவிடன்" என்னும் தினசரிப் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதி வந்தேன். பின்னர், அக்கதை 'தமிழரசு" என்னுஞ் செந் தமிழ் மாதப் பத்திரிகையில் முடிவுற்றது. அதை ஆரம்பத்தி லிருந்தே பல அன்பர்கள் வரவேற்றன ராதலால், அவர்கள் விருப்பப்படி அது இச் சிறு நூல் வடிவில் வெளிவந்திருக் கிறது. இதைத் தமிழ் நாட்டார் அனைவரும் வரவேற்று ஆதரவு காட்டுவார்களென்று எதிர் பார்க்கிறேன்.

பெண்ணுலகுக்குப் பெருஞ் சேவை செய்து வரும் சகோதரி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மையாரும், பண்டிதை அசலாம்பிகை அம்மையாரும் எனது வேண்டுகோட் கிணங் கித் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்ததற்காக அவர் களுக்கு யான் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறேன்.

இந் நூலில் என் அறியாமையால் ஏதேனும் பிழை நேர்ந்திருக்கலாம். அவைகளைப் பெரியோர்கள் பொறுப் பார்களாக.

மைலாப்பூர்,
20-11-34.

இங்ஙனம்,
நாரண-துரைக்கண்ணன்.

சிறப்புரை

சென்னை சாரதா வித்யாலயா தலைவியாரும், சென்னை லேடி வில்லிங்டன் பெண்கள் கலாசாலையில் பல வருடங்கள் தலைமை யாசிரியையா யிருந்தவரும், தற்போது திருப்பாதிரிப் புலியூர் கவர்ன்மெண்டு சகிண்டரி டிரெயினிங் ஸ்கூல் சூபரிண்டெண்டா யிருப்பவருமான சகோதரி ஆர். எஸ். சுப்பு லக்ஷ்மி அம்மாள் பி. ஏ., எல். டி., பின்வருமாறு வரைகிறார்.

"நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?" என்னும் நவீனத்தின்கண், நம் ஜன சமூகத்தினிடை பெண்மக்களுக் குள்ள பெருங் கஷ்டங்கள் எல்லாம் விவரிக்கப்பட் டுள் ளன. கணவனை யிழந்த பெண்களின் கஷ்டதுக்கங்கள் மிகப் பலவாகும். அவற்றை ஆசிரியர் கதாநாயகியின் வாய்ச் சொற்களினாலேயே மிகத் தெளிவாய் எடுத்துக் காட்டியுள்ளார்.

பெண்மக்களின் இத்தகைய கஷ்டங்களுக்குக் காரணங்கள் தான் யாவை? மனித ஜன்மத்தில் மேன்மேலும் அறிவும் விவேகமும் அபிவிருத்தியாகி பரிபவ மடைவ தற்கு வேண்டிய சாதனங்கள் இன்றியமையாதன. இது ஆண் பெண் இருபாலாருக்கும் பொது. ஆகவே, விவேக முண்டாவதற்கு வேண்டிய பற்பல சாதனங்களும், சுற்று வட்டமும் குடும்பங்களில் இல்லாமையே முதற் காரணம்.

இரண்டாவது பெண் மக்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக பிறர்மீது சார்ந்திருக்கவேண்டி யிருக் கிறது. பெற்றோர்கள் உள்ளவரைக்கும் ஒரு மாதிரியாக காலந் தள்ளிவிடலாம். அதன் பிறகு உடன் பிறந்தவர் கள் அவர்களது மனைவிமார் புருஷன்மார்க ளிடத்தி லிருந்து சம்பளமின்றி ஸ்வாதீனமின்றி அவர்களது

குடும்ப ஊழியங்களைச் செய்துகொண்டு, மனைவிருத்திக்கு யாதொரு சாதனமு மின்றி, வாழ்க்கையில் ஒருவித சந்தோஷமு மின்றிக் காலங் கடத்தவேண்டி யிருக்கிறது. ஆகவே, பெண்களுக்குச் சொத்துரிமையும், சுதந்திரமு மில்லாமையே அவர்களது கஷ்டங்களுக்கு மற்றொரு காரணம்.

மூன்றாவதாக, பெண்மக்களுக்கு இளம் வயதிலேயே விவாகம் செய்து உலக சுகம் என்ன என்பது தெரியாத வயதிலேயே புருஷனை யிழக்க நேர்ந்தால், அவர்கள் மறு விவாகமே செய்து கொள்ளக் கூடாது என்னும் வழக்கம். ஆண் பெண் இருபாலாருமே சிறந்த அறிவு விவேகத்துடன் விவாகத்திலேயே இஷ்டமின்றி பிரம்மசரியத்திலேயே ஈடுபட்டிருப்பது மிக மிக உத்தமம். ஒரு முறை விவாகஞ் செய்துகொண்டு அதனால் ஏற்படும் சுக துக்கங்களையெல்லாம் அனுபவித்த பிறகு மனைவியோ புருஷனோ தவறிவிட்டால், திரும்பவும் விவாகஞ் செய்து கொள்வது ஸ்திரீ புருஷர் இருவருக்குமே மத்திமம். ஆயின், இக்கதையில் விவரித்துள்ளபடி புருஷனுக்கு ஒரு விதியும் ஸ்திரீக்கு மற்றொரு விதியுமென்பது அதமம். ஆண் மக்கள் மாத்திரம் எத்தனை முறை வேண்டுமானாலும் எந்த வயதிலும் விவாகம் செய்து கொள்ளலா மென்பதும், பெண்கள் 'பொம்மைக் கலியாணம்' போல் சிறு வயதில் விவாகமான புருஷனை யிழந்து விட்டால் ஆயுள் முழுவதும் உலக சுகத்தையே விரும்பாமல், அதிலேயே ஈடுபட்டிருப்பவர்களின் இடையில் கல்வியறிவும் விரக்தியும் உண்டாவதற்கு வேண்டிய சாதனங்களும் எதுவுமின்றி காலத்தைக் கடத்தவேண்டு மென்பதும் இயற்கை விதிக்கு மாறானது. இவையெல்லாம் ஆண் மக்களால் தங்களுக்கு அனுகூலமாயும், பெண்களுக்குப் பிரதிகூலமாயும் ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாடுகளாகும்.

ஆகவே, நமது கிரகங்கள் அன்பும் அறிவும் நிறைந்த இல்லங்களாய் சிறந்த விவேகம் உண்டாவதற்குச் சாதன மாக ஆண் மக்களும் முக்கியமாய் பெண் மக்களும் நூலா. ராய்ச்சி, பொருளாராய்ச்சி முதலியவற்றைச் செய்யும் சுற்று வட்டங்கள் உள்ள இல்லங்களாய் அமைக்கப்பட வேண்டியது அத்தியாவசியம். இல்லங்களில் பெண் களுக்கு அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய சாதனங்கள் இருந்து விட்டால் அவர்கள் தாங்களும் முன்னேற்ற மடைந்து தம் மக்களையும் நல் வழியில் வளர்த்து தாங்கள் பிறந்த-புகுந்த-குடும்பங்க ளிரண்டுக்கும் நல்ல பெயரைக் கொண்டுவர முடியும். பெண்களுக்குக் கல்வி யறிவு, கேள்வி ஞானம், அநுபவ ஞானம் இவைகள் இல்லாமை யால். ஏற்படக்கூடிய கஷ்டங்கள் பலவும் இந் நூலின்கண் விரிவாக விளக்கப்பட் டிருக்கின்றன. ஆதலின், இப் புத்தகத்தைப் படிக்கும் பெரியோர்கள் இதில் காணப் படும் பல கஷ்டங்களுக்குக் காரணமான பிரச்னைகளை ஆராய்ந்து அவற்றை நிவர்த்திப்பதற்கு வேண்டிய சீர் திருத்தங்களை நன்கு பரிசிலனை செய்வார்களாக.

இதுபோன்றே, ஜனசமூகத்துக்குப் பயன்படக்கூடிய பல நூல்களைச் செய்யும் ஆற்றலையும் அறிவையும் ஆசிரிய ருக்கு ஆண்டவன் அளிப்பாராக.

கடநூர் } 5-11-34 } ஆர். எஸ். சுப்புலட்சுமி.

2

" காந்தி புராணம் " பாடியவரும், எழுத்தாற்றல், சொல் லாற்றல் மிக்குடையவருமான பண்டிதை-அசலாம்பிகை அம்மையார் எழுதுவதாவது:—

திருமிகு துரைக்கண்ணன் என்னும் இளைஞர் 'யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?' என்ற புனைந்துரை நூலொன்று

வரைந்துள்ளார். ஆக்கியோரின் பொதுநல வுணர்ச்சியும், செந்தமிழ்ப் பயிற்சியும் இந் நூலில் நன்கு மிளிர்கின்றன.,

இந்திய நாட்டுக் கைம்மை மாதர்களின் நிலை வருந்தத் தக்கதே. எனினும், ஒழுக்கங் காத்துக் கோடலே உயிரிற் சிறந்த விரதமாக மதித்து, தவ வாழ்வேற்று நடக்கும் தனிச் சிறப்பு, பிற நாடுகளிலும் காண முடியாது. இயற்கையைத் தடுத்து வெற்றி பெறும் உறுதியே மனிதனீர்மை யாகும். இயற்கைக் கடிமையாய் விடுவது விலங்கினீர்மை யாகும். திலகவதியார் போன்ற மனநிலையுடைய பெண்கள் இன்னும் இந்நாட்டில் பலர் உளர் என்பதைத் தயங்காமற் கூறலாம். இளம்பெண்கள் மனநிறை கோணுவதற்கு இளைஞர்களே பெரும்பாலும் காரணம் என்பது காந்தியடிகளின் கொள்கையாகும். பெண்களுக்கு ஒழுக்கத்தை யூட்டக்கூடிய முறையில் நூல்கள் பல வெளி வருமாகில் தற்போதுள்ள ஒழுங்கீனங்களும் குறையுமென்று கருதுகின்றேன். மாசற்ற களங்கமறியாத பேதைப் பெண்கள் மனநிலை, கள்ளக் காதலை விவரிக்கும் நூல்களினால் கூட வழி தவறி விடுகின்றன வென்பது கண்கூடான அநுபவம்.

குழந்தை மணத்தைக் கண்டிப்பது அறமே. தற்காலத்தில் குழந்தை மணம் மறைந்தே விட்டதென்பது அநுபவ முடையார்க்கு விளக்கம்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்னும் முதுமொழியை எதற்கும் எடுத்தாள்வது இயல்பாய் விட்டது. ஆனால் ஆளுவோர் பழையன கழிதலா, கழித்தலா என்றும், புதியன புகுதலா, புகுத்தலா என்றும் சிறிது ஆழ்ந்து சிந்திக்காமல் தவறிழைக்கின்றனர் என்பதை வருந்தத்

தோடும் தெரிவிக்கவேண்டி யிருக்கிறது. இயற்கைத் தெய்வம், காலத்திற் கேற்ற மாறுபாடுகளைத் தரத் தவறுவதில்லை. நாமாக முயற்சித்துக் கழித்தலும் புகுத்துதலும் நீள நின்று பயன்படா தென்பதை இளைஞர் உலகமும் சீர்திருத்த விருப்பர்களும் உணர்தல் வேண்டும் என்பது எனது வேண்டுகோள். இந்நூமத நூல்களே சிற்றின்ப உணர்ச்சியை மலரச் செய்யும் முறையைக் கைக்கொண்டனவன்று. நிவர்த்தி மார்க்கமே அவற்றின் குறிக்கோள். ஆகவே, முன்னூல்களையும் அதன் வழி வந்த முதியோர்களையும் தாக்குவது இக்காலத்தினர் கோரிய நலத்தினை யளிக்கக் கூடியதன்று.

உண்மையாக எதையும் செய்து காட்டுவோர் போற்றப் படுவர். இத்தகைய நூல்களில் செலவிடுங் காலத்தை ஒழுக்கம் வளர்க்கும் துறையில் நூல்கள் புனைவதில் செலவிடுதல் நலம் என்பது என் அவா. இக்கருத்தினை வரவேற்பார் இரார் என்பதும் உணர்வேன். எனினும், உள்ளக் கிடக்கையை ஒளித்துக் கூறுவது மாபன்றாதலின் வரையலாயிற்று.

லக்ஷ்மி விலாசம்,
வடலூர். } பண்டிதை-அசலாம்பிகை.

இக்கதையில் வரும் கதா பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் முற்றும் கற்பனையாகும்.

ஓம் :

யான் ஏன் பெண்ணுய்ப் பிறந்தேன் ?

முதலாவது அதிகாரம்

கடல் அலை வாய்ப்பட்ட காரிகை

உலகம் மாயை, மித்தை, அநித்தியம், பொய் என்றெல்லாம் வேதாந்திகள்—வாய் வேதாந்திகள் கூறுகிருர்கள். ஆனல், நான் அப்படி நினைப்பதில்லை. இப்பிரபஞ்சம் வேதாந்திகள் வருணிப்பதுபோல் மாயையாலானதா யிருக்கலாம்; அநித்தியமானதா யிருக்கலாம். ஆனல் அது பொய்யென்று சொல்வதை யான் மட்டு மல்ல; சிறிது சிந்தித்துப் பார்ப்பவர்கள் யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. என் கண் முதலான புலன்களுக்கு விளங்கித் தோன்றும் உலகத்தை நான் எப்படிப் பொய் யென்பேன்? எனக்குப் பிறப்பிடமாய், வாழ இடந் தந்து, உண்ண உணவுப் பொருள்களை வழங்கி, உடுக்க உடைகளைக் கொடுத்து நிற்கும் உலகை எப்படி இல் பொருள் என்பேன்? பைம்பொழிலாய், மணிபடு மலையாய், மலை இழி அருவியாய், வளைந்து ஓடும் ஆருய், அலையெறி கடலாய், நீலக் கடலினின்றும் எழும் செஞ்ஞாயிருய், வெண்ணில

வைப் பரப்பும் சந்திரனாய், செவ்வானமாய், அவ்வானத்தில் மின்னும் நட்சத்திரங்களாய்க் காட்சி யளிக்கும் இயற்கை தேவியை எவ்விதம் பொய் யென்பேன்?

நான் ஒரு கலைவாணன். இயற்கை யழகை வழிபடும் பித்தன். இயற்கையில் தோய்ந்தும் இயற்கையை மாந்தியும் இயற்கையோடு இயைந்த வாழ்வை விரும்புபவன். இயற்கையின் ஊடே இறைவன் இருப்பதாக என் சித்தாந்தம். இயற்கை யன்னையை வழிபடுவது எல்லாப் பொருள்களையும் இயக்குவிக்கும் இறைவனை வழிபடுவதாகும் என்பது என் நம்பிக்கை. ஆகவே, நான் பிரகிருதியின் சௌந்தரிய லஹரியில் சொக்கிப் போவதில் ஆச்சரியமில்லை. அருணோதயத்தின் அழகையும், இளஞாயிற்றின் எழிலையும், மாலை வெயிலின் மனோகரத்தையும், அந்திப் பொழுதின் அற்புதத்தையும், செவ்வானத்தின் செஞ்சாயலையும், பர்வதங்களின் பசும் போர்வையையும், மலையில் வீசும் மந்த மாருதத்தையும், அலைகளை வீசும் கடலையும், அசைந்தோடும் ஆற்றையும், 'ஓ' வென விழும் நீர் வீழ்ச்சியையும், கதிர்களைத் தாங்காது தலை சாய்ந்திருக்கும் செந்நெல் வயல் வெளியையும், குழந்தைகளின் தளிர் மேனியையும், ஆடவர்க்குள்ள ஆண்மை மிளிரும் கம்பீரத் தோற்றத்தையும், மகளிர்க்குள்ள பெண்மை லளிதத்தையும் கண்டு என் உள்ளம் பரவச மடையும். முல்லை மலர்கள் மொட்டு அவிழ்ந்து முறுவலிப்பதைக் காணும் போது, இயற்கை தேவி தன் முத்தன்ன பற்களைக் காட்டி நகைப்பது போன்ற பிரமை எனக்கு ஏற்படும். மெல்லிய தென்றல் மலர்க் கொத்துகளை அசைத்துவிட்டுச் செல்வதைப் பார்க்கையில், அம் மலர்கள் ஒன்றின்மேல் ஒன்று விழுந்து விளையாடுவது போலவும், இதழ் கொண்டு ஒன்றை யொன்று முத்தமிட்டுத் தழுவிக் கொள்வது போலவும் எனக்குத் தோன்றும்.

அதிகஞ் சொல்வானேன்! இயற்கை யன்னை வழங்கும் நானாவிதக் காட்சிகள் தாம் எனக்கு இலக்கியம், இலக்கணம், கவிதை, காவியம், ஓவியம், சிற்பம் எல்லாம். இயற்கைதான் யான் வணங்கும் இறைவன். இயற்கை எழுப்பும் இனிய கீதம் எனக்குக் கர்ணாமிர்தமான சங்கீதம். மணம் வீசும் மலர்தோறும் பறந்து சென்று அவற்றில் துளிக்கும் தேனை மாந்தி மயங்கும் வண்டுகளின் ரீங்காரமும், பொன்னிற மாலை நேரத்தில் விசித்திர வண்ண இறக்கைகள் வாய்ந்த பறவைகளின் கொஞ்சலும், குழந்தைகளின் மழலை மொழியில் பிறக்கும் தேன் இசையுமே என் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் இன்னிசையாகும்.

இவ்விதம் இயற்கையோடு இயைந்து இனிய வாழ்வு நடத்துவதில் பேரார்வமுடைய யான் துரதிர்ஷ்டவசமாக, நகர வாழ்க்கையை மேற்கொண்டிருந்ததால், முழுநேரத்தையும் என் இச்சைபோல் கழிக்க முடியவில்லை. தமிழ் நாட்டில் நகர வாழ்க்கையென்றால், செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற நகரங்களாயிருந்தாலும், ஒருவிதத்தில் பரவாயில்லை. பாலாறும், காவிரியாறும், கொள்ளிடமும், வையையாறும், தாமிரவருணியாறும், மணற்பாங்கான இடமும், தோப்பும், துரவும், சோலைகளும், காடும் சூழ்ந்திருந்து, என்போன்ற இயற்கைப் பித்தர்களுக்கு ஒருவித ஆறுதலை யளித்து வருவனவா யிருக்கின்றன. சென்னைமா நகரமோ அவ்விதமில்லை. இங்கு கொசுக்கூட்டத்தை யுற்பத்தி பண்ணும் சாக்கடை நீர் ஓடும் கூவம் நதியையும், சேறும், துர்நாற்றமும் நிறைந்த பக்கிங்காம் கால்வாயையும் தவிர, வேறு நதியோ, ஆறோ கிடையாது. செடி கொடி மரங்களும், பூஞ்சோலைகளுமாவது இருக்கின்றனவா என்றால், அவைகளைப் பார்ப்பதும் அருமையாகும். தப்பித் தவறி இருக்கும் சோலைகளும்,

தோட்டங்களும்கூட வெட்டி யெறியப்பட்டுப் புதிய புதிய கட்டிடங்கள் எழும்பி வருகின்றன. ஜன நெருக்கடி மிகுந்த இடங்களுக்கு இடை யிடையே நகர சபையால் நிர் மாணிக்கப்பட்டுள்ள செயற்கை நந்தவனங் (Park) கள் தாம் மக்கள் மாலைக் காலத்தில் பொழுது போக்குவதற் குரிய இடங்களா யிருக்கின்றன. அவையாயினும், பெங்க ளூர், மைசூர், மதுரை முதலிய நகரங்களில் உள்ளவை போன்று கண் கவர் வனப்பு வாய்ந்தவையாகவும், நறுமண மலர்கள் நிறைந்த செடி கொடி மரங்களையுடையனவாகவும் இருக்கின்றனவா வென்றால், அதுவுமில்லை. பெரும்பாலும் இந் நந்தவனங்கள் பாலைவனங்கள் போல், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செடி கொடி மரங்களையுடைய பொட் டல் காடுகளாகவும், பிச்சைக்காரர்களுக்கும் அசுத்தங் களுக்கும் உறைவிடங்களாகவும் இருந்து வருகின்றன. இவ்வளவு தூரம் நகரம் நரகமாக இருந்தாலும், என் போன்று தன்னை வழிபடும் சேய்களுக்கு இயற்கை யன்னை வழங்கிய வரப்பிரசாதம் போல் நகரைச் சார்ந்து நீலக் கடல் இருந்துவருவது தேவேந்திரப் பட்டினம் இதுதான் என்று போற்றுந் தகையதா யிருக்கிறது. கடலைச் சார்ந்து இருப்பதனால் தான், இந் நகரத்துக்குச் சென்னைப்பட்டி னம் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. கடற்கரை சென்னைமா நகரில் அமைந்திருப்பது போல், உலகிலேயே வேறெங்கும் இயற்கையாக அமைந்ததில்லை என்று உலகை வலம் வந்த கனவான்கள் சொல்லுகிறார்கள்.

இக் கடற்கரை யொன்றே என்னை நகர வாழ்க்கையில் ஒருவாறு நிலைக்க வைத்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஜன நெருக்கம் மிகுந்து காணப்படும் நகரத்தில் சஞ்சரிக் கையில் நன்றாக மூச்சுவிடவும் என்றால் முடியாது. இரவு பகல் இருபத்துநாலு மணி நேரத்தில் பெரும் பகுதியை

நான் அங்கே புழுக்கத்தில் கட்டுப்பாட்டில் கஷ்டத்துடன் கழிப்பேன். ஆகவே, நான் எப்பொழுது, பொழுது புலரும்? பொழுது சாயும் என்று காலை மாலையை ஆவலுடன் எதிர் பார்த்திருப்பேன். விடியற்காலையிலும், சாயங்காலத்திலும் நான் கடற்கரைக்குப் போய் உலாவிவிட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அதிலும் மாலைக் காலங்களைவிட, அதி காலைகளில் தான் எனக்கு மகிழ்ச்சி யதிகம். சாயங்காலங்களில் கடற்கரையிலும் ஜனக்கூட்டம் வந்து நிரம்பிவிடும். ஏகாந்தத்தையும் அமைதியையும் நாடுவதற்கு அடையாறு பக்கத்தை நோக்கி வெகுதூரம் செல்ல வேண்டும். அதிகாலையிலோ அப்படியில்லை. கடற்கரை அநேகமாகக் காலியாக இருக்கும். கட்டுமரங்களையும், மீன் பிடிக்கும் செம்படவர்கள் சிலரையுந் தவிர, வேறு யாரையுங் காண முடியாது. சூரியோதய சமயத்தில் தான் சீமான்கள் சிலர் டாக்டர்கள் யோசனைப்படி கடற்காற்று வாங்க, காரிலேனும் கால் நடையாகவேனும் வருவார்கள். ஆகலால், நான் அருணோதயத்துக்கு முன்பே கடற்கரைக்குப் போய் விடுவேன். சூரியன் உதயமாவது தவறினாலும் நான் கடற்கரை போவது தவறாது. உஷத்கால காற்றே மிக ரம்மியமானது. அதிலும் கடற்காற்று அச்சமயத்தில் குளுகுளுவென விசுவதால் ஏற்படும் இன்பத்தை அநுபவித்து அறிந்தவர்கள் தான் உணர முடியும். மெள்ள மெள்ள கிழக்கு வெளுத்து அருணோதயமான பின்னர், சூரியன் கடலிலிருந்து உதயமாய்க் கொண்டிருக்குங் காட்சி கண்கொள்ளாக் காட்சியா யிருக்கும். காலைக் கதிரவனின் கவின் மிகும் எழுச்சியைக் காண்பவர் யாருக்குத்தான் கவிதா சக்தியும், கற்பனைத்திறனும் ஏற்படாம லிருக்கும்? நீலவானம் ஒன்றுதான்; செங்கதிரோன் ஒருவன்தான்; ஆனால் காலை உதயத்தின்போது வானத்திரையில் நடக்கும்

ஜாலங்களும், சூரியனின் செங்கதிர்கள் தீட்டும் வண்ண விசித்திரங்களும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவிதமாக இருக்கும். கவிஞர்கள் பலர் சூரியோதயத்தைப் பலபட வருணித்துத்தா னிருக்கிறார்கள். ஆனால், என்னைப்போல் இளஞாயிற்றின் எழுதரிய எழிலைக் கண்டு களித்தவர்கள் வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என்று பெருமிதமாகக் கூடச் சொல்லலாம். அவ்வளவுதூரம், நான் இளஞ் சூரியனின் சோபையில் ஈடுபட்டிருந்தேன். இரவின் சேனைகளான இருட்கூட்டங்கள் குவிந்து மழுங்கி அலைகடல் சென்று அடங்குப்படி சூரியன் உருக்கித் திரட்டிய பசும் பொற் கோளம் போலத் தளதளவெனக் கீழ்த்திசையில் தோன்றுவதைக் காணும் போது, பேரழகே ஒருருவான மங்கை யொருத்தி தான் மேற் போர்த்திருந்த நீலப்பட்டு ஆடையினைச் சிறிது சிறிதாக நீக்கிப் பின் கீழே சுருட்டி எறிந்துவிட்டு உறக்கத்தை ஒழித்து தன் நளினமுகங் காட்டி எழுவதுபோல எனக்குப் பிரமை யேற்படும். இளஞாயிற்றின் எழுச்சியால் குணதிசையின் பரப்பெல்லாம் பொன் உரைத்த கல்லைப்போல் பொலிந்து திகழும். சூரியகிரணங்கள் உண்டுபண்ணும் பசுமை, பொன்மை, நீலம், சிவப்பு, வெண்மை முதலான வண்ண பேதங்கள், உலோகங்கள் உருகி ஓடுகின்ற நிலம் போல வானவெங்கணும் பல வண்ணமாய் விரிந்து விளங்கும். இங்ஙனம் உலக மங்கை நகைத்தாற் போலப் புதுமையுற்றுத் தோன்றும் விடியற் கால அழகைக் கண்டு களிக்க யார்தான் விரும்பமாட்டார்கள்? இவ்விதம் காணப்படும் காலை யழகினைக் கண்டு வியந்த வண்ணம் மீன் வலையோடு கட்டுமரத்தில் அமர்ந்து வரும் செம்படவனின் நற்பேற்றை நான் பெறவில்லையே எனச் சில சமயம் நினைப்ப துண்டு.

ஒரு நாள் சேவல் கூவியது என்று நினைத்துக்கொண்டு உறக்கத்தினின்றும் விழித்துவிட்டேன். வானத்தை அண்ணாந்து பார்த்தபோது விடிவெள்ளி கூட இன்னும் மேற்கே சாயவில்லை என்று அறிந்தேன். ஆயினும், மீண்டும் படுக்கையில் கிடந்து உறங்க மனம் வரவில்லை. எனவே, நான் எழுந்து காலைக்கடன்களை முறையே முடித்துக்கொண்டு, ஏதாயினும் படிக்கலாம்; அல்லது எழுதலாம் என்று எண்ணி, வாசிப்பு அறைக்குச் சென்று, விளக்கைப் பொருத்திவிட்டு மேஜையின்முன் நாற்காலியில் உட்கார்ந்தேன். ஆனால், என் மனம் படிப்பிலோ எழுத்திலோ ஓடவில்லை. விடியற்காலையில் தூய பளிங்கு போலவும் அமைதியாகவும் இருக்கும் என் உள்ளம் அன்று என்னவோ காரணமின்றிப் பரபரப்புடன் இருந்தது. ஆகவே, நான் மன அமைதியையும் மகிழ்ச்சியையும் நாடி, பொழுது புலராவிட்டாலும், கடற்கரைக்குப் போகலானேன்.

என் இல்லத்திலிருந்து கடற்கரை அரை மைல் தூரங்கூட இருக்காது; ஆகையால், நான் மிக மெதுவாய் நடந்தும் கால்மணி நேரத்துக்குள் அங்கு போய் விட்டேன். நான் ஐஸ் ஹவுஸ் கட்டிடத்துக்கு எதிரேயுள்ள பிளாட்பாரத்தில் அடியெடுத்து வைத்தபோது சாந்தோம் மாதா கோவில் மணி நான்கு அடித்தது. நான் பிளாட்பாரத்தின் மீதே தெற்கு நோக்கி நடக்கலானேன். உஷத் கால காற்று ஜிலு ஜிலுவென வீசி என்னைப் புளகாங்கிதப்படுத்தியது. பிளாட்பாரத்தை யடுத்தாற் போல் வளர்ந்திருந்த சூரிய காந்தி பூக்களும், மற்றும் பல மலர்களும் காற்றினால் ஆடுவது தங்கள் இதழ்கள் விரிய என்னைப் பார்த்து நகை முகங் காட்டி வரவேற்பது போலிருந்தது. இடையிடையே இருந்த வளைவுகளில் படர்ந்திருந்த கொடிகள் தலை நீட்டித் தொங்குவது என்னைத் தங்கள் தளிர் கரங்களால் ஆர்வத்

தோடு கட்டியணைக்க வருவதுபோ லிருந்தது. அச்செடி கொடிகளில் படர்ந்திருந்த பனிப்படலம் நீர் துளிப்பது, 'நகரச் சேற்றில் நாளெல்லாம் அழுந்திப் புரண்டு நாசமாய்ப் போனாயே' என்று என்னை நோக்கி இயற்கை யன்னை கண்ணீர் வடிப்பதுபோ லிருந்தது.

நான் மேரி ராணி கலாசாலை கட்டிடத்துக்கு எதிரே வந்ததும், திரும்பி மணற்பரப்பை நோக்கி நடந்தேன். கணக்கிட வியலாத மணல் துகளில் கலந்திருந்த பரற்கற்கள் அவ்விருளிலும் மின்னுவது, காணமற் போன தங்கள் குழவி மீண்டும் தங்க ளிடையே வந்து சேர்ந்ததைக் கண்டு மகிழ்வது போலிருந்தது.

நான் மணற்பரப்பில் அடியெடுத்து வைத்து நடந்த போது அருணோதயங்கூட ஆகவில்லை. ஆகாயத்தில் மேகங்கள் மட்டும் சஞ்சரித்துக்கொண் டிருந்தன. எப்படியாவது சீக்கிரம் பொழுது விடிந்துவிடக் கூடாதா? என்ற எண்ணத்தோடு நான் வானத்தையும் நட்சத்திரங்களையும் நோக்கினேன். சில விநாடிகளுக் கெல்லாம் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாய் மறையலாயின. கடலின் அலைகள் மட்டும் ஒன்றே டொன்று மோதி முழங்கிக்கொண் டிருந்தன. இயற்கையின் அந்த நிரந்தரமான முழக்கத்திலுங்கூட ஒரு பேரமைதி நிலவி யிருந்தது. முன்னால் வெண்ணுரைகளைத் தள்ளிக்கொண்டு வரும் கடல் அலைகளின் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு என் உள்ளம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

இந் நிலையில் சிறிது சிறிதாகக் கிழக்கு வெளுக்கத் தொடங்கியது. சேவல் ஒன்று எங்கிருந்தோ கூவியது. 'ஓ' வென இனிய ஒலிசெய்து கொந்தளிக்கும் பரந்த கடல் வெளியைப் பார்த்து நான் அதன் அழகை ஆராய்ந்துகொண் டிருந்தேன். நீல நெடுங் கடலோடு பரந்த விசும்பு கட்டி



......அவள் முன்னையினும் வேகமாக அடியெடுத்து வைத்து ஒன்றோடொன்று மோதிவரும் அலைகளை லட்சியம் செய்யாமல் செல்லலானாள்.

—பக்கம் 9.

யணைத்துக் கொண்டிருக்கும் காட்சி என்னைக் களி கொள்ளச் செய்தது. இச்சமயத்தில் நான் நின்ற இடத்துக்கு வலப்புறத்தில் சிறிது தூரத்தில் யாரோ ஒரு மனிதர் கடல் நீரை நோக்கித் தயங்கிச் சென்றுகொண் டிருந்தது தற்செயலாக என் பார்வை விழுந்தது. சிறிது உற்றுக் கவனித்துப் பார்த்ததில் அது ஒரு பெண் என்று தெரிந்தது. கிழக்கு வெளுக்கும் சமயத்தில் கீழ்வானத்தருகில் ஏக்கத்துடன் நின்றிருந்த அவளைக் கண்டு என் உள்ளம் ஒரு கணம் துடித்தது. 'அவள் ஏன் இந்நேரத்தில் இங்கு வர வேண்டும்? கடலை இப்படிப் பார்க்கவேண்டும்? கடல் நீரில் தயங்கித் தயங்கி அடியெடுத்து வைக்கவேண்டும்?' முதலில் எனக்கு விஷயம் புரியவில்லை. ஆகவே, அவள் செயலை நான் நின்ற இடத்திலிருந்தே கவனித்துக்கொண் டிருந்தேன். அவளது அப்போதைய தோற்றமும் செய்கையும் எனக்கு வியப்பை யளிப்பனவாக இருந்தன. அவளுடைய முகத்தை என்னால் பார்க்க வியலவில்லை. ஒரு வேளை அவள் பைத்தியக்காரியா யிருக்கலாமோ எனக் கருதினேன். அந்த உஷத்கால காற்றில் அவளது தளிர் மேனி ஆடிக்கொண்டிருந்தது. அவளது அதரங்கள் என்னவோ முணு முணுத்துக்கொண் டிருப்பது அவற்றின் அசைவி லிருந்து தெரிந்தது.

அவள் கொஞ்சங் கொஞ்சமாகக் கடல் நீரை நோக்கி முன்னே நகரலானாள். எனவே, நான் அவளுக்குத் தெரியாமல் அவள் பின்னே மெள்ள போகலானேன். திடீரென்று கடல் அலை யொன்று மிக வேகமாகப் புரண்டோடி வந்து மேல் எழும்பி அவளை விழுங்கி விடுவதுபோல் வந்தது. ஆனால், அவள் அதற்கு அஞ்சிப் பின் வாங்கவேண்டுமே? அதுதானில்லை. அவள் முன்னையினும் வேகமாக அடியெடுத்து வைத்து ஒன்றுடொன்று மோதி வரும் அலைகளை

லட்சியஞ் செய்யாமல் செல்லலானாள். இப்போது அலைகள் திரண்டு வந்து அவளுடைய பார்பிலே மோதின. கடலலைகள் அவளை முன்னோக்கி வந்து வரவேற்றுத் தழுவி அளவளாவுவது போல் காணப்பட்டது. அவள் நீலக்கடலை நோக்கி ஏதோ வாய் விட்டுக் கூறுவதுபோ லிருந்தது. இதே சமயத்தில் ஒரு பெரிய அலை திரும்பி வந்து அவளை அப்படியே விழுங்கியது. இதற்குமேல் என்னால் பார்த்துக் கொண் டிருக்க முடியவில்லை. என்னை யறியாமலே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தேன்.

அலைக் கரங்கள் அவளை அரவணைத்துத் தாங்கிக் கொண்டு விரைவாகப் போய்க்கொண் டிருந்தன. நான் கைகளை இப்படியும் அப்படியுமாக அலைத்து, அவள் கடலின் அழத்தில் மூழ்கடிக்கப்படுவதற்குமுன் கைப்பற்ற விரைவாக நீந்தினேன். சிறிதுநேரம் எனக்கும் அலைகளுக்கும் இடையே பெரும் போராட்டம் நடந்தது. அலைகள் அவளைக் கடலினுள் இழுத்துச் செல்ல, முன் சென்று நான் மறித்து அவைகளினின்றும் மீட்டுக் கரைக்குக் கொண்டு வர முயல, இம் முயற்சியில், அவ் வலைகள் அவளுடன் என்னையும் கட லரசிக்குப் பலியிடத் துணிந்தன. ஆனால், நான் எனக்கு ஏற்படக்கூடிய விபத்தையும் பொருட்படுத்தாது எப்படியாயினும் அவளைக் காப்பாற்ற வேண்டும் என்று தீவிரமாக முயன்றதன் பயனாக, கடைசியில் நானே வெற்றி பெற்றேன். அதிகம் வளர்த்துவானேன்! நான் அவளை மிகச் சிரமத்தின்மீது கரைக்குக் கொண்டு வந்தேன்.

இதற்குள் கீழ் வானத்தில் செஞ்ஞாயிறு உதயமாய் விட்டான். முதலில் நான் அவளை மணலில் கிடத்திவிட்டு என்னைச் சிரம பரிகாரஞ் செய்து ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டேன். பின்னர், நான் உயிரற்ற ஜடம் போல்

அசைவற்றுக் கிடக்கும் அவள் அருகு சென்று உயிர்ப்பும் இதயத் துடிப்பும் இருக்கின்றனவா என்று பார்த்து மன திருப்தி யடைந்தேன். அதன்பின் நான் அவளது மூக்கின் வழியாகவும் வாய் வழியாகவும் உட்சென்றிருந்த கடல் நீரை வெளியேற்றுவதற்காக வேண்டி, அவளைத் தூக்கித் தலை கீழாகச் சுழற்றலானேன். இவ்விதஞ் செய்ததன் பயனாக, கடலில் மூழ்கடிக்கப்பட்டதன் காரணமாக அவளது தேகத்தினுள் சென்றிருந்த நீரெல்லாம் வெளியே வடிந்தது. எனவே, மீண்டும் அவளைத் தரையில் படுக்க வைத்து மூர்ச்சை தெளிவிக்கப் பலவிதமான சைத்தியோபசாரங்கள் செய்யலானேன். மூக்கின் வழியாக மூச்சு மட்டும் மெள்ள வந்துகொண்டிருந்ததே யொழிய, அவள் இனி விழிக்காத உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவள் போல் காணப்பட்டாள். உலகத்தின் பொறுத்தற் கரிய துன்பங்களினின்றும் நீங்கிச் சாந்தி நிலையை யடைந்துவிட்டாளோ என்று என் மனம் ஒரு கணம் ஐயுற்றது. ஆனால், அவளது மூடிய கண்கள் அடுத்த விநாடி திறந்துவிடுமோ என்று எண்ணத்தக்க விதமாக இருந்தன. ‘அவள் யார் பெற்ற பெண்ணோ? அவளுக்கு என்ன துன்பமோ, ஏதோ? எவ்வளவு மனத்துயர மில்லாமல் அவள் கடலில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்திருப்பாள்?’ என்று நான் அவள் நிலை குறித்துப் பலபல எண்ணினேன். என்னை யறியாமல் என் கண்களில் நீர் துளித்தது.

வெகு நேரத்துக்குப் பிறகுதான் அவளது உருவத்தை நான் கண்கொண்டு கவனித்தேன். அவள் மங்கைப் பருவத்தினள். இருபத்தைந்து வயதுக்கு மேலிருக்கும். சாதாரண அழகும், மாநிறமும் உடையவளா யிருந்தாள். அவள் உடுத்தியிருந்த உடைகளையும், அணிந்திருந்த ஆபரணங்களையும் பார்த்தபோது, அவள் ஒரு மத்தியதரமான குடும்பத்

தைச் சேர்ந்தவளா யிருக்கவேண்டும் என்று ஊகித்தேன். எடுத்த எடுப்பிலேயே நான் அறிய முடியாதவாறு அவளிடம் ஏதோ ஒரு குறை இருப்பதுபோல் தோன்றியது. அவள் கன்னிப் பெண்ணா? அமங்கலியா? என்று என்னால் அறிய முடியவில்லை. அவள் சுமங்கலி யல்ல என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது.

இளஞ்சூரியன் வேகமாக மேலே வந்துகொண் டிருந்தான். கடலிலிருந்து செம்படவர் சிலர் கட்டு மரங்களைத் தள்ளிக்கொண்டு கரை நோக்கி வந்துகொண்டிருந்தனர். இன்னுங் கொஞ்ச நேரத்தில் அவர்களை வரவேற்க, செம்படவப் பெண்களும் மற்றவர்களும் வந்து கூடிவிடுவார்கள். அத்துடன், காலைக் கடற் காற்றில் உலவும் பழக்கமுடைய கனவான்களும், மணலில் உடற் பயிற்சியும் ஓட்டப் பழக்கமும் செய்யும் பயில்வான்களும் இளைஞர்களும் வரும் நேரமுமாயிற்று. அவ்விதம் ஜனநாட்டம் ஏற்படுவதற்குமுன் அவளை மூர்ச்சை தெளிவித்து விஷயத்தை வினவி அவள் இருப்பிடம் சேர்த்துவிட வேண்டும். மற்றவர்களுக்கு இவ் விஷயம் தெரிந்தால் அப்பெண்ணுக்குப் பாதகமும் நேரலாம். தற்கொலை செய்துகொள்ள முயல்வது தற்கால அரசாங்கச் சட்டப்படிப் பெருங் குற்ற மன்றோ! நான் அவளைக் காப்பாற்றினேன் என்றால், 'எப்படிக் காப்பாற்றினாய்? அந்நேரத்துக்குக் கடற்கரைக்கு நீ ஏன் வந்தாய்? அவளுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? அவளை இதற்கு முன் தெரியுமா?' என்றெல்லாம் அநாவசியமான கேள்விகள் கேட்கப்படும். இதற்கெல்லாம் பதில் சொல்வதற்குள் போதுமென்றாய்விடும். ஆகவேதான், நான் துடி துடிக்கலானேன்.

இந்நிலையில், நாலைந்து இளம் பெண்மணிகள் அவ்வழியாக வந்தார்கள். அவர்கள் மேரி ராணி கலாசாலை ஹாஸ்

டலில் வசிக்கும் மாணவிகள். அவர்கள் வழக்கமாக கடற் கரையில் உலாவ வருபவர்கள்; ஆதலால், அவர்களில் சிலரை எனக்குத் தெரியும். நான் யாரோ ஒரு பெண்ணை மூர்ச்சை தெளிவிக்க முயன்றுகொண் டிருப்பதைக் கண்டு அவர்கள் திடுக்கிட்டு நின்றார்கள். இரு மகளிர் என் அருகு வந்து மூர்ச்சித்திருக்கும் பெண்ணைக் குனிந்து பார்த்த வாறே நடந்த தென்ன என்று வினவினார்கள். நான் நடந்த நிகழ்ச்சியை இரண்டொரு வார்த்தைகளில் சுருக்க மாக அவர்களுக்கு விவரித்தேன். அத்துடன், அவளை ஜனங்கள் கூடுவதற்குமுன் அவ்விடத்திலிருந்தும் அப்புறப் படுத்திவிட வேண்டுமென்ற என் துடிப்பையுங் குறிப்பாக உணர்த்தினேன். அவர்களுள் ஒரு மங்கை சமயோசித புத்தியுடன் நடந்து எனக்குச் சகாயஞ் செய்தாள். தன் சிநேகிதை யொருத்தியை அவள் எங்கோ அனுப்பினாள். சில நிமிடங்களுக் கெல்லாம் அப்பெண் திரும்பி வந்து அவளிடம் ஏதோ சொன்னாள். உடனே, இவள் என்னை நோக்கி, "ரிக்ஷா வண்டி வந்திருக்கிறது. இவள் மூர்ச்சை தெளியும் வரை காத்திருப்பதைவிட, இவளை வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டால், அப்புறம் செய்ய வேண்டியதைச் செய்யலாம்" என்று கூறினாள்.

நான் அவளது சமயோசித புத்தியை வியந்து நன்றி தெரிவித்தேன். பின், அம் மங்கையர் மூர்ச்சித்திருக்கும் பெண்ணை வண்டிக்குத் தூக்கிக் கொண்டுவர முன் வந்த னர். அவர்கள் ஒன்றும் சிரமப்படவேண்டாமென்று கூறி, நானே அவளைத் தூக்கிக் கொண்டு போய் வண்டியில் கிடத்தினேன். ஆனால், அவளை எங்கு கொண்டு போவது என்று தெரியாது ஒரு கணம் திகைத்தேன். இத் தயக் கத்தை யறிந்த மேற்படி மாணவி, "நீங்கள் ஒன்றும் யோசிக்க வேண்டாம். உங்கள் வீட்டுக்கே கொண்டு

செல்லுங்கள். அநேகமாக இன்னும் சிறிது நேரத்தில் இந்த அம்மாள் மூர்ச்சை தெளியலாம். அப்படி யில்லை யானால், எனக்கு உடனே தகவல் தெரிவியுங்கள். எனக் குத் தெரிந்த லேடி டாக்டர் ஒருவர் இருக்கிறார். அவரை அழைத்து வருகிறேன்; ஜீவாபிமானத்துடன் சேவை புரி யும் உங்களுக்கு யாதொரு அபவாதமும் ஆபத்தும் வராது. எல்லோரும் உதவி புரிவார்கள். உங்கள் வீட்டு விலா சத்தை மட்டும் எனக்குத் தெரிவித்து விட்டுச் செல்லுங் கள். என் பெயர் ரஞ்சனி; பி. ஏ., ஸீனியர் வகுப்பில் வாசிக்கிறேன். ஹாஸ்டல் ரூம் நெம்பர் 8. போனில் கூப் பிட்டாலும் எனக்குத் தகவல் தெரிவிப்பார்கள்" என்று சாதுர்யமாகக் கூறினாள்.

நான் தைரிய முற்று, அவளிடம் என் பெயரையும் வீட்டு விலாசத்தையும் தெரிவித்தேன். இதற்குள் அவள், "இல்லை; நான் வேண்டுமானால் உங்களுக்கு உதவியாக வீட்டுவரை வரட்டுமா?" என்று கேட்டாள்.

"உங்களுக்கு அவ்வளவு சிரமம் வேண்டாம். நானே பார்த்துக் கொள்ளுகிறேன். உங்கள் உதவி வேண்டும் போது நீங்கள் சொல்லியபடி உங்களுக்குத் தகவல் தெரி விக்கிறேன். அப்போது வந்தால் போதும்" என்று நான் கூறியவாறு மாணவிகள் அனைவருக்கும் வந்தனஞ் செலுத்திவிட்டு ரிக்ஷாவில் ஏறலானேன். உடனே ரிக் ஷாக்காரன் என் வீடு இருக்கும் இடத்தைக் கேட்டு விட்டு வண்டியை இழுத்துக்கொண்டு ஓடலானான்.

பத்து நிமிஷத்துக்கெல்லாம் ரிக்ஷா என் வீட்டை யடைந்தது. நான் கித்தான் திரையை நீக்கிவிட்டு அப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு வீட்டினுள் நுழைந்தேன். என் தாயாரும் மற்றவர்களும், "என்ன! என்ன!! யார்

இது?" என்று கேட்டுக்கொண்டே ஓடிவந்தனர். நான் என் அறைக் கதவைத் திறக்கும்படிச் சொல்லி, அவளை அங்குள்ள கட்டிலின் மீது படுக்க வைத்தேன். பின்னர், நான் என் தாயாருக்கு நடந்ததைச் சொல்லவே, அவளும் மற்றவர்களும் மிகவும் துடிதுடித்துப் போயினர். பின் அப் பெண் பழையபடி உணர்வு பெறுவதற்கு ஆவன செய்ய லாயினர்.

நான் வெளியே சென்று ரிக்ஷாகாரனுக்குக் கூலி கொடுத்து விட்டு வருவதற்குள், என் தாயாரும் மற்ற மங்கையரும் அப் பெண்ணின் ஈர உடையைக் களைந்து விட்டு, வேறு ஆடைகளை உடுத்தி விட்டனர். அடுத்தபடி, அவள் உடம்பில் சூடுண்டாகி உணர்வு பெறுவதற்காகக் கோதுமை தவிடை வறுத்துக்கொண்டு வந்து ஒத்தடங் கொடுத்தனர். உள்ளுக்குச் சூடாகக் காப்பியைப் புகட்டினர். நான் அப் பெண்மணியின் முகமாறுதலைக் கவனித்தவாறு அங்கேயே அமர்ந்திருந்தேன். இரத்த ஓட்டம் ஏற்படுவதற்காக ஒரு மாது அம் மங்கையின் உடம்பைப் பிடித்து விட்டுக்கொண்டிருந்தனள்.

இவ்விதம் பல விதமான சிகிச்சைகளும் சைத்தியோபசாரங்களும் செய்து வந்ததன் பயனாக, வெகு நேரத்துக்குப் பின் அப் பெண் சிறிது சிறிதாக மூர்ச்சை தெளியலானாள். அவள் மெள்ள கண்களைத் திறந்து மருள மருளப் பார்க்கலாயினாள். சில விநாடிகள் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, "ஐயோ! நான் எங்கு இருக்கிறேன்?" என்று பீதியோடு மெள்ளக் கேட்கலானாள்.

"ஏனம்மா! சரியான—பத்திரமான இடத்தில் தான் இருக்கிறாய்? நீ ஒன்றும் பயப்படாதே!" என்று என்

அன்னையார் கூறி, "குழந்தாய்! உனக்கு உடம்பு இப்போது எப்படியிருக்கிறது?" என்று பரிவாகக் கேட்டார்.

"என் உடம்புக்கென்ன?" என்று ஆச்சரியத்தோடு கேட்டு, கைகளால் தன் உடம்பைத் தடவிப் பார்த்துக் கொண்டே, "நான் உயிரோடு இருக்கிறேனா? செத்துக் கிடக்கிறேனா?" என வினவினாள்.

"ஏனம்மா, உனக்கு இந்தச் சந்தேகம்?—நீ இறந்திருந்தால் எங்களைப் பார்க்க முடியுமா? பேச முடியுமா?"

"இல்லை........; நான் கடலில் விழுந்து விட்டேனே! எப்படி........" என்று இழுத்தாள்.

உடனே நான் அவளை இன்னும் மயக்கத்தில் விட்டு வைக்கக் கூடாதென்று கருதிக் கடலில் விழுந்த அவளைக் காப்பாற்றிக் கொண்டு வந்த விவரத்தைச் சுருக்கமாகச் சொன்னேன்.

இதற்குள் என் அன்னையார், "ஆமாம்; குழந்தாய்! நீ ஏன் சமுத்திரத்தில் விழுந்து உயிரைப் போக்கிக்கொள்ள முயன்றாய்? தற்கொலை மகா பாவமல்லவா? நீ இவ்வளவு இளம் வயதில் இவ்வுலக வாழ்வை வெறுக்கும்படியாக, என்ன அவ்வளவு கஷ்டம் உனக்கு ஏற்பட்டது?" என்று அநுதாபத்தோடு கேட்டார்.

"அதை ஏன் கேட்கிறீர்கள், அம்மா?..................." என்று கூறிக்கொண்டு வருகையில், யாரோ உறவினர்கள் சிலர் வரவே, அவர்களை வரவேற்று உபசரிக்க என் தாயார் போய் விட்டார்.

நான் பச்சாதாபத்தோடு அம் மங்கையை நோக்கினேன். அப்போதுதான் அவள் ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் பரபரப்பாக எழுந்து உட்கார முயன்றாள்.

நான் கையை அமர்த்தி, "உடம்பை அலட்டிக் கொள்ளாதே, அம்மா! நீ ஒன்றும் நாணப்பட வேண்டாம். என்னை உன்னுடன் பிறந்த சகோதரன் என்று நினைத்துக் கொள்..................." என்று கூறினேன்.

இரண்டாவது அதிகாரம்

" பெண் பிறந்தார் யான் பட்ட பெருந்துயரம் யார் பட்டார்?"

அவள் என்னைக் கூர்ந்து பார்த்துவிட்டு, " என்னை ஏன் நீங்கள் காப்பாற்றினீர்கள்?...........ஐயோ! என் விஷயத்தில் நீங்கள் வீண் சிரமமல்லவா எடுத்துக் கொண்டீர்கள்!" என்று கண்கலங்கச் சொன்னாள்.

"என்ன அம்மா, அப்படிச் சொல்லுகிறாய்?........"

" பின் என்ன? நான் இவ்வுலகில் இருக்க—மற்ற மக்களைப் போல் நாலு பேரிடையே வாழ—அருகதையற்றவள் — உரிமை யில்லாதவள்—என்று தானே உயிரைத் துறக்கத் துணிந்தேன்................"

" இவ்வித முடிவுக்கு வரவேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? அம்மா, உன் உயிர் மீதும் இவ்வுலகின் மீதும் இவ்வளவு தூரம் விரக்தி கொள்ளும்படியாக உனக்கு என்ன அப்படிக் கஷ்டம் ஏற்பட்டது?—உனக்குப் பெற்றோர் உற்றார் இல்லையா? கணவன்................?"

அவள் என்னைப் பார்த்த பார்வை என்னை மேலே பேச வொட்டாது தடுத்து விட்டது. சில விநாடிகளுக்கு முன்னிருந்த நிலையி லிருந்து அவளது முகம் பெருமாறுதல் உற்றது. அடுத்த கணம் அவள் கண்களி லிருந்து கார்

காலத்தில் காற்றடிக்கையில் மலர்களினின்றும் நீர் சொரிவதுபோல நீர் 'பொல பொல' வெனக் கொட்டியது.

நான் துணுக்குற்றவனாய், "அம்மா, என் வார்த்தைகள் உன் மனதைப் புண்படுத்தி விட்டனவா? என்ன!—ஐயோ! அப்படி நேருமென்று தெரிந்தால் நான் ஒன்றுங் கேட்டிருக்க மாட்டேனே!—உன் மன விரக்திக்கும் துயரத்திற்கும் உரிய காரண மென்ன என்று தெரிந்தால், என்னால் முடிந்தவரை அத்துன்பத்தை நீக்க முயலலாம் என்ற பரிவுணர்ச்சியால் கேட்டேனே யொழிய, உன் மனத்துயரைக் கிளறிவிட வேண்டுமென்ற எண்ணம் எனக்குச் சிறிதுங் கிடையாது......................" என்று சமாதானங் கூறினேன்.

உடனே அவள் ஒரு பயங்கரச் சிரிப்பு சிரித்து, "என் துன்பத்தைப் போக்க முயலப் போகிறீர்களா? நீங்களா? பேஷ்!—என்னையும் உங்களையும் மற்றும் இவ்வுலகத்தில் வாழும் சகல ஜீவராசிகளையும் படைத்த ஆண்டவனாலேயே என் துன்பத்தைத் துடைக்க முடியவில்லை யென்றால், கேவலம் என்னைப் போன்றே உலகத் துன்பங்களில் உழன்று வரும் மனித இனத்தைச் சேர்ந்த உங்களாலா முடியப் போகிறது? 'வீழ்வார்க்கு வீழ்வார் துணையாக முடியுமா?' ஆகவே, இதெல்லாம் ஒருவருக்கொருவர் மன ஆறுதலுக்காக உபசாரமாகக் கூறிக்கொள்ளும் வார்த்தைகள் என்றே நான் மதிக்கிறேன்................" என்று கடூரமான குரலில் கூறினாள்.

நான் அயர்ந்து அப்படியே நின்று விட்டேன். அவள் மீண்டும், "ஐய, கடலில் விழுந்த என் உயிரைக் கருணையோடு காப்பாற்றிய உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டியதிருக்க, அதற்குப் பதிலாக, நான் உதாசீன

மாகப் பேசியதற்காக என்னை மன்னிக்கவும். என் உள்ளம் அவ்வளவு தூரம் நொந்து பட்டிருக்கிறது. உலகத் தொல்லை களில் நான் மிகவும் அடிப்பட்டு தளர்ந்துபோ யிருக்கிறேன். என் துன்பத்தை அதிகப்படுத்துபவர்கள் இருக்கிறார்களே யொழிய, அபலையாகிய எனக்கு உதவி புரியும் வகையில் என் துயரைப் பகிர்ந்து கொள்பவர்கள் யாருமில்லை. சாதாரணமாகத் தாங்கமுடியாத துன்பங்கள் என்னைப் பலவகையிலும் நலிந்து வாட்டுவதை யனுபவிக்கும்போது என் உள்ளமும், உடலும் துடிக்கும் துடிப்பை நான் எப்படி விவரிப்பேன் ?.................." என்று ஆறாத்துயரத் தோடு கூறிக்கொண்டே போனாள்.

நான், "ஐயோ, பாவம்! அப்படியா அம்மா, நீ சொல்கிறபடி உன் நிலை பரிதாபமாக இருக்குமானால், அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். உனக்குக் கருணையங் கடவுள் மனச்சாந்தி யளிப்பாராக. "திக்கற்ற வர்களுக்குத் தெய்வந் துணை" என்ற ஆப்த மொழியை நீ கேட்டதில்லையா ?—நான் உன்னைப் பற்றிய வரலாற்றைக் கேட்டது எதற்காக வென்றால், என்னால் உனக்கு ஏதாயி னும் உதவி செய்ய முடியுமா ? என்று அறிவதற்காகவே யொழிய வேறில்லை.—உன் வீடு எங்கிருக்கிறது? உன் பெற்றோர் உற்றார் யார் என்று தெரிந்தால், உன்னைப்பற்றி அவர்களுக்குத் தகவல் தெரிவித்து அழைத்துக்கொண்டு போகச் செய்யலாம்; அல்லது நான் கூட்டிச்சென்று விட்டு வரலாம் என்று எண்ணினேன்; ஆதலால்தான் உன்னை.................." என்று கூறிக்கொண்டு போகையில் அவள் இடைமறித்து, "ஐயா, முன்பின் யோசியாது என் னைக் கடலிலிருந்து காப்பாற்றிவிட்டு, நீங்கள் ஏன் இப் போது சங்கடப்பட வேண்டும் ? நீங்கள் எதற்காக ஐயா, என்னைக் காப்பாற்றினீர்கள் ?—ஐயோ, கொடுமையே!

எனக்கு ஆதரவாகப் பெற்றோர் என்றும் உற்றார் என்றும் மனிதர்கள் உண்மையில் இருப்பார்களானால், கடலில் விழுந்து சாக வேண்டுமென்று நான் ஏன் நினைக்கிறேன்? இதை ஊகித்து அறிந்திருக்கக் கூடாதா?......................" என்று ஆற்றாமையோடு பேசினாள்.

"அடாடா! என் முட்டாள் தனத்தை என்னென்பது! நான் அசட்டுத்தனமாக ஏதேதோ பேசி உன் மனத்தை அதிகமாக வல்லவா தொல்லைப் படுத்துகிறேன்?—அம்மா, இனி நான் உன்னை யொன்றும் விவரங் கேட்கவில்லை. இனி நீ எதுபற்றியும் சிந்திக்க வேண்டாம். உனக்கு உற்றாராக நாங்கள் இருக்கிறோம். இது உன் வீடு; என் தாயார் உன் அன்னை; நான் உன் சகோதரன் என்று நினைத்துக்கொள். வேறொன்றும் யோசியாதே..........." என்று ஆறுதல் கூறி வருகையில், "ஆமாம், குழந்தாய்! நாங்கள் இருக்கிறோம் உனக்கு ஆதரவு காட்ட. நீ என் மக்களில் ஒருவராக இருக்கலாம்..................." என்று கூறிக்கொண்டே என் அன்னையார் திரும்பி வந்தார்.

சிறிது நகர்ந்து நின்ற என்னை நோக்கி, என் தாய், "குழந்தை என்ன சொல்கிறாள்? நம் வீட்டில் இருக்கச் சங்கோஜப் படுகிறாளா?" என்று கேட்டார்.

அதற்கு நான் பதில் சொல்ல வாயெடுக்கு முன், அப் பெண்மணி, "தாயே! நீங்களும் உங்கள் மைந்தரும் என் மீது காட்டும் பரிவுக்கும் அன்புக்கும் ஈடாக நான் எவ்விதம் நன்றி காட்டப் போகிறேன்? இப்பேர்ப்பட்ட தயாள குணம் படைத்த உங்கள்பால் என் வாழ்க்கை வரலாற்றை —அந்தரங்கங்களைக் கூறுவதில் தவறில்லை என்று கருது கிறேன். மேலும், என்னை ஆதரிக்க முற்பட்டிருக்கும் உங்களுக்கு நான் யார்? என் குணஞ் செயல்கள் எப்படி?

என்று தெரிந்தால்தான், நான் நீங்கள் கருணை காட்டுவதற் குரிய பாத்திரம் தானு? அல்லவா? என்று அறிய முடியும். அத்துடன், நான் தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கு வந்தது சரியா? இல்லையா? என்று நீங்கள் முடிவு செய் வதற்கும் நான் என் வாழ்க்கை வரலாற்றை விவரிப்பது அவசியமாகும்" என்று கூறிக்கொண்டே வந்த அவள் என் பக்கந் திரும்பி, "அண்ணு! நீங்கள் எழுத்தாளராகவோ, கதாசிரியராகவோ இருந்தால், நான் சொல்லப்போகும் வரலாற்றை உலகத்துக்கு எடுத்துச் சொல்லலாம். என் வரலாறு மற்ற மகளிர்க்கு ஒரு படிப்பினையாகவும் இருக் கும். நம் தமிழ் நாட்டுச் சமூக நிலை இன்று எவ்வித மிருக் கிறது? எவ்வளவு ஊழல்களும் மூடப் பழக்க வழக்கங் களும் அர்த்தமற்ற கொள்கைகளும் நம் சமூகத்தில் மலிந் திருக்கின்றன? நம் மக்கள் எவ்வளவு தூரம் அறியாமை யில் ஆழ்ந்திருக்கிருர்கள்? என்று தெரிவித்து, சீர்திருத்தம் கோரலாம்" என்று கூறினுள்.

என் தாயும் நானும் அவளது உணர்ச்சிமிக்க பேச் சைக் கேட்டு அசைவற்று நின்று விட்டோம். இதற்குள் அவள் படுக்கையை விட்டு எழுந்து அலங்கோலமாக இருந்த கூந்தலைக் கோதி முடிந்து கொண்டு, எங்களை நோக்கி, "அம்மா, அண்ணு, நீங்கள் இப்படி உட்காருங்கள். பாவி என்னுடைய பரிதாபக் கதையைக் கேளுங்கள். மகா பாவியாகிய எனக்கு இவ்வுலகில் வாழ உரிமையுண்டா? எனக்கு விமோசன முண்டா? என்று நீங்களே கூறுங் கள்..........." என்று சொல்லத் தொடங்கினுள்.

அன்னையார், "ஆமாம்; அம்மா! உன் பெயர் என்ன வென்று இன்னும் எங்களுக்குச் சொல்ல வில்லையே!" என்று கேட்டார்.

அவள், "என் பேர், ஊர் எல்லாவற்றையுந் தான் சொல்லப் போகிறேனே, அம்மா! சற்றுப் பொறுமையா யிருந்துதான் என் துயரக் கதையைக் கேளுங்களேன்."

"மண்பிறந்த மறிகடல்சூழ் உலகத்தில் வாழ்பவரில்
பெண்பிறந்தார் யான்பட்ட பெருந்துயரம் யார்பட்டார் ?"

என்று யாரோ ஒரு கவிவாணர் பாடி விட்டுப் போயிருக் கிறாரன்றோ! அவர் எனக்காகத்தான்—என் கூற்றைத்தான்—அப்படிப் பாடிவிட்டுப் போயிருக்க வேண்டும். என் போன்ற துரதிர்ஷ்டம் வாய்ந்த மகளிர் இவ்விதங் கதறு வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். அதிலும், பெண்ணாய்ப் பிறந்த தோஷத்துக்காக என்னைப் போன்று இவ்வுலகில் கஷ்ட நஷ்டங்களை—பழி, அவமானங்களை வேறு யாரும் அனுபவித்திருக்க மாட்டார்கள். என் பெற்றோர் என்னை எதற்காகத்தான் பெற்றார்களோ! தெரியவில்லை. பின்னர், அவர்களும் என்னை வெறுக்கும்படியாக—தங்க ளுக்கு ஒரு பாரமாக இருப்பதாக நினைக்கும்படியாக நான் இருக்குமாறு நேர்ந்திரா தல்லவா, அவர்கள் என்னைப் பெறாதில்லா விட்டால்! அவர்கள் என்ன செய்வார்கள்? என் துரதிர்ஷ்டம் அப்படியிருந்தால். அவர்களுக்கு நான் ஒருத்தி மட்டுமா பெண்ணாய்ப் பிறந்தேன்? எத்தனையோ பேர்தான் பிறந்தனர். அவர்களெல்லாம் என்னைப் போன்றா கஷ்டமும் துன்பமும் அனுபவித்தனர்? இல்லையே! அவர் கள் இவ்வுலகில் சுகமாய்த்தா னிருந்தனர். உலக இன்பங் களை நுகர்ந்து மகிழ்ந்திருந்தனர். என் தலையெழுத்து என்னை இப்படித் தவிக்க விட்டது? அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்?—இவ்விதம் என் ஆற்றாமையையே கூறிக்கொண்டு போனால், இதற்கு ஒரு முடிவே இராது. ஆகவே, பீடிகையை இவ்வளவுடன் நிறுத்தி, என் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கத் தொடங்குகிறேன்.

நான் ஒரு கண்ணியம் மிக்க குடும்பத்தில் பிறந்தேன். என் பெற்றோர் ஏழைகளென்றும் சொல்வதற் கில்லாது, செல்வந்தர்களென்றும் கூறுவதற்கின்றி, நடுத்தரமான வகுப்பைச் சேர்ந்தவர்களாய்ப் பெருமையுடன் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குச் செல்வப்பேறு போதியபடி இல்லா விடினும் மக்கட்பேறு மகிழ்ச்சி தரத்தக்க விதமாக இருந்தது. எனது தாய் தந்தையர்க்குப் பிறந்து இறந்தவர்கள் போக, மூன்று பெண்களும், இரு ஆண்களும் இருந்தனர். ஆனால், அவர்களில் என்னையே தங்களது கண்மணியாகப் போற்றி, காமாட்சி என்று பெயரிட்டு அருமை பெருமையாக வளர்த்து வந்தார்கள்.

யான் மகளிர்க்குரிய பருவத்தை யடைந்து, பதினான்கு வயது முற்றுப் பெற்றதும், எனது பெற்றோர்கள் என்னை உருவுந் திருவுங் கல்வியு முடைய ஒருவனுக்கு விவாகம் செய்துதர முயன்றார்கள். என்னருமைத் தாய்க்கோ என்னை அவரது அண்ணன் மகனுக்கு மணஞ் செய்வித்து மகிழவேண்டுமென்ற விருப்ப மதிகம் இருந்தது. ஆனால் என் தந்தைக்கு அவர்களிடத்தில் சம்பந்தம் வைத்துக் கொள்ளப் பிடிக்கவில்லை. செல்வ மில்லாவிடினும் சிறந்த கல்வியும், தகுதியும் வாய்ந்த ஒருவனுக்கே என்னை விவாகஞ் செய்விக்க வேண்டுமென்று அவர் திடமான உறுதிகொண்டிருந்தார். எனக்கு மட்டும், எனது அம்மான் மகனையே கணவனாகப் பெறவேண்டுமென்ற விருப்பம் அச்சமயம் இருந்தது. ஏனென்றால், இளமைப் பருவத்தில் யானும், எனது அம்மான் மகனும் ஒன்றாக விளையாடி நெருங்கிப் பழகி வந்தோம். அக்காலத்தில் வஞ்சகனாகிய அவன் என்னிடம் காதல் வார்த்தைகள் பல பேசி என்னையே விவாகஞ் செய்து கொள்வதாகவும், எக்காரணங் கொண்டும் வேறு பெண்களை மணப்பதில்லை யெனவும், எனது தந்தை வேறு

யாருக்காயினும் என்னை விவாகஞ் செய்து கொடுத்தாலும் தான் என்னை அவ்வயலானிட மிருந்து மீட்டுத் தன் காதலி யாக்கிக் கொள்வதாகவும் வாக்குறுதி கூறி, என்னை மயக் கித் தன் வசப்படுத்தி யிருந்தான். ஆதலால்தான், நான் என் தந்தையின் விருப்பத்துக்கு மாறாக அவனை மணக்க விரும்பினேன்.

ஆனால், கடைசியாக என் பதினைந்தாவது வயது ஆரம்பத்தில் என் தந்தை ஸ்கூல் பைனல் வாசித்தவனும், தகுதி வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவனும், அழகில்லா விட்டாலும், கம்பீரத் தோற்றமுடையவனும், 25 வயதுக்கு மேற்பட்டவனுமான ஒரு வாலிபனுக்கு விவாகம் செய்து தந்து அவரது எண்ணத்தை முடித்தார். அச்சமயம் என் அம்மான் மகனிடத்துக் கொண்ட நேசத்தினால் என் மன நிலை மாறி யிருந்ததால், யான் இவ் விவாகத்தில் மகிழ்ச்சி கொள்ளவே யில்லை. எனக்கு விவாகம் நடந்ததாகவே நான் எண்ணவில்லை. என் தாயின் வருத்தத்துக்கோ அள வில்லை. என் திருமணத்திற்கு எனது அம்மான் வீட்டார் வரவில்லை. மற்றும் உறவினர்களில் சிலரும், இப் புது சம்பந்தத்தால் என் தந்தையோடு மாறுகொண்டு விவாகத் துக்கு வராது நின்றுவிட்டனர். இதனிடையே ஒன்றுகூற மறந்துவிட்டேன். எனக்கு இரு தமக்கையர் இருப்ப தாகக் சொன்னேனன்றோ! அவர்களில் பெரிய தமக் கைக்கு விவாகமாகி நெடுநாளாகியும் பிள்ளையில்லை யாத லால், அவரது கணவன் தமக்கு இரண்டாந்தாரமாக என்னை மணஞ் செய்து கொடுக்கும்படிக் கேட்டிருந்தார். எனது பெற்றோர்கள் அவரது வேண்டுகோளுக் கிணங்க மறுத்துவிட்டனர். எனினும், அவர் எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் இவ்விஷயத்தைப் பற்றி என் பெற் றோர்களிடம் பேசி முடிவில் பயன் காணாது சண்டையிட்

டுப் போவது வழக்கமா யிருந்தது. இந்நிலையில் எனக்கு விவாகஞ் செய்ய நிச்சயித்திருப்பதைக் கடித மூலமாக என் தந்தை அவருக்குத் தெரிவித்ததும், அவர் அடங்காக் கோபங் கொண்டு ஆர்ப்பரிக்கலானார். முடிவாக, என் தந்தையின் மன வுறுதியைக் கண்டு அவர் தாம் விவாகத்துக்கு வரமுடியாதென்று எழுதிவிட்டார். எனவே, அவரும் எனது தமக்கையும், என் விவாகத்தில் கலந்து கொள்ளவில்லை. இவ்வித கோலாகலத்தோடு என் விவாகம் முடிந்தது. எனக்கு விவாகஞ் செய்ய எனது பெற்றோர்கள் பேச்சுத் தொடங்கியதி லிருந்தே எனக்குச் சனியன் பிடித்துவிட்டது போலும்!

மணம் நடந்த மறுநாள், மணமக்களாகிய யாங்களிருவரும் நெருங்கிய உறவினர்களால் விருந்துக்கு அழைக்கப்பட்டு அவர்கள் இல்லங்களுக்குச் சென்று வந்தோம். மூன்றாவது நாளாயிற்று. தந்தையால் வரிக்கப்பட்ட எனது கணவர் எங்கேயோ வெளியே போய்விட்டு வந்தவர் உடம்பு என்னவோ செய்வதாகக் கூறிக்கொண்டு வந்து படுத்தார். அவர் உண்மை நிலையைச் சொல்லவில்லை என்பது சில விநாடிகளில் தெரிந்தது. அவர் வீட்டுக்கு வந்த இரண்டொரு கணத்துக்குள் வாந்தி யெடுக்கலானார். பேதியும் அடிக்கடி ஆயிற்று. இதிலிருந்து அவருக்கு திடீரென்று வாந்திபேதி என்னும் கொடிய நோய் கண்டிருக்கிறதென்று தெரிந்தது. இவ் விஷ நோய்க்குச் சிகிச்சை செய்யப் பலர் பல இடங்களில் விரைந்தனர். பிரபல டாக்டர்கள் வரவழைக்கப்பட்டனர். ஆனால், அவர்களுடைய உதவியைப் பெறுவதற்குள் அவர் நோய் முற்றி எதிர்பாரா வகையில் இறந்தார். மரணத்துக்குப் போராடும் நிலையில் அவர் என்னைப் பார்க்க விரும்புவதாக உறவினர்கள் என்னிடமும், என் தந்தையிடமும் சொன்னார்கள். ஆனால்

யான் அவரைப் பார்க்கக்கூடாதென்று தகப்பனார் தடையுத்தரவு போட்டுவிட்டார். விஷயத்தைச் சொல்லாது மூடிவைத்துக் கழுத்தை யறுத்துவிட்டதாக, தாமே தேர்ந்தெடுத்த மருமகன்மீது தந்தையார் கோபமுற்றார். விவாக காலத்தில் மணவறையில் அவரது பக்கத்தில் யான் தலை குனிந்தவண்ணமாக உட்கார்ந்ததும், மணவறையைச் சுற்றி வருகையில் அவரோடு கை கோத்து வந்ததும் தவிர, எங்களிடையே பேச்சு வார்த்தைகூட நிகழவில்லை. இவ்வித நிலையில் அவர் புது மணப் பெண்ணாகிய என்னைக் காணவோ என்னோடு பேசவோ எவ்வளவு ஆவல் கொண்டிருப்பார் என்பதும், அதிலும், இனி தாம் இவ்வுலகில் உயிர் வாழ முடியாது என்ற நிலையில் என்னைப் பார்த்துப் பேசுவதில் எத்துணை விருப்பமிருக்கு மென்பதும் எனக்கு இப்போது தான் தெரிகிறது. ஆனால், அச்சமயம் எனக்கு அவரைப் பார்க்கவோ, பேசவோ விருப்பமேயில்லை. எனவே, என் மனதில் அவர் உருவம் பதியவேயில்லை. இப்போது நினைத்துப் பார்த்தாலும் இறந்த என் கணவர் உருவம் எவ்வாறிருக்கும் என்பதை ஊகிக்கக்கூட என்னால் முடியவில்லை. அவரைப் பார்க்க யான் விரும்பவில்லை என்பதைக் கேட்டதும், மரணப் படுக்கையிலிருந்த அவரது மனம் என்ன பாடு பட்டிருக்கும்? எவ்வாறு நொந்து புண்பட்டிருக்கும்? அவரை யான் பார்க்க விரும்பாவிட்டாலும், அவர் விருப்பத்தை நிறைவேற்ற யான் அவரிடம் சென்று அவருக்குக் காட்சி தந்தால், அதனால் எனக்கு என்ன பாதகம் நேரிட்டு விடும்? என்னைக் கண்டதனால் அவரது அல்லலுற்ற ஆன்மா அமைதியை யன்றோ அடைந்திருக்கும்? இதனையெல்லாம் நான் அப்போது நினைந்து பாராது பேதைமை யறிவால் பிடிவாதங் கொண்டு அவரது மரண கால வேண்டுகோளை மறுத்துப் பாவியானேன். ஐயோ! அக்கொடுமையை இப்

போது நினைத்தாலும் என் கண்களில் நீர் ததும்புகிறது. என் உள்ளம் உருகிப் பாகாய் ஓடுகிறது. அத் தீவினைதான் இப்போது என்னை நலிந்து துன்புறுத்துகிறது என்றுகூட யான் எண்ணுகிறேன். போனது போக.

எனது கணவர் இறந்து, பிரேத அடக்கமும், மற்றும் பல சடங்குகளும் முறையே நடந்தன. என்னை ஊரிலுள்ள பலரும் வந்து துக்கம் விசாரித்தார்கள். வந்தவர்களோடெல்லாம் என் தாயும், மற்றவர்களும் கலந்து துக்க முற்றார்களே யன்றி, யான் இந்த இழவுப் போராட்டங்களில் கலந்து கொள்ளவேயில்லை. என் கணவர் இறந்ததிலிருந்து யான் தனி அறையில் தவசிபோல மௌனமாக இருந்து வந்தேன். எனக்கு விவாகமானபோது யான் எவ்வாறு அதை விவாகமாக நினைக்க வில்லையோ, அது போலவே, என் கணவர் இறந்ததைப் பற்றியும் யான் கவலை கொள்ளவில்லை. என் கணவர் மரணத்தால் யான் எவ்வளவு கொடிய நிலையை யடைந்தேன் என்பதையும் அப்போது யான் அறியவில்லை. அச் சம்பவத்தை யான் சாதாரண விளையாட்டாகவே எண்ணினேன்.

பின்னர் எனது புக்ககத்தில் காரியமெல்லாம் முடிந்த பிறகு, எனது மாமியார் என்னைத் தம்முடன் விட்டு வைக்கும்படி பெற்றோர்களிடம் கேட்டார். தம் கணவர் இறந்தபிறகு, தம் ஒரே பிள்ளையை ஆதரவாகக் கொண்டிருந்ததாகவும், அப்பிள்ளையும் எதிர்பாரா வகையில் இறந்துவிட்டமையால் என்னைத் தம்முடன் விட்டு வைத்தால் தமக்கு உதவியாகவும் ஆதரவாகவும் இருக்குமெனவும், தாம் என்னை அருமையாக வளர்ப்பதாகவும் சொன்னார். அவர் சொல்லிய வண்ணமே அருமையாக என்னைப் பாராட்டி வளர்ப்பார் என்பது அவர் இரண்டு நாட்களில்

என்னிடம் காட்டிய ஆர்வமும், தாயினும் சாலப் பரிவும் எடுத்துக் காட்டியது. என்றாலும் என் தந்தையார் இதற்கும் ஒப்பவில்லை. எனவே, அவ்வம்மையார் வாடிய முகத்தோடு வருந்தி எங்களை வழி யனுப்பினர்.

பெற்றோர் துக்கமும், உற்றார் ஆரவாரமும் ஒருவாறு ஓய்ந்தது. என் தந்தை மட்டும் எனக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி மிகவும் வருந்தினர். தாம் எண்ணிய எண்ணத்தைப் பல போட்டிகளுக் கிடையே முடித்துவிட்டதாகக் கருதி மகிழ்ந்த தம் எண்ணத்தில் மண் விழுந்ததே என்று அவர் ஏங்கி யயர்ந்தார். அறிவிலும் உலகானுபவத்திலும் மிகுந்த அவரது நண்பர்களெல்லாம் நடந்துபோன சம்பவத்தைப் பற்றி வருந்தி யாவதொன்றுமில்லை யென்றும், இளம் பருவமுடைய எனக்கு மறுமணஞ் செய்தலே நல்லதென்றும், ஸ்ரீ கங்காராம் என்னும் பெரியாரின் தீவிர முயற்சியின் பயனாக, இந்த இருபதாம் நூற்றாண்டில் விதவா விவாகம் நடப்பது சகஜமாகி வருகிறதென்றும், ஆதலால் இவ் விஷயத்தில் தயக்கங் காட்ட வேண்டியதில்லை யென்றும் யோசனை கூறினர். இவ்விடத்தில் என் தந்தையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுவது அவசியமென்று கருதுகிறேன். அவர் உயிர் இரக்கத்தையே அடிப்படையாகக் கொண்ட சைவ சமயத்தைச் சார்ந்தவர்; புல் முதல் மனிதன் ஈறாகவுள்ள உயிர்களின் துன்பத்தைத் துடைப்பதே கடவுளுக்கு வழிபாடு செய்வதாகுமென்றும், ஓரறிவுயிர்க்கும் மனத்தாலும் துன்பஞ் செய்ய நினைக்கக்கூடாது என்றும், எல்லா உயிர்கள் மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகுபவரே அந்தணரென்று சொல்லப்படுதற் குரியார் என்றும் வலியுறுத்திக் கூறும் திருக்குறளை இடையறாது ஓதுபவரும், பிறர்க்கு எடுத்து உரைப்பவரு மாவார். அதுவொன்றோ? ‘என் மூதாதையர் ஊன் உண்பதில்லை;

யானும் உண்ணவில்லை' யென்று கூறி உயிர்களைக் கொடுமைப் படுத்தி வருத்தும் ஒரு சிலர்போ லல்லாது, புலால் உண்ணும் குடும்பத்திலே பிறந்து வளர்ந்தும், ஊன் என்பது உயிர்கொலைக்கு ஏதுவாயிருக்கிற தென்னும். உண்மையை யுணர்ந்து, புலால் உண்ணும் வழக்கத்தை விடுத்து, தாம் மாத்திரமல்லாது தம் குடும்பத்தாரையும் 'சைவர்கள்' ஆக்கிய அருளாளர். இவர் பல சைவசபைகளில் ஈடுபட்டுச் சமயத்தொண்டு செய்துவந்த தல்லாது, அறிஞர் அவைகளில் விரிவுரைகளுஞ் செய்து வந்தார். ஆதலால் இவருக்கு உத்தியோகத் துறையில் மட்டுமல்லாது, இச் சைவ சபைகள் வாயிலாகவும் நண்பர்கள் பலர் இருந்து வந்தனர். அவர்களில் சிலர் எங்கள் குடும்ப நண்பர்களாகவு மிருந்தனர். எனவே, அவர்களுக்கு என்னைப் பற்றியும், என் வீட்டாரைப் பற்றியும் நன்கு தெரியும். அவர்கள் எனக்கு மறுமணஞ் செய்வது அவசியம் என்று என் தந்தைக்கு வலியுறுத்தியபோது அவர் அந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சமூகக் கட்டுப்பாட்டுக்கு மிகவும் பயந்தார். உற்றாரெல்லாம் தம்மை யுதறித் தள்ளிவிடுவார்கள் என்று தயங்கினார். உறவினர்களோ என் தந்தை கல்வியாலும், உத்தியோகத்தாலும் மற்றவர்களைக் காட்டிலும் மேம்பட் டிருத்தலைக் கண்டு பொறாமை கொண்டு பல விதத்திலும் எங்கள் குடும்பத்திற்குத் தொந்தரவு விளைத்து வந்தனர். எங்களுக்குத் துன்பம் நேருவதை அவர்கள் இன்பமாகக் கருதினர். இவ்வித உற்றார்களுக்கும், அவர்களது கட்டுப்பாட்டுக்கும் பயந்து வந்த அவரது அறியாமையை என்னென்பது? எனவே, அவர் சமயத்தின் மீதும், சாஸ்திரத்தின் மீதும் பழியைப் போட்டு, பெண்களுக்கு மறுமணஞ் செய்வது தவறானது என்று தமது நாவன்மையால் பல காரணங்களைக் காட்டி அவர்கள் யோசனைகளை

உதறித் தள்ளினர். இவரது குறுகிய நோக்கத்தைக் கண்டு சிலர் இவரிடத்து நட்புக் கொள்வதையும் விட்டொழித்தனர்.

இதனிடையே, யான் எனது அம்மான் மகனுக்கு என் மனநிலையைத் தெரிவித்து, விரைவில் வந்து என்னை மறுமணஞ் செய்துகொள்ள வேண்டுமென்றும், அதற்கான முயற்சிகளை இன்றிருந்தே தொடங்க வேண்டுமென்றும் வற்புறுத்தி இரகசியமாகச் செய்தி சொல்லி யனுப்பினேன் ஏனென்றால், அவன் யான் மங்கைப் பருவமடைவதற்கு முன் பலகால் என்னிடம் வலியுறுத்திக் கூறியிருந்த உறுதி மொழிகள் அனைத்தும் உண்மையென நம்பியிருந்தேன்; ஆகையால், யான் என் மனநிலையைத் தெரிவித்து அனுப்பியதும், அவன் என்னை விவாகஞ் செய்வதற்கான ஏற்பாடுகளை உடனே தொடங்கி முடிப்பான் என்ற திடமான நம்பிக்கை கொண்டிருந்தேன். மேலும், அவனது தந்தை சிறந்த செல்வந்தர். அவருக்கு அவன் ஒரே பிள்ளை. அவன் விருப்பப்படியே அவர் நடப்பவர். அவர்கள் உறவினர்களுக்குப் பயப்படவேண்டிய அவசியமுமில்லை.

ஆனல், நான் எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் யான் விடுத்த செய்திக்குப் பதிலும் அனுப்பவில்லை; என்னை விவாகஞ் செய்துகொள்வதற்கு முயற்சி செய்ததாகவுந் தெரியவில்லை. மீண்டும் ஒரு முறை அவனிடம் ஆளை யனுப்பினேன். யான் சொல்லியனுப்பிய செய்தியைக் கேட்டுக்கொண்டு, தான் நேரே வந்து என்னைப் பார்த்துப் பேசுவதாகச் சொல்லி ஆளைத் திருப்பி யனுப்பிவிட்டான். அவன் விவாக முயற்சிகளையெல்லாம் முடித்துவிட்டு மகிழ்ச்சிச் செய்தியோடு என்னிடம் வருவான் என்று யான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இந்நிலையில், அவனது தந்தையின் உத்தியோக மாற்றங் காரணமாக அவன் குடும்பத்தி

னர் தங்கள் சொந்த வீடு முதலியவைகளை வாடகைக்கு விட்டு விட்டு வெளிநாடு சென்றனர். இது எனக்குப் பெரிய ஏமாற்றத்தை யுண்டுபண்ணியது. எனினும், அவன் எத்துணை காலமாயினும், என்னை வந்து மணஞ்செய்து செல்வான் என்று அப்போதும் நம்பி மனந் தேறினேன்.

இவ்வாறு மூன்று ஆண்டுகள் கழிந்தன. இதனிடையே என் நிலைக்காக எனது தாயே உண்மையாக வருந்தி வந்தார். என் இளமைச் செவ்வியையும், எதிர்பாராது யான் அடைந்த கோலத்தையும் நினைந்து நினைந்து பலகால் என்னைப் பார்த்து அவர் கண்ணீர் வடிப்பதுண்டு. என் தந்தையோ என்னைப்பற்றி அதிகமாகக் கவலைப்படுவதில்லை. எப்போதாகிலும் அவர் என் தாயோடு என் நிலைபற்றிப் பேச நேர்ந்தால், தாம் எண்ணிய எண்ணமெல்லாம் பாழாய்ப் போனதாகக் கூறி வருந்துவார். யானோ அச் சமயம் என் விதவைத் தன்மையின் பயங்கர நிலையை முற்றும் உணர்ந்தே னில்லை. பிள்ளைமை யறிவால் யான் அதை நினைந்து பார்ப்பதற்கும் ஆற்றல் வாய்க்கப் பெறாதிருந்தேன். எனக்கு இருந்ததெல்லாம் ஒரே யொரு கவலைதான். என் அம்மான் மகன் தகவல் சொல்லி யனுப்பவில்லையே? அவன் எப்போது வந்து விவாகஞ் செய்துகொள்வான் என்பதே என் கருத்தில் முக்கியமாக இருந்தது. யான் எண்ணுகிறபடி உண்மையில் என் அம்மான் மகன் விவாகஞ் செய்வதா யிருந்தால் அது அவ்வளவு எளிதில் நடக்கக்கூடிய காரியமா? அதற்கு எதிர்ப்பில்லாமல் இருக்குமா? என்பதைப்பற்றி யெல்லாம் யான் நினைந்து பார்க்கவே யில்லை. மங்கைப் பருவ மடைந்தும், இத்துணை வெள்ளையறிவுடனிருந்ததற்கு எனக்கு உலகானுபவம் இல்லாதிருந்ததுதான் காரணமாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். யான் ஆரம்பக் கல்விமுறையில் ஐந்தாவது வகுப்புவரை தான் வாசிக்க

வைக்கப் பட்டேன். அவ்வகுப்புப் பாடபுத்தகங்களைத் தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாது. உலக நடவடிக்கை பற்றித் தெரிந்து கொள்வதற்கு எனக்கு வசதி கிடையாது. யான் கிணற்றுத் தவளையாகவே இருந்தேன். நான்கு மதிற் சுவர்க்குட்பட்ட என் வீடுதான் எனக்குப் பெரிய உலகம். யான் மட்டுமே அவ்வாறு அறியாமையில் மூழ்கி யிருந்தே னென்று நினைக்காதீர்கள். என் சகோதரர்களும் அவ்வாறு தான் இருந்தார்கள். என்னைவிட அவர்களுக்கு அவர்கள் செய்யும் வேலைதான் தெரியும். இதைக்கொண்டு என் பெற்றோர்களின் தன்மையையும் மனப்பான்மையையும் நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள்.

மூன்றாவது அதிகாரம்

மூளி அலங்காரியின் அட்டகாசம்

இவ்வித நிலையில், யான் விதவையான நான்காம் வரு டத்தில் என் தமையனுக்கு விவாகம் நடைபெற்றது. எங் களுக்கு நெருங்கிய உறவிலேயே அவனுக்கு மனைவி வாய்த்தாள். புது மணப்பெண் பழைய பெண்ணாகி நான் கைந்து மாதங்களுக் கெல்லாம் அவள் 'நற்குணங்'களைச் சிறிது சிறிதாக வெளிப்படுத்தலானாள். யான் பெற்றோர் களால் அருமையாக வளர்க்கப்படுவதையும், எனக்கு அவ் வீட்டிலிருக்கும் செல்வாக்கையும் கண்டு அவள் பொறாமை கொண்டாள் என்பது பின்னால் தெரிந்தது. வீட்டு மருமக ளாய் வருபவளை மாமியாரும் நாத்திகளுமே கொடுமைப் படுத்தி வருவது பெரும்பாலும் உலக வழக்காக இருந்து வருகிறது. ஆனால், அவ்வழக்கம் என் விஷயத்தில் மாறு

பட்டுக் காணப்பட்டது. என் தாயும் யானும் என் அண்ணி விஷயத்தில் தலையிடுவதில்லை. அது எங்கள் இயல்புமில்லை. ஆனால், மூளி அலங்காரியான இவள் பொருமை காரணமாகச் சமயம் நேரும்போது என் மனத்தை வருத்தமுறச் செய்து வந்தாள். என் தாய் இதைக் கவனித்து அவளைக் கண்டித்துப் பயமுறுத்தி வந்தார். ஆகையால் அவளது கொடுங்குணம் ஒருவாறு மறைந்திருந்தது. யானுஞ் சிறிது தொல்லை நீங்கி யிருந்தேன்.

இதனிடையே, வெளிநாடு சென்றிருக்கும் என் அம்மான் மகனுக்கு அங்கு செல்பவர்கள் மூலமாக என் நிலையை அடிக்கடி சொல்லி யனுப்பி வந்தேன். ஆனால் அவ்வாறு சொல்லி யனுப்புவதால் யாதொரு பயனும் யான் காணவில்லை. கொடுங் குணமும், கடின சித்தமும் படைத்த அவன் பழமையை மறந்து யாதொரு பதிலுங் கூறி யனுப்பவில்லை. இப்போதுதான் அவனுடைய வஞ்சக நிலைமை எனக்குப் புலனாயிற்று. யான் அவனது ஆசை வார்த்தைக்கு மயங்கி அறிவிழந்ததை எண்ணி வருந்தினேன். என் இளமை நலத்தைக் களவாகப் பருக எண்ணி, பொய்க் காதல் பேசிய அவன் வார்த்தையை மெய்க் காதல் எனக் கருதி மனப்பால் குடித்த என் மடமையை நினைந்தால் இப்போதும் என் நெஞ்சம் துணுக்குறுகிறது. எதற்காக அவன் வஞ்சக வலையை விரித்தானே, அவ் இலக்குக்கு நான் ஆளாகாது தப்பியதற்காக முழுமுதற் பெருங் கடவுளை இறைஞ்சுகிறேன். தன்னல மிக்க அவன் சூழ்ச்சித் திறத்தை யான் கனவில் நினைந்து பார்த்தாலும் கொடியதா யிருக்கிறது. அவன் வஞ்சகத் தன்மையைப் பார்த்த பிறகு யான், ஆண்கள் பெரும் பாலும் தன்னல முடையோராகவும் வஞ்சகர்களாகவுமே

யிருப்பார்கள் என்ற கருத்தே என் உள்ளத்தில் வலுத்தது. இவ்வாறு நான் சொல்வதிலிருந்து 'என்ன, இவள் நம் ஆண் இனத்தைப் பற்றிக் குறைவாகப் பேசுகிறளே' என்று நீங்கள் என்னைக் கோபிக்கக் கூடாது. என் அனுபவத்தின் வாயிலாக அறிந்த உண்மையையே எடுத்துச் சொல்லுகிறேன்.

இங்ஙன மிருக்க, என் விதவைப் பருவம் விளையாட்டைப்போல் ஏழு வருடம் கடந்து சென்றது. இப்போதும் நான் அதன் கொடுமையை அதிகமாக அறியவில்லை. என் தீவினையின் விளைவு மூண்டெழுந்த தென்ன, எனது இருபத்திரண்டாம் வயதில் என் அருமைத் தாயார் காசம் என்னும் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு இறந்தார். அவர் பிரிவு எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. என் தந்தையோ தன் மனைவியின் மரணத்தால் மனவேதனை யுற்றார். அவர் சித்தம் பெரு மாறுதலை யடைந்தது. என்தாய் சென்ற நாள்முதல் தந்தையே எனக்கு உற்ற காவலானர்.

என் தாய் மறைந்த ஒரு மாதத்துக்கெல்லாம், எனது தமையன் மனைவி தன் சுய சொரூபத்தைக் காண்பித்துக் கொடுங்கோலாட்சி நடத்தலானள். இதுவரை என் தாய்க்கு அடங்கி ஒடுங்கி பயந்து வந்தவள், இப்போது என் தந்தையைக் கைப்பிள்ளை யென நினைத்து அலட்சியமாக நடந்து வந்தாள். என் தந்தையோ அவளது வாய்க்குப் பயந்து அவள் செய்யும் கொடுமைகளை யெல்லாம் கவனியாதது போல் நடந்து வந்தார். என் தந்தை தம் குடும்ப விஷயம் வீட்டுக்கு வெளியில் செல்லக்கூடாதென்ற எண்ணமுடையவர்; ஆதலால் தான் அடங்காப் பிடாரியாகிய தன் மருமகளின் கொடுஞ் செயலைப் பற்றிக் கண்டிக்க முற்படவில்லை. அவ்விதம் அவளைக் கண்டிக்க வாரம்பித்

தால், அவள் தன் தீங்குர லெடுத்துப் பெருமுழக்கஞ் செய்வாள்; அக்கூக்குரலால் அயலிலுள்ள பங்காளிகளும் மற்றவர்களும் விஷயத்தை யறிந்து கேலி செய்யத் தொடங்குவர் என்ற அச்சமே அவரை எனது அண்ணியின் ஆட்சிக்கு அடங்கி நடக்கச் செய்தது.

என் அண்ணனே மனைவிக்கு அடிமையாக நடந்து வந்தான். அவள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்து வந்தான். அவள் சொல்லிக் கொடுப்பதைச் சொல்வதன்றி, அவன் தன் இச்சைப்படி ஒன்றைச் சொல்லவோ செய்யவோ அவனுக்குத் துணிவு கிடையாது. தந்தை முதலியவர்களுக்கு மாருக நடந்து அவர்கள் கோபத்திற்கோ, விரோதத்திற்கோ ஆளானாலும் பாதகமில்லை; தன் மனைவியின் மனத்தைத் திருப்தி செய்தால் போதும் என்ற மனப்பான்மையை அவன் கொண்டிருந்தான் என்றால் மிகையாகாது. அவனது தன்மையை நீங்கள் அறிந்தால் 'பெண்டாட்டி யாத்தே பெரியாத்தே' என்ற அவனுடைய மனோபாவத்துக்காக அவனிடம் வெறுப்போ அல்லது கோபமோ கொள்வதில் பயனில்லை என்பதை யறிவீர்கள். பொதுவாக அவனைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அவன் ஒரு பயங்கொள்ளி; சந்தேகப் பேர்வழி யென்று கூறினால் அமையும். எடுத்ததற்கெல்லாம் அவனுக்குச் சந்தேகந்தான். இவ்வித சந்தேகப் பிராணியை இவ்வுலகிலேயே பார்க்க முடியாது. எனவே, அவன் மனைவி செய்யுங் கொடுமை சம்பந்தமாக, யான் எவ்வளவு தூரம் அவனிடத்தில் உதவியை எதிர் பார்க்க முடியும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நாளாக ஆக, என் அண்ணி என்னைப் படுத்துங் கொடுமையும் வளர்ந்துகொண்டே வந்தது. என் வீட்டு நிர்வாகப் பொறுப்பைத் தவிர, சமையல் முதலிய காரியங்களில்

யான் தலையிடுவதில்லை. அதற்குக் காரணம் என் தாய் என்னைச் சமையல் முதலிய வேலைகளில் பழகச்செய்து அவைகளில் என்னை ஈடுபடுத்தாமையே யாகும். என் பெற்றோர்கள் என்னை இளம் பருவத்தில் எவ்வளவு செல்வமாக வளர்த்தார்களோ அவ்வளவுக் கவ்வளவு இப்போது நான் அருமை குலைய லானேன். அவர்கள் நோக்கத்துக்கு மாருக, அவர்கள் செயல் அவ்வளவும் நாள் ஆக ஆக, என்னை அல்லலுக்கு ஆளாக்கி வந்தன. யான் வீட்டு நிர்வாகஞ் சம்பந்தமான வேலைகளைக் கவனித்து வரும் நேரந் தவிர, மற்றக் காலங்களில் கடவுள் வழிபாட்டிலும், கல்வியிலும் மனத்தைச் செலுத்தி வந்தேன். இவற்றைக் கண்ட என் அண்ணி முதல் முதலாக என் அண்ணன் முதலியவர்களிடம் யான் அவளோடு சமையல் முதலிய வேலைகளில் உதவியாக இருப்பதில்லை யென்றும், எப்போதும் சுகமாக உட்கார்ந்து பொழுதைப் போக்கிக்கொண் டிருப்பதாகவும் என் மீது புகார் செய்ததோடு, தானே எல்லா வேலைகளையுஞ் செய்வதற்குத் தான் மற்றவர்களுக்கு வேலைக்காரி யல்லவ' என்றும் கூறி முணுமுணுக்கலானுள். என் அண்ணனுக்கு யான் வேண்டுமென்றே வேலை செய்யாதிருக்கவில்லை யென்பது நன்கு தெரியுமாதலால், அவள் புகாரைக் கேட்டும் அவன் பேசாதிருந்து விட்டான். ஆனால் என் அண்ணி அவ்வளவோடு நிற்கவில்லை. அவள் தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளும் விஷயத்தில் கடைசிவரை ஒரு கை பார்த்தே விடுவேன் என்று சொல்லும் தன்மை வாய்ந்தவளாதலால், தினமும் என் மீது எவ்வெவ்வா றெல்லாம் புகார் சொன்னால் என் அண்ணன் முதலியவர்கள் கோபங் கொள்வார்களோ அவ்வாறெல்லாம் பலவிதமாகப் புகார் கூறி வந்தாள். அதனால் என் அண்ணனுக்கு என் மீதிருந்த அன்பும், அனுதாபமும் சிறிது சிறிதாக அற்று வரலாயிற்று.



“காமு, நீ யௌவன வயதை வீணாகக் கழிப்பதைக் காண வருத்தமா யிருக்கிறது............”

—பக்கம் 37.

நான்காவது அதிகாரம்

கலாசாலை மாணவனின் காமவெறி

இஃதிங்ஙன மிருக்க, என் தந்தை தமிழ்க் கல்வியில் ஓரளவு புலமை வாய்ந்தவரென்று சொல்லி யிருக்கிறே னல்லவா? ஆகவே, அவரிடம் பாடங் கேட்டுச் செல்லவும், அவரை விரிவுரை செய்வதற் கழைத்துப் போகவும் பலர் எங்கள் வீட்டுக்கு வந்து செல்வதுண்டு. என் தந்தையோ, சகோதரர்களோ வீட்டிலில்லாத காலத்தில் என் தந்தையைப் பார்க்க வருபவர்கள் தகவல் விசாரித்தால் யானே பதில் சொல்லக்கூடிய நிலையி லிருந்தேன். ஆதலால், அவர்களில் பலரை யான் அறிவேன். அவர்களும் என்னைச் சகோதரி என்ற முறையில் வைத்துப் பேதமின்றிப் பழகி வந்தார்கள். ஆனால், என் தந்தை யிடத்தில் தினந்தோறும் வந்து தமிழ்ப் பாடம் கேட்டுச் சென்ற கலாசாலை மாணவனொருவன் மட்டும், என்னிடத்தில் தீயவெண்ணங் கொண்டிருந்ததாக நாளடைவில் தெரிந்தது. அவன் என் தந்தையில்லாக் காலம் பார்த்து பெரும்பாலும் வந்து அவரை விசாரிப்பது போல் பேசத் தொடங்கி, என்னிடம் தகாத வார்த்தைகளைக் கூறலானான். ஒருநாள் அவன், 'காமு, நீ யௌவன வயதை வீணாகக் கழித்து, கைம்மை நிலையிலிருப்பதைக் கண்டு யான் மிக வருத்தமடைகிறேன். நீ மிக உன்னத நிலையில் இருக்க வேண்டியவள். உன் மீது எனக்கு மிகவும் இரக்கம் ஏற்பட்டிருக்கிறது. எனது ஆசிரியர் மகள் என்ற முறையில், யான் உனக்கு உதவிசெய்யக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆதலால், நீ மாத்திரம் மனம் வைத்தால் யான் உன்னை நன்னிலையில் வைத்து இன்ப வாழ்க்கையை

நடத்தச் செய்ய முடியும். யானும் உங்கள் சாதியைச் சேர்ந்தவன் என்பதை நீ அறிவாய். ஆதலால் நீ யாதும் தயக்கங் கொள்ளாது என்னோடு வந்து விடு' என்று இவ்வாறெல்லாம் ஏதேதோ பிதற்றலானான். இதுவரை நல்ல பிள்ளை போல் அடக்கமாக நடந்து வந்த அவன் வாயிலிருந்து இக்கொடிய வார்த்தைகள் வந்ததைக் கேட்டதும் யான் மிகவும் நடுங்கினேன். உடனே யான் அவனுக்கு யாதும் பதில் சொல்லாது விரைந்து என் அறைக்குள் சென்றேன். வெளி வாயிலில் நின்றிருந்த அவன் எப்போது சென்றானென்பது எனக்குத் தெரியாது. அதற்கப்புறம் அவன் ஒரு வாரம் வரை வரவில்லை. யான் என் தந்தை முதலியவர்களிடத்தில் இவ் விஷயத்தைச் சொல்லி யிருப்பேன் என்ற அச்சம் அவனுக்கு இருந்தது போலும். நானும் அவன் கூறிய தகாத வார்த்தைகளை என் தந்தை முதலியவர்களிடஞ் சொல்லலாமென்றுதான் முதலில் எண்ணினேன். ஆனால் நாணத்தால் நான் அவ் விஷயத்தைச் சொல்லத் தயங்கினேன். பின்னர் ஒருநாள் அவன் தெரு வழியாய்ப் போய்க் கொண்டிருக்கையில் வெளி வாயிலில் நின்றிருந்த என் தந்தை அவனை அழைத்து, "என் அப்பா, நீ பாடங் கேட்க வருவதில்லை" என்று கேட்டார். அதைக் கொண்டு நான் தந்தை முதலியவர்க ளிடத்தில் இவ்விஷயத்தைச் சொல்லவில்லை என்பதை யறிந்து மனத் துணிபுற்ற அவன், தான் வாராததற்கு ஏதோ சாக்கு சொன்னான். அதற்குப் பின்னர் அவன் வழக்கம்போல் வந்து என் தந்தையிடம் பாடங் கேட்டுச் சென்ற வண்ண மிருந்தான். ஆனால் யான் மட்டும் அவன் கண்ணில் படுவதில்லை.

இவ்வாறிருக்க, ஒருநாள் மாலை யான், என் வீட்டுக் கூடத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து படித்துக்கொண்

டிருக்கும்போது யாரோ வருவதுபோல் அரவங் கேட்டது. அச்சமயம் என் அண்ணி புறக்கடை சென்றிருந்தாள். ஆதலால் யான் வருவது யாரென்றறிய சாய்வு நாற்காலியை விட்டெழுந்து திரும்பிப் பார்த்தேன். யாரோ ஒருவர் நடைக் கதவுக்கு வெளிப்புறத்திருந்து தலை நீட்டிப் பார்த்த தாகத் தெரிந்தது. 'யாரது' என்று கேட்டுக்கொண்டே நடைப்பக்கமாகச் சென்றேன். 'நான்தான்' என்று மெது வான குரலில் கூறிக்கொண்டே மேற்சொன்ன வாலிபன் சுற்று முற்றும் பார்க்கலானான். இவனைக் கண்டதும் யான் மனத்தில் பயங்கொண்டு, 'என் தந்தை இல்லை' என்று சொல்லிவிட்டு அவ்விடத்தில் நிற்காது கூடத்துக்குப் போனேன். வீட்டில் அமைதி குடிகொண்டிருக்கவே, யான் தனியாக இருக்கிறேன் என நினைத்தோ, வேறெது வெண்ணியோ, அவன் வெறி கொண்டவன்போல், திடீரென உட்புகுந்து ஓடிவந்து என்னைப் பற்ற முயன்றான். இவனது துணிகரச் செய்கையைக் கண்ட யான் மிகவும் விதிர் விதிர்ப்புற்று வாய்விட்டரற்றிப் பெருங் கூச்ச லிட்டேன். இக் கூக்குரல் புறக்கடையி லிருந்த என் அண்ணிக்குக் கேட்டு விஷயமறிய விரைந்தோடி வந்தாள். எதிர்பாரா வகையில் என் அண்ணியின் வரவைக் கண்ட அவ் வாலிபன் என்னிடம் நெருங்குவதை விட்டு அப்படியே திடுக்கிட்டு அசையாது நின்று விட்டான். நடந்த விஷ யத்தை வெகு விரைவில் உணர்ந்த என் அண்ணி அடங் காக் கோபங்கொண்டு அவ்வாலிபனைப் பலவிதமாகக்கடிந்து பேசியதோடு, அவனை உடனே அவ்விடத்தை விட்டு வெளிச் செல்லும்படியும் இனி இங்கு வரக் கூடாதென்றும் உத்தர விட்டாள். மிக அஞ்சியவன்போல் காணப்பட்ட அவ்வாலிபன், இதைக் கேட்டதும், உடனே வெளிச் சென்றான். அவன் போய் விட்டான் என்பதை யறிந்த

பிறகே யான் மூச்சுவிடத் தொடங்கினேன். பயத்தால் என் உடம்பெல்லாம் வியர்வை அரும்பி விட்டது. அப்படியே ஓய்ந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்துவிட்டேன். உடனே என் அண்ணி, என் நிலையை அறிந்து விசிறி யெடுத்து வந்து விசி, வியர்வை அரும்பிக் களைத்திருந்த என் முகத்தைத் தன் முந்தானையால் துடைத்தவாறே, நடந்ததை என் வாயால் கேட்டறிந்து, அவனை மேலும் வைய லானாள். யான் அவ் வாலிபனின் தீயகுணத்தையும் வஞ்சகத் தன்மையையும், பழிக்கஞ்சா தறுகண்மையையும் நினைந்து மனம் புழுங்கினேன். நீறு பூத்த நெருப்பைப்போல் இவ் வாலிபனைப் போன்று ஆண்களில் பலர் இருந்தால், என் போன்ற பேதைப் பெண்கள் நிலை என்னாகும் என்று ஏங்கி யயர்ந்தேன். இவ்வித நிலையில் என் பிற்கால வாழ்க்கை எவ்வாறு முடியுமோ என்பதை யெண்ணிப் பார்க்க, நடுக்கடலில் புயல்காற்றில் அகப்பட்ட படகிலிருக்கும் மாலுமி திசையறியாது மயங்குவதுபோல் யான் மயங்கித் தியங்கினேன். இவ்வாறு பல எண்ணி என்னை யறியாது கண்களில் நீர் சோரவிட்டு நின்ற என்னைப் பார்த்து என் அண்ணியும் கண்ணீர் வடித்தாள். அவள் மனந் தாளாது என்பால் அவள் கொண்டிருந்த வஞ்சத்தையும் மறந்து, கண்ணீரைத் துடைத்து எனக்குத் தேற்றமொழி கூறி, என் துயரத்தை ஆற்றித் தன் சமையல் வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

ஆனால் இச் சம்பவத்தைப் பற்றி யானோ, என் அண்ணியோ என் தந்தை முதலியோரிடஞ் சொல்லவேயில்லை. என் அண்ணி மட்டும் பொதுவாகத் தன் கணவனிடம், அவ் வாலிபனை இங்கு வரவிடக் கூடாதென்றும், அவனுக்குப் பாடஞ் சொல்லக் கூடாதென்றும் கட்டளையிட்டாள். என் அண்ணன் அவள் அவ்வாறு சொல்வதற்குக் காரண

மென்ன வென்று கேட்கவில்லை. அவனுக்கு ஒரு விஷயத்தை ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலோ, அல்லது நுண்ணிய அறிவோ கிடையாது. அவ்வாலிபனும் அச்சம்பவத்துக்குப் பிறகு எங்கள் வீட்டுக்கு வரும் வழக்கத்தை விட்டு விட்டான். அவன் எங்கள் வீட்டுத் தெரு வழியாகவும் போவது கிடையாது. சனியன் தொலைந்ததென்று என் மனம் ஒருவித ஆறுதலை யடைந்தது.

ஐந்தாவது அதிகாரம்

தம்பி விவாகத்தில் வாய்த்த நம்பி

இவ்விதம் கைம்மை வாழ்க்கைப் புயலில் அகப்பட்டு நான் தத்தளித்துக் கொண்டிருக்க, என் தந்தை என் தம்பிக்கு விவாகஞ் செய்யும் விஷயத்தில் கவலை யுடையவராயிருந்தார். என் தம்பி 21 வயதுள்ள தனக்கு இன்னும் விவாகஞ் செய்யவில்லை என்று முணுமுணுக்கலானன். சில சமயங்களில் அது சம்பந்தமாக என் தந்தையை அவன் வாயில் வந்தவாறு வையவுஞ் செய்தான். அவனது சிறந்த குணங்களில் உலோபத் தன்மையும், தாக்ஷிணிய மில்லாது தன்னைச் சேர்ந்தாரைக் கடிந்து பேசும் இயல்பும், குறும்புத்தனமாகப் பிறரைக் குறித்துப் பேசி எளனஞ் செய்து தானுக மகிழும் பெருமையும் முக்கியமானவை. அதுவன்றி அவன் சுயநலமே உருவானவன். தனக்கு ஏதாகிலும் ஆகவேண்டியிருந்தால் பூமியில் நில்லாது ஆகாயத்தில் பறந்து வேலை செய்வான். மற்றவர்களைப்பற்றி அவனுக்குக் கவலையே கிடையாது. யார் கஷ்டப்பட்டாலும், இறந்தாலும் அல்லது என் தந்தையே நெருக்கடியான நிலைமையிலிருந்து அவ

திப் பட்டாலும் அதை யெல்லாம் அவன் பொருட்படுத்த மாட்டான்.

இத்தகைய மாட்சிமைப்பட்ட குணங்களெல்லாம் ஒருங்கு அமையப்பெற்ற என் தம்பிக்குப் பெண் பார்க்கும் விஷயத்தில் ஒருவித இடையூறு இருந்தது. என் அண்ணிக்குத் தங்கை யொருத்தி இருந்தாள். அவளை என் தம்பிக்கு விவாகஞ் செய்து வைத்துவிட்டால், தான் மேலும் ஏகபோகமாக எங்கள் வீட்டில் ஆட்சி செலுத்தலாம் என்பது என் அண்ணியின் எண்ணம். அதுவன்றி, என் தம்பிக்கு எங்கிருந்தோ சொத்து வந்து சேரும் என்பதும், அவன் வயதில் பெருஞ் செல்வந்தனாக இருப்பானென்பதும் எங்கள் வீட்டாரின் ஜோசியம். ஆகையால் இப்பணப் பேராசையாலும் அவனுக்குத் தன் தங்கையைக் கொடுக்க வேண்டுமென்று என் அண்ணி கருதித் தன் கருத்தை முடிக்கப் பல சூழ்ச்சிகளைச் செய்யலானாள்.

ஆனால், என் தந்தை வேறு இடத்தில் பெண் பார்த்து தன் இளைய மகனுக்கு மணஞ் செய்விக்க வேண்டுமென்று எண்ணிப் பல விடங்களுக்குச் சென்று பெண் பார்த்தார். பலர் என் தம்பிக்குப் பெண் கொடுக்க முன் வந்தனர். ஆனால், என் அண்ணியின் சூழ்ச்சியால் அவை யெல்லாம் தடைப்பட்டன. என் தந்தை தன் முயற்சிகளெல்லாம் வீணாவதைக் கண்டு தன் மருமகளது ஒத்துழைப்பின்றி ஒன்றும் ஆகாது என்பதை யுணர்ந்து, கடைசியாக அவள் தங்கையையே என் தம்பிக்கு விவாகஞ் செய்து வைத்தார்.

இவ் விவாகத்துக்கு உற்றாரும் மற்றோரும் வேறுபாடின்றி உடன் கலந்திருந்தமையால், அது சுருங்கிய செலவில்

சிறப்பாக நடந்தது. இவ்விஷயத்தில் என் தந்தைக்கு உதவி புரிந்த பலருள் உத்தம புருஷரான வாலிப ரொருவர் குறிப் பிடத் தக்கவர். அவர் இவ்விவாகத் துவக்கத்திலிருந்து கடைசி வரை பல்லாற்ருனும் எங்களுக்கு உதவி புரிந்து என் வீட் டாரின் கஷ்டத்தையும் சிரமத்தையும் போக்கினுர். அவர் யாங்கள் வசிக்கும் இருப்பிடத்திற் கருகிலேயே வசிப்பவர். அவருடைய நெருங்கிய கூட்டுறவு எங்களுக்கு இவ்விவாகம் நடப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர்த்தான் ஏற் பட்டது. யாங்களும் அவரும் ஒரே இடத்தில் வசித்து வந்தும், அவ்வளவாக அளவளாவுதல் இல்லாதிருந்தமைக் குக் காரணம், எங்களூரில் சாதி சம்பந்தமாகவும் சமய சம்பந்தமாகவும் பல கட்சிக ளுண்டு; அவைகளொன்றில் யாங்கள் கலந்திருந்தமையே யாகும். எங்கள் ஊரில் அவரது வீட்டாரே இவ்வித கட்சிகளி லெல்லாம் சேராம லிருந்து வந்தனர். மேற்குறித்த கட்சிச் சண்டைகள் ஒன் றின் சம்பந்தமாக என் தந்தை கோர்ட்டு வரை சென்ற பின்னரே, இவ்வித கட்சிகளிலெல்லாம் சேரக் கூடாதென்று என் வீட்டார் தீர்மானித்து எதிலும் கலக்காது விலகி நின்றனர். அதன் பின்னர்த்தான் மேற்குறித்த வாலிபர் நட்பு எங்களுக்கு ஏற்பட்டது. அவர் உருவில் சிறியராயினும் அறிவில் பெரியராய் விளங்கினுர். ஸ்ரீ கிருஷ்ணனைப்போல் நீல மேனியராய்த் திகழ்ந்தாலும், வெள்ளை யுள்ளத்தரா யிருந்தார். அவரது நற்குண நற்செய்கைகளும், ஈர நெஞ் சமும், பிறர்க்குச் சமயத்தில் உதவும் ஈகைப் பண்பும் யாவர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டன. என் வீட்டிலுள்ள ஒவ்வொருவரும், அவரிடம் தனித் தனியாகத் தங்கள் அன்பைக் காட்டி நேசித்தனர். ஒருநாள் அவர் வராவிட் டால் யாவருங் கவலை கொள்வர். வராததற்குக் காரண மென்ன என்றறிய அவர் வீட்டுக்கு என் சகோதரர்கள்

சென்று விஷய மறிந்து வந்த பின்னரே, யாவர் மனதும் ஆறுத லடையும். என் தந்தை இரவில் உறககத்திலும் அவர் பெயரை உச்சரிப்பார். எங்கள் வீட்டில் சாதாரணமாக, ஏதேனும் விசேஷம் நடந்தால் அதற்கு அவர் இல்லாம லிருந்தால் அதில் எங்களுக்கு மகிழ்ச்சி கிடையாது. முடிவாகச் சொல்லவேண்டுமானல், அவர் வேறு வகுப்பினராயினும், எங்கள் குடும்பத்தில் சிறந்த ஒருவராகவே மதிக்கப்பட்டு வந்தார். ஆகவே, அதில் எங்கள் உற்றாரெல்லாம் பொறாமை கொண்டு பலவாறு பிதற்றலாயினர். ஆனால், நாங்கள் அதை யெல்லாம் பொருட்படுத்தவில்லை.

இவ்வாறாக, அவ்விளைஞர் குடும்பத்தோழராய் விடவே, என் தந்தை முதலியவர்களே யன்றி, பெண் பாலாராகிய யாங்கள் மூவரும்கூட யாதொரு விகற்பமுமின்றி அளவளாவிப் பழகி வந்தோம். அவர் என் தந்தை முதலியவர்களை விட உலக நிகழ்ச்சிகளையும் விநோத சம்பவங்களையும் நன்கு அறிந்து வருபவராதலால், அவர் அவ்விஷயங்களை எங்களுக்கு இனிது எடுத்துச் சொல்ல யாங்கள் அவரைச் சூழ்ந்து உட்கார்ந்து கேட்டு மகிழ்வோம். எனது தந்தை, அண்ணன் ஆகியவர்கள் முன் வரவும் நாணங் கொள்ளும் புது மணப் பெண்ணாகிய என் தம்பி மனைவி கூட இவரைத் தன் உடன் பிறந்த சகோதரராகப் பாவித்து அளவளாவி வந்தாள். பெண்களாகிய எங்களுக்குள் ஏதேனும் குழப்பம் விளைந்தால், அதை அவரிடம் முறையிட்டுத் தீர்த்துக் கொள்வது எங்கள் ஒவ்வொருவரது வழக்கமுமாயிற்று. அவர் எங்கள் முறையீட்டைப் பொறுமையாகக் கேட்டு எங்கள் ஒவ்வொருவருக்கும் இதமாக வார்த்தைகள் சொல்லி எங்க ளிடையே ஒற்றுமையையும் அன்பையும் உண்டாக்கி வந்தார்.

இதனால் என் அண்ணி எனக்குச் செய்து வந்த இடையூறு இல்லாது போயிற்று. என் அண்ணியும் தன் தங்கையோடு சேர்ந்து என்னைக் கொடுமைப்படுத்த எண்ணி யிருந்த எண்ணத்தை நிறைவேற்ற இயலாதவளானாள். அவள் அருங்குண மணியாகிய இவ்வாலிபருக்கு மிகவும் கட்டுப்பட்டு அடங்கி நடந்து வந்தாள். என் தந்தையை-ஏன் என் அண்ணனையும்-நடுங்கச் செய்து ஆர்ப்பரிப்பவள், இவ் வாலிபரின் காலடி யோசையைக் கேட்டவுடனே உரக்கப் பேசுவதையும் நிறுத்தி விடுவாள். புற்றிலிருந்து சீறி எழுந்து படத்தை விரித்து ஆடும் நல்ல பாம்பு குழலோசையைக் கேட்ட அளவிலேயே ஆர்ப்பரித்து ஆடுவதை விடுத்து அசை வற்று நின்று விடுவதுபோல, என் அண்ணி அவ்வாலிபரின் வசீகர வதனத்தின் முன் பணிந்து விடுவதைக் கண்டு யான் பலகால் வியப்புறுவதுண்டு. 'நல்லார் நற்குணத்தின் முன், கொடியார் கொடுங் குணம் தலை காட்டாது' என்னும் ஆன்றோர் வாக்கின் உண்மையை இவ்விடத்தில் உணர்ந்து உள்ளுற மகிழ்ந்தேன்.

ஆடவரில் சிறந்த நம்பியாகிய அவ்வாலிபரிடத்தில் மற் றொரு விசேஷ குணத்தை யான் கண்டேன். அதாவது, அவ் வாலிபர் என் அண்ணி, அவளது தங்கையான பூங்கொடி ஆகியவர்களிடத்தில் பலகால் தனித்துப் பேசுவார். ஆனால் என்னோடு அவர் தனித்துப் பேசுவது கிடையாது. அவ்வாறு ஏதேனும் தனித்துப் பேச சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அதிக நேரம் என்னோடு பேசமாட்டார். அவர் அவ்வாறு பேச விரும்பவில்லை என்பதை அவர் யான் கேட்கும் விஷயங்களுக்குத் தகுந்த பதில்களை விரைந்து சொல்லி விட்டுப் போக முயற்சிப்பதிலிருந்து யான் அறிந்தேன். யான் வேண்டுவன எதுவாயினும் அவற்றை யெல்லாம்

எவ்வாறாயினும் விரைந்து அளித்து என் நலத்தில் கண்ணுங் கருத்துமாய் இருக்கும் அவ்வாலிபர் என்னிடம் தனித்துப் பேச விரும்பாததற்குக் காரணமென்ன என்று யான் பலகால் ஆராய்ந்தும் உண்மை யறியாது மனவேதனை யுற்று வருந்தியிருக்கிறேன். ஆனால், பின்னர் அதன் காரணத்தை யறிந்ததும் யான் அவரது பெருந் தன்மையான குணத்தைப் போற்றிப் புகழாதிருக்க முடியவில்லை. அவரை யான் மக்களுள் சிறந்த ஒருவராகவே மதிக்கலானேன்.

அது நிற்க, எங்களுக்கு அவரது நட்பு ஏற்பட்டு நான்கைந்து வருடங்களாயின. இதனிடையே அவர் பொதுவாக எங்கள் குடும்பத்திற்கும் சிறப்பாக எனக்கும் செய்த உதவிகள் அளவிறந்தன. அவைகளுக்காக எனது குடும்பத்தாரும் யானும் அவருக்கு எழுபிறப்பும் நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறோம். அவர் எங்களுக்குச் செய்யும் நன்மைகளை முன்னிட்டும், அவரது நற்குண நற்செய்கைகளைக் கருதியும் அவரது மூகவசீகரத்தைக் கண்டு மகிழ்ச்சியுற்றும் வந்த எனக்கு அவரைக் கண்டது முதலே அவரிடத்து ஒருவித அன்பு இயற்கையாகவே பிறந்தது. அவ்வன்பின் காரணமாக யான் அவரை எனது சகோதரர்களினுஞ் சிறந்தவராகவே மதித்து வந்தேன். அவரது சுந்தரமான முகத்தையும், அமைதியே வடிவாய கம்பீரத் தோற்றத்தையும் காண்பதினும், அவர் குமுதம் போன்ற வாயிலிருந்து வரும் இனிய மொழிகளைக் கேட்பதிலும் எனக்கு மகிழ்ச்சி மிகுதியும் ஏற்பட்டது. அவர் என் தந்தையோடு, தற்போது சமூகமும் சமயமும் இருக்கும் சீர்கேடான நிலையையும், அவைகளைச் சீர்திருத்திப் பண்டை நிலைக்குக் கொண்டுவர வேண்டிய அவசியத்தையும் பற்றிப் பேசி, நமது மூதாதையர்களாகிய பண்டைத் தமிழர்களின் உயரிய சமூக

வாழ்க்கையும் உண்மைச் சமய நிலையும் சுயநல வெறியர்கள் ஒரு சிலராலேயே இழிநிலை யடைந்து மக்கள் பகுத்தறிவிற் கொவ்வா முறையில் மாறிய தென்பதையும் வலியுறுத்திக் கூறுவார். எனவே, நமது சமூகமும், சமயமும் பண்டைய உயரிய நிலையை அடைய வேண்டுமானால், காந்தியடிகள் போன்ற பெரியோர்கள் கூறுகிறபடி சமய வேறுபாடு களையும், சாதி பேதங்களையும் ஒழித்து, ஏகதெய்வ வழிபாட் டையும், யாவரும் தமிழர்கள் என்ற கொள்கையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், பெண்களுக்குக் கல்வி யளித்தல், அவர்களை ஆண்களோடு சமத்துவமாக நடத்தல், ஆண் மக்களைப் போல மாதர்களுக்கும் சொத்துரிமை யளித் தல், மகளிர் தாங்களாகவே கணவன்மாரைத் தேர்ந் தெடுத்துக் கொள்ளச் செய்து பெற்றோர்கள் அதற்குத் துணை நிற்றல், இளம் வயதிலேயே கணவனை யிழந்த பெண் ணுக்கு மறுமணம் புரிந்து மகிழச் செய்தல் ஆகியவை களைச் செய்து இந்து சமூகத்தை யுயரச் செய்ய வேண்டு மென்றும் கூறுவார். என் தந்தை தமிழ் வேதமாகிய திருக் குறளை யோதியிருந்தும், பிற்காலப் புலவர்களால் கட்டப் பட்ட புராண இதிகாசக் கதைகளை உருப்போட் டிருந்தார்; ஆதலால், இச் சீர்திருத்தங்களின் நுட்பங்கள் குறுகிய மனப்பான்மை கொண்ட அவரது அறிவுக் கெட்டவில்லை. ஆகையால், அவர் பண்டைய பழக்க வழக்கங்களும் நூல் களுமே சரியென அவ்வாலிபரோடு வாதிப்பார். எனினும், அவ்வாலிபர் தக்க காரணங்களைக் காட்டி அச் சீர்திருத்தங் களால் ஏற்படும் நன்மைகளை யெடுத்துக் கூறும்போது என் தந்தை பதில் சொல்ல முடியாது விழிப்பார். இந்நியாய வாதங்களை யெல்லாம் நாங்கள் கேட்டு, அவ் வாலிபரின் அறிவு நுட்பத்தையும், வாக்கு வன்மையையும் கண்டு மகிழ் வடைவோம்.

ஆருவது அதிகாரம்

காதல் தாபமும் கடிதத் தூதும்

இவ்வாருக நாளாக ஆக, யான் அவர்பால் கொண்டிருந்த சகோதர நேயம் காதலாக மாறியது. அக்காத லுணர்ச்சி என்னுள் எழ எழ, என் மனவேதனை யதிகமாயிற்று. யான் அவரிடத்துக் கொண்டிருக்கும் காதலை அவருக்கு எவ்வாறு தெரிவிப்பதென்பது எனக்குப் பெருமலைப்பாகத் தோன்றியது. அவ்வாறு தெரிவித்தாலும் அதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்றும், அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் என்ன செய்வதென்றும் யான் அறியாது மயங்கினேன். இவ்விதமாக இரவும் பகலும் என் மனத்தோடு போராடி, கடைசியாக எவ்வாருயினும் எனது காதலை அவருக்குத் தெரிவித்து விடுவது என்று முடிவு செய்ய லானேன். அவர் இரக்க நெஞ்சமும், சீர்திருத்த உணர்ச்சியும் உடையவராதலால் நிராதரவான நிலையிலுள்ள எனது காதலுக்கு இசைவாரென்ற நம்பிக்கையும் எனக் கேற்பட்டது. இவ்வித முடிவுக்கு யான் வந்தவுடனே என் கருத்தை அவருக்குத் தெரிவிக்கும் வாய்ப்பை நாடலானேன். அவரோடு தனித்துப் பேசி என் கருத்தைத் தெரிவிக்கலாமென யான் முதலில் எண்ணினேன். ஆனல் அவ்வாறு சொல்ல என் மனம் திடமடைய வில்லை. எனவே, அவருக்கு யான் என் கருத்தை விளக்கிக் கூறி ஒரு கடிதமெழுதி முடித்தேன். அதை என் வீட்டாருக்குத் தெரியாது மறைத்து வைத்திருந்தேன். அவர் என் வீட்டுக்கு வந்து எங்களோடு பேசிக்கொண் டிருக்கும்போது, சமயம் பார்த்து என் தந்தை முதலியவர்கள் ஒருவருக்கும் தெரியாது அக்

கடிதத்தை அவர் கையில் கொடுத்து விட்டு அவர் முன் நில்லாது மறைந்தேன். கடிதத்தைப் பெற்ற வுடனே அவர் அச்சமயம் என்ன எண்ணினரோ! அது எனக்குத் தெரியாது. அன்று அவர் எங்கள் வீட்டை விட்டுச் செல்லும் வரை யான் அவர் முன் வராது நாணியிருந்தேன்.

அன்று எங்கள் வீட்டுக்கு வந்து சென்ற அவ்வாலிபர் மீண்டும் ஒரு வாரம் வரை எக்காரணத்தாலோ வரவில்லை. யான் கொடுத்த கடிதத்தை அவர் படித்துப் பார்த்து, 'காமு என்ன அடாத செயல் செய்தாள்' என நினைத்து என்மீது கோபங் கொண்டு வரவில்லையோ என்று எண்ணி யான் மிகவும் பயந்தேன். 'ஐயோ! யான் என்ன செய்தேன்! பேதையறிவின் செயலால் குணக்குன்முன அவ் வாலிபரின் கூட்டுறவை யிழந்தேனே!' என்று பலவாருக யான் கருதி நைந்து நைந்து உருகினேன். என் வீட்டாரும் அவர் வராததற்குக் காரணமென்ன வென்பதை யறியாது வருந்தினர். என் சகோதரர்கள் அவரது வீட்டுக்குச் சென்று பார்த்த சமயத்தி லெல்லாம் அவர் இல்லை யென்ற பதிலே கிடைத்தது. என் தந்தை அவர் வராதது குறித்து பெரிதும் ஆகுலங் கொண்டார்.

யான் மகிழ்ச்சி யெய்தவும், என் வீட்டார் களிகொள்ளவும் ஒரு நாள் அவ் வாலிபர் எங்கள் வீட்டுக்குத் திடீரென தோன்றினர். யான் அச்சத்தோடு அவரது வதனத்தைப் பார்த்தேன். அவர் முகம் சலன மற்று காணப்பட்டது. அவரது முகத்தில் இயற்கையான புன்முறுவல் மிளிர்ந்தது. அவர் எல்லோருடனும் கலந்து பேசினர். என் தந்தை அவர் வராததற்குக் காரணங் கேட்டபோது தமக்கு உத்தியோக முறையில் வேலை யதிகமிருந்ததாகவும் அதனல் தான் கடந்த ஒரு வாரமாகத் தாம்

4

வரமுடியாமல் போகநேர்ந்தது என்றுஞ் சொன்னார். ஆனால் யான் எதிர்பார்த்தபடி என் மனங் குளிர அவர் என்னிடத்தில் பேசவில்லை. பொதுவாக, எல்லோருடனும் பேசுவது போலவே என்னோடும் பேசினார். இவ்வாறாக, சில நாட்கள் கழிந்தன. அவரது உள்ளக் கருத்து இன்னதென்பதை என்னால் அறிய முடியவில்லை. அவர் என் விஷயத்தில் மௌனஞ் சாதிக்கச் சாதிக்க, என் மனக் கவலையும் அதிகமாயிற்று. நான் என் உள்ளத்தில் தோன்றி யிருக்கும் காதலைக் கடிதத்தின் வாயிலாக அவருக்குத் தெரிவித்தும், அக் கடிதத் தூது யாதொரு பயனையும் அளிக்கவில்லையே என்று எண்ணி என் மனம் துயரக்கடலில் ஆழ்ந்தது.

இவ்வாறிருக்க, ஒரு நாள் காலை (அன்று வைகுண்ட ஏகாதசி) ஊரிலிருந்து வந்திருந்த என் மாமி முதலியவர்களோடு அவர்கள் வேண்டுகோளின்படி யான் கோவிலுக்குப் போயிருந்தேன். அன்று கோவிலில் கூட்டம் அதிகமாயிருக்கவே, கோவிலுக்குள் வரமுடியாதென்று சொல்லி யான் எங்களோடு வந்திருந்த ஒரு சிறு பெண்ணை மட்டும் துணைக்கு நிறுத்திக்கொண்டு மாமி முதலியவர்களைக் கோயிலுக்குள் போகச் செய்து கோயில் வாயிலில் ஒரு பக்கமாக நின்றிருந்தேன். கோயிலுக்குச் செல்வோரையும், வருவோரையும், அவர்கள் செய்யும் ஆரவாரத்தையும் கவனித்துக்கொண்டு நின்ற என் கண்ணில் கோயில் பக்கமாக என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அவ் வாலிபர் செல்வது தெரிந்தது. அவர் ஏதோ வேலையாக அப்பக்கம் சென்றுகொண் டிருந்தார் போலிருக்கிறது. அவரைக் கண்டதும் எனக்கு அளவிலா மகிழ்ச்சி யுண்டாயிற்று. உடனே யான் என்னுடன் இருந்த சிறுமியை நோக்கி அவரைக் காட்டிக் கூப்பிட்டு வரச் செய்தேன். இரண்டு

நிமிடங்களுக் கெல்லாம் அவர் அச்சிறுமியோடு யான் இருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் முகத்தில் வியப்புக்குறி காணப்பட்டது. அவர் என்னை யணுகியதும் என்னைப் பார்த்து, 'என்ன காமாட்சி! இங்கே நிற்கிறாய்? நீ யாருடன் வந்தாய்? அவர்கள் எங்கே?' என்று ஒன்றன் பின் ஒன்றாகப் பல கேள்விகளைக் கேட்டார். யான் அவற்றிற் கெல்லாம் தழுதழுத்த குரலில் பதிலளித்துவிட்டு, அவரை நோக்கியவாறே தலைகுனிந்து கண்களில் நீர் சோர விட்டு நின்றேன்.

எதிர்பாரா வகையில் யான் கண்ணீர் உகுப்பதைக் கண்ட அவ்வாலிபர் பதைபதைத்தவராய் என்னிடம் நெருங்கி, "காமு! எதற்காக அழுகிறாய்? காரணம் என்ன? சொல்! அழாதே! யாராகிலும் பார்த்தால் தவறாக நினைத்துக் கொள்வார்கள். கண்ணைத் துடைத்துக் கொள். விஷயத்தைச் சொல்" என்று தம்மை மறந்து தம் கைக்குட்டையைச் சட்டைப் பையிலிருந்து எடுத்து என் முகத்துக் கருகே கொண்டு வந்தார். இதற்குள் என்ன நினைத்தாரோ! தம் கையைப் பின் வாங்கிக்கொண்டு கைக்குட்டையைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார். யான் கண் கலங்கியதைக் கண்டதும் அவர் மெய் பதறியதையும், தம்மை மறந்து செய்த செயலையும் பார்த்த யான், அவர் என்னிடத்து உண்மையாக எவ்வளவு தூரம் பரிவு கொண் டிருக்கிறார் என்பதை அறிந்து மனத்தினுள் மகிழ்ந்தேன்.

பின்னர், யான் என் சேலையின் முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கடைக் கண்ணால் நோக்க, "காமு! விஷயமென்ன சொல்? ஏன் தயங்குகிறாய்! ஜனக்கூட்டம் நிறைந்துள்ள இவ்விடத்தில் நாம்

இருவரும் தனித்திருப்பது சரியல்ல. பலர் பலவிதமாகப் பிதற்றுவதற்கு ஏதுவாகும்" என்று சொன்னார்.

யான் மிகவும் தாழ்மையாக, "தாங்கள் எனக்கு வாக்குறுதி யொன்று தருதல் வேண்டும்" என்றேன்.

அவர், "எவ் விஷயத்திற்கு வாக்குறுதி?" என்று கேட்டார்.

அதற்கு யான், "தங்களிடத்து விண்ணப்பிக்க வேண்டிய வேண்டுகோள் ஒன்று இருக்கிறது. அதை நிறைவேற்றுகிறேன் என்று உறுதி கூறுதல் வேண்டும்" என்றேன்.

உடனே அவர், "அது என்ன வேண்டுகோள்? உனக்கு நன்மை பயப்பது எதுவாயினும் அதைச் செய்ய யான் தயங்கேன். இது உறுதி" என்று கூறினார்.

நான் மேலும் ஏதோ சொல்ல வாயெடுக்கையில் என் மாமியும் மற்றவர்களும் கோயிலுள் இருந்து வந்துகொண்டிருந்ததை என்னுடன் இருந்த சிறுமி தெரிவிக்க, யான் சொல்ல நினைத்ததைக் கூருது நிறுத்தி விட்டேன்.

என் மாமி முதலியோர் வருகிறார்கள் என்பதைக் கேட்ட அவ்வாலிபர், "காமு! நான் சென்று வருகிறேன்; அப்புறம் பேசிக் கொள்ளலாம். யான் இன்னும் பேசிக் கொண் டிருப்பேனானல், உன் மாமி முதலியோர் ஏதேனும் தவருக நினைத்து உன்மீது பழி சுமத்துவார்கள். அவர்கள் வருவதற்குள் யான் செல்வதே நல்லது" என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு விரைந்து சென்றார்.

அவர் சென்ற திக்கையே பார்த்து பெருமூச்செறிந்த யான் என் மாமி முதலியோர் அருகில் வந்ததும் அவர்க

ளோடு வீடு திரும்பினேன். எதிர் பாராது அவ்விடத்தில் அவரைச் சந்திக்க நேர்ந்ததையும், அவர் தந்த வாக்குறுதியை யும் நினைந்து நினைந்து யான் மன ஆறுதலை யடைந்தேன். அவரை மீண்டும் தனியாகக் கண்டு பேசும் சந்தர்ப்பம் எப் போது வரும் என்று அந்நாளை எதிர்பார்த்தவா றிருந்தேன்.

ஏழாவது அதிகாரம்

"கண்மணியே! கைவிடேன்!"

இவ்வாறு இரண்டு மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் மாலைக்காலம். யான் விளக்கை யெல்லாம் ஏற்றி வைத்து விட்டு, பூஜையறைக்குச் சென்று வழக்கம்போல் என் நிரா தரவான நிலைமையையும், என் எண்ணம் முடிய வேண்டி யதையும் பற்றி முறையிட்டு இறைவனை இறைஞ்சிவிட்டு வெளி வந்தேன். அச்சமயம் என் உள்ளங் குடிகொண்ட அவ் வாலிபர் உள் நுழைந்தார். அவரைக் கண்டதும், என் மனம் என்று மில்லாதவாறு குதூகலித்தது.

அவர் என்னைப் பார்த்து, "அப்பா முதலியவர்க ளில் லையா?" என்று கேட்டார்.

அச்சமயம் என் தந்தை எங்கோ சென்றிருந்தார். என் அண்ணனும் அண்ணியும் உறவினர் வீட்டு விவாக மொன்றுக்குச் சென்றிருந்தனர். என் தம்பி உத்தியோகத் திலிருந்து வரவில்லை. ஆகவே, வீட்டில் யானும் என் தம்பி மனைவியுமே இருந்தோம். அவளும் சமையல் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

எனவே, யான் அவர் கேட்டதற்குப் பதிலாக, "எல்லாரும் வெளியே சென்றிருக்கிறார்கள்" என்றேன்.

"அப்படியானால் யான் அப்புறம் வருகிறேன்" என்று கூறி அவர் வெளிச் செல்ல அடி எடுத்து வைத்தார்.

யான் அவரை இடைமறித்து, "இருங்கள்; போகலாம். இவ்வளவு அவசரமேன்? சிறிது தாமதித்தால் தந்தை வந்து விடுவார்; உட்காருங்கள் ஊஞ்சலில்" என்று உபசரித்தேன்.

அப்போது அவர், "காமு! இருக்கட்டும்; சிறிது வேலையிருக்கிறது. சென்று உடனே வந்து விடுகிறேன்" என்று மீண்டுஞ் செல்ல முயன்றார்.

உடனே யான், "அவ்வாறானால் ஒரு வார்த்தை மட்டும் கேட்டு விட்டுப் போங்கள். சிறிது இப்படி வாருங்கள்" என்று அழைத்தேன்.

இதற்கு மேல் அவர் என் வற்புறுத்தலை மீறிச் செல்ல மனம் வராமல் கூடத்திற்குச் சென்று ஊஞ்சலில் அமர்ந்தார்.

யான் தெருப்பக்கமாக உள்ள உட்கதவைத் தாளிட்டு விட்டு அவரருகில் சென்று நின்றேன்.

அவர், "காமு! ஏதோ சொல்லவேண்டுமென்றாயே! என்ன?" என்று கேட்டார்.

யான் மெலிந்த குரலில், "அன்று தாங்கள் வாக்குறுதி கொடுத்தீர்களே! நினைவிருக்கிறதா?" என்றேன்.

அதற்கு அவர், "ஆம். அதற்கென்ன! நீ என்ன சொல்லுகிறாயோ அதைச் செய்கிறேன். உனக்கென்ன வேண்டும்?" என்று கேட்டார்.

உடனே யான், "எனக்கு ஒன்றும் வேண்டுவதில்லே; தங்களுடைய நீங்கா அன்புதான் எனக்கு வேண்டும்" என்றேன்.

அவர், "நீ சொல்வது விளங்கவில்லேயே! நான் இப்போது உன்னிடத்தில் அன்பு கொண்டிருக்க வில்லேயா? உன்னே என் உடன் பிறந்த சகோதரியினுஞ் சிறந்தவளாக மதித்து உனக்கு ஆவன செய்து வருகிறேனே! இதை நீ அறியவில்லேயா?" என்று வியப்போடு கேட்டார்.

நான், "தாங்கள் என்னிடத்தில் கொண்டிருக்கும் அன்பைப் பற்றியோ, செய்து வரும் நன்மைகளேப் பற்றியோ நான் இல்லேயென்று சொல்ல வரவில்லே. தனிப்பட்ட முறையில், ஒரு நங்கை வாலிபரொருவரிடத்து வேண்டும் அன்பு எத்தன்மையதா யிருக்குமென்பது தங்களுக்குத் தெரியாதா? தங்களுக்கு இதற்குமுன் கடித மூலமாக என் கருத்தைத் தெரிவித்திருந்தும், யான் இப்போது கேட்பது எதுவா யிருக்கு மென்பதைத் தாங்கள் அறிந்து கொள்ளாதது வியப்பா யிருக்கிறது. தாங்கள் ஒரு நூதன மனிதராகவே விளங்குகின்றீர்கள். யான் தங்களே உள்ளன்போடு காதலிக்கிறேன். தாங்கள் என் காதலே யேற்றுக் கொண்டு என்னேக் காப்பாற்றுதல் வேண்டும்" என்று உணர்ச்சியால் உந்தப்பட்டு உருக்கமாகக் கூறி முடித்தேன்.

இதைக் கேட்டதும் அவ் வாலிபர் ஊஞ்சலே விட்டு எழுந்து, "என்ன! நீ என்னேக் காதலிக்கின்ருயா! யாஹும் உன்னேக் காதலிக்க வேண்டுமா! அது முடியாத காரியம். காமு! வேண்டாம். யான் அதற்கு இணங்கேன். உனக்கு வேண்டிய உதவிகளே இனியுஞ் செய்து உன்னேக் காப்பேன். ஆயின், உன் விருப்பப்படி உன்னேக் காதலிக்க முடியாது. இதுவரை இருந்ததுபோல் நாம் இருவரும்

சகோதர முறையிலேயே இருந்து வருதலே நல்லது.—ஆசிரியன் மகள் அல்லவா நீ! யான் உன்னைக் காதலிக்கலாமா? இது தகுமா? யான் நன்றி கொன்ற பாவியாகவன்றோ ஆவேன்? யான் உன்னைக் காதலிப்பது துரோகமான செயலல்லவா? ஊரார் என்னைப்பற்றி பழி தூற்றுவார்களா? யான் உனது இவ் விருப்பத்துக்கு ஒருப்படேன்! ஒருப்படேன்!! வேறு யாரையாகிலும் நீ விவாகஞ் செய்து கொள்ள விரும்பினால் சொல். யான் அவ் விஷயத்தில் உனக்கு உதவி செய்து மணம் முடித்து வைக்கிறேன். என் கண்ணல்ல! இவ் வெண்ணத்தை விட்டு விடம்மா!" என்று கனிந்த மொழிகளில் கூறலானார்.

அவரது அவ் வார்த்தைகளைக் கேட்டு யான் சிறிது நேரம் அப்படியே மலைத்து நின்று விட்டேன். நான் பின்னர், திடமான முடிவுக்கு வந்து, "அன்பரே! என் உயிர்த் தலைவரே! யான் பெண்ணாய்ப் பிறந்து இதுவரை யாரையும் மனமாற காதலித்ததில்லை. என் அம்மான் மகன் ஒருவனின் வஞ்சக வார்த்தையினால் மனம் பேதலித்தது தவிர, மற்ற யாரையும் என் மனம் விரும்பியதில்லை. தங்களைக் கண்டதும் என் உள்ளம் தங்கள் திருவடியில் தாழ்ந்தது. ஆனால் அது முதலில் சகோதர நேயத்தில் அரும்பியது. நாளடைவில் அந்நேயம் காதலாக மலர்ந்தது. அதை இதுவரை மறைத்து வைத்திருந்தேன். அதனால் யானடைந்த மன வேதனை சொல்லி முடியாது. எனவே, இன்று தங்கள் முன் என் காதலை வெளியிட்டு விட்டேன். தாங்கள் அதை அன்புடன் ஏற்றுக் கொண்டால் யான் உய்ந்தேன். இல்லையேல் எனக்கு அருகிருக்கும் அலைகடல் தான் கதி. அதற்குமேல் எனக்கு ஒன்றுஞ் சொல்லத் தெரியாது" என்று கூறி அயர்ந்தேன். யான் ஆகாயத்தில் பறப்பது

போல் எனக்குத் தோன்றியது. உடல் படபடத்தது. நா தழு தழுத்தது. கண்களில் நீர் ததும்பியது. யான் தள்ளாடலானேன்.

என் நிலையை அறிந்த அவ்வாலிபர் உடல் பதறியவராய் இரு கைகளையும் நீட்டியவாறே, "என் கண்மணியே! காமு! அஞ்சாதே! உன் மன நிலை இதுவாயின், அதை நிறைவேற்றுவதே என் கடன். இதனால் எனக்கு எவ்வளவு துன்பம் வரினுஞ் சரி; பலர் என்னைப் பழி தூற்றினுஞ் சரி; எதற்கும் அஞ்சேன். வருவது வருக! என் கடமையைச் செய்யும் விஷயத்தில் எவ்விதக் கட்டுப்பாட்டையும் பொருட் படுத்தேன். யானும் உன்னைக் காதலிக்கிறேன். யானும் உன்னை என் ஆருயிர்க் காதலியாய் ஏற்றுக்கொண்டேன். என் உயிருள்ள வரை உன்னைக் கைவிடேன். இது உறுதி" என்று கூறி என்னை அப்படியே சேர்த்து அணைத்து மார் புறத் தழுவி என் அதரங்களிலும், கன்னங்களிலும், நெற்றியிலும் மாறி மாறி முத்தமிட்டார். யான் அவரது பிணைப்பில் கட்டுண்டதும் இருவரும் ஒருருவ மாயினோம். அப்புறம் யான் என்பது ஒரு பொருள் இருப்பதாகவே நினைக்க வில்லை. உண்மையாகவே என்னை மறந்தேன்.

இந்நிலையில் எவ்வளவு நேரம் யாங்கள் இருந்தோமோ எனக்குத் தெரியாது. மணி எழடிக்கும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்தோம். யாங்கள் ஒன்று சேர்ந்திருந்த சமயத்தில் என் தம்பி மனைவி அங்கு வந்து பார்த்து விட்டுச் சென்றாளோ என்று எனக்குச் சந்தேக மேற்பட்டது. யான் அச்சத்தோடு மெல்ல நடந்து சமைய லறையினுள் எட்டிப் பார்த்தேன். அவள் மிகுந்த ஊக்கமாகச் சமையல் வேலைகளைக் கவனித் துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது. எனவே, அவள்

பார்த்திருக்க மாட்டாள் என்று யான் மனந்தேறி, என் காதலர் இருக்கு மிடத்தை யடைந்தேன். அவர் தாம் இனி இங்கிருப்பது சரி யல்ல வென்றும், பிறகு வருவதாகவும் கூறி விட்டு விரைந்து வெளிச் சென்றார்.

இங்ஙனம், என் காதலர் அருளை யான் பெற்ற பின்னர், என் உயிர்த்துணைவரிடம் ஒரு பெருமாறுதல் காணப் பட்டது. முன்னெல்லாம் என் தலைவர் எங்கள் வீட்டுக்கு வந்தால், என் தந்தையுடன் பேசி முடிந்தவுடனே, என் அண்ணி முதலியவர்களிடம் அளவளாவி மகிழ்ந்து அவர்கள் குறைகளைக் கேட்டு அவற்றிற்கு வேண்டுவன செய்வார். இப்போதோ அவர்களிடம் அவர் அவ்வளவாக அளவளாவுதல் வைத்துக் கொள்ளவில்லை. என் அண்ணியே ஏதேனும் சொன்னால் அப்போதுதான் அவளுடன் அது சம்பந்தமாகப் பேசுவார். என் தந்தையுடன் உரையாடின வுடனே என்னைக் கண்டு யான் சொல்லுவனவற்றைக் கேட்டு மனமகிழ்ந்து நீண்ட நேரம் என்னோடு பேசிக் கொண் டிருந்துவிட்டுச் சென்று விடுவார்.

நாளடைவில் இம்மாறுதலை யுணர்ந்த என் அண்ணி அது காரணமாக என்மீது மேலும் பொறாமை கொள்ளலானாள். எனவே, அவள் ஒரு நாள் தன் தங்கையைப் பார்த்து, "பூங்கொடி! பார்த்தாயா! அவர் நம்மிடம் முன் போலப் பேசுகிறாரா என்று. நாம் ஏதேனுஞ் சொல்லப் போனாலும் அதை அவர் காதிலும் வாங்கமாட்டே னென்கிறாரே! எப்போது பார்த்தாலும் அவ் வறுதலியோடு தான் பேசிக் கொண்டும் சிரித்துக்கொண்டு மிருக்கிறார். அம் முண்டை அம் மனிதரை மாய்மால மெல்லாஞ் செய்து தன் வசப் படுத்தி விட்டாள். அவள் வலையில் மாட்டிக் கொண்டதா

லேயே அவர் நம்மை ஏறெடுத்துக் கூடப் பார்க்கமாட்டே னென்கிருர்" என்று சொன்னுள்.

இதைக் கேட்ட பூங்கொடி, "அக்கா! அவ்வாறு அபவாதஞ் சொல்லாதே! அவர் அப்பேர்ப்பட்டவ ரல்லர் நம் தாயின் வேண்டுகோளின்படி அவர் நம்மைத் தம்முடன் பிறந்த சகோதரிகளைப் போலவே நினைத்து அன்பு பாராட்டி வருகிருர். நாம் கேட்கா முன்னமே அவர் நமக்கு எவ் வளவு உதவி செய்திருக்கிருர்? அவர் தயாள குணம் யாருக்கு வரும்? நம் மதனி (மைத்துனி) நிராதரவா யிருக்கி ருளே என்ற எண்ணத்தால்தான் அவர் அவளிடம் அதிகஞ் சலுகை காட்டுகிருர். அதுவன்றி, நீ சொல்லும் வண்ணம் அவர் அவள் வலையில் மாட்டிக்கொண்டு அறிவிழக்கக் கூடி யவரல்லர்! இவ்வளவுநாள் அவரோடு பழகியும் அவர் குணம் உனக்குத் தெரியவில்லையே! இவளும் அப்பேர்ப்பட்ட தீச் செயலைச் செய்யக் கூடியவள் அல்லவே! அவரோடு தனி யாகப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருப்பதினு லேயே அவள் அவரிடம் கள்ள நட்பு கொண்டிருக்கிருள் என்று சொல்லி விடலாமா! நாம் அவரோடு தனியாக ஒரு அறையி லிருந்து நீண்ட நேரம் பேசிக்கொண்டிருக்க வில்லையா? நம் கணவன்மார் அது பற்றிச் சந்தேகிக்கலாம் அல்லவா? அவர்கள் இவர் குணத்தை யறிந்திருப்பதனுல் தானே, நாம் அவரோடு தனியாகப் பேசி யிருக்கும்போது அங்கு வரக்கூட மாட்டே னென்கின்றனர். நம்மை அச் சமயம் அழைக்கவும் அஞ்சுகின்றனர். இவ்வாறிருக்க, நீ மதனிமீது கொண்ட துவேஷத்தால் விபசாரிப் பட்டங் கட்டி வைப்பது சரியல்ல. இதை யாராகிலும் கேட்டால் ஒன்று பத்தாக்கி ஊரெல்லாம் தூற்றி விடுவார்கள்! ஆத லால், நீ இனி இவ்வாறு சொல்லாதே, அக்கா!" என்ருள்.

உடனே, என் அண்ணி தன் தங்கைமீது சீறிவிழுந்து, "இவள் நிரம்ப நியாயங் கற்றவள்! எனக்குப் புத்தி சொல்ல வந்து விட்டாள்! ஏதோ விஷயம் இன்னதென்று சொன்னால், அதைக் கேட்டுக்கொண் டிருப்பதை விட்டு, ஏதேதோ அளக்கிறாள். எனக்கு அவர் தன்மை தெரியாதா! அவர் அருங் குணமணி யென்பதை யானறியேனா? இருந்தாலும், பெண்கள் தளுக்கு மினுக்கில் மயங்காத ஆடவர்களும் உண்டோ! காமு எத்தனை மாயவித்தை யெல்லாஞ் செய்து அவரை மயக்கி வந்திருக்கிறாள் என்பது உனக்குத் தெரியுமா? அவர் அவள் காம வலையில் கட்டுப்பட்டது அவருடைய தவறல்ல. அவளுடைய சூழ்ச்சித்திறனே அதற்குக் காரணமாகும். இதெல்லாம் அறியாப் பெண்ணாகிய உனக்கெப்படித் தெரியும்? உலகானுபவ மில்லாத உன்னிடம் இவ்விஷயத்தைச் சொன்னதே தவறு" என்று கூறிக் கோபமாக அவ்விடத்தை விட்டு எழுந்து போய் விட்டாள். இவர்கள் பேசிய தனைத்தும் என் காதில் விழுந்தது. அப்போது என் மனம் எவ்வாறிருக்கும்! 'நம் களவொழுக்கத்தை இவள் எவ்வாறோ அறிந்து கொண்டாளே' என்று நான் ஏங்கினேன். ஆனால் இதைப்பற்றி என் காதலரிடம் யான் சொல்லவில்லை.

மற்றொரு நாள் யானும் என் காதலரும் என் அறையில் பேசிக்கொண் டிருக்கும்போது, காதற் பெருக்கால் யான் அவரை மார்புறத் தழுவி முத்தமிட்டேன். அச்சமயம் ஏதோ காரியமாக என் அறையை நோக்கி வந்த என் அண்ணி இக் காட்சியைக் கண்டு விட்டாள். இப்போது நான் கையும் மெய்யுமாக அவள் முன்னர் அகப்பட்டுக் கொண்டேன். அவள் பார்த்துச் சென்றது என் காதலருக்குத் தெரியாது. அவள் இக்காட்சியைப் பார்த்து



.........அண்ணி நாங்கள் அளவளாவி யிருக்குங் காட்சியைக் கண்டுவிட்டாள்.

—பக்கம் 60.

விட்டுத் திரும்பும்போது என்னைப் பயமுறுத்தும் பாவனை யாகச் சென்றாள். அச் சம்பவத்திற்குப் பின்னர் நான் என் அண்ணியைப் பார்க்கும்போ தெல்லாம் நடுங்குவேன். அவள் கண்ணில் படாமலிருக்கவே விரும்புவேன். ஆனால் என் அண்ணி அதைப்பற்றி யொன்றும் கேட்கவில்லை. என் காதலரோ டல்லாது மற்றாரோடாகிலும் நான் அவ்வாறு இருந்ததைப் பார்த்திருப்பாளே யானல், அவள் அப்போதே அவ்விஷயத்தைப் பகிரங்கப்படுத்திச் சந்தி சிரிக்க வைத் திருப்பாள். என் காதலரிடம் அவள் வைத்திருந்த அன்பும் மதிப்புமே அவளை அவ்வாறு செய்யாதவாறு தடுத்தது. எனினும், அவள் என்மீது கொண்ட பொறாமை வளர வளர அதை யடக்கிவைக்க முடியாது, எங்கள் வீட்டுக்கு வந்து செல்லும் எதிர்வீட்டுப் பெண்களிடம் பேச்சோடு பேச்சாக விஷயத்தை வெளியிட்டு விட்டாள். அப்பெண்கள் இதை ஊர் முழுதும் அலர்தூற்றி என்னைப் பழிக்கலானார்கள். அப் பெண்களின் தகுதி இன்ன தென்பதை, நீங்கள் அறிந் தால் அவர்களது செய்கையைக் கண்டு ஆச்சரியப்பட மாட் டீர்கள். அவர்கள் காமப் பேய்கள்; கீழ்மைக்குணம் படைத்தவர்கள்; அவர்களுக்குக் கணவன்மாரிருந்தும் மற் றும் பல ஆடவர்களோடு அவர்கள் கள்ள நட்பு கொண்டு தகாத செய்கைகளில் ஈடுபட்டிருப்பதும், தாய், மகள், மரு மகள் அனைவரும் அத்தொழிலையே சிறப்பாகக் கொண் டிருப்பதும் ஊரறிந்த இரகசியம். அத்தகைய அப்பெண் கள், கணவனை இளமையிலேயே இழந்து சிற்றின்ப சுகத்தை யறியா திருக்கும் யான், உத்தம புருடரான ஒருவ ரைக் காதலராகக் கொண்டு கூடி வருவதை இழிவாகக் கரு திப் பழிப்பது வியக்கத்தக்க தல்லவா!

எட்டாவது அதிகாரம்

அன்னியின் வம்பும் தந்தையின் கட்டளையும்

இவ்வாறு ஊர் முழுதும் பரவிய இச்செய்தி என் தந்தையின் காதுக் கெட்டியது. அவர் இதைக் கேட்டதும் என்ன நினைத்தார், என்ன செய்தார் என்பதைச் சொல்வதற்கு முன், அவர் பொதுவாகப் பெண்களைப்பற்றி எந்த விதமான அபிப்பிராயங் கொண்டிருந்தார் என்பதையும், அவர் தகுதி என்ன வென்பதையும் பற்றி அவரோடு வாழுள் முழுதும் உடனிருந்து அனுபவித்து வந்த என் தாய் சொல்லிய சில விஷயங்களை இங்கே குறிப்பிடுவது அவசியமென நினைக்கிறேன். ஆனால், அவரைப்பற்றி நான் குறை கூறுவதாக நீங்கள் எண்ணக்கூடாது. என் தந்தை பொதுவாகப் பெண்ணுலகையே நம்புவதில்லையாம். 'சேலை கட்டின மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கித் தவிப்பர்' என்று கூறிய புலவர் கூட்டத்தில் சேர்ந்தவர் போலும்! தன்னைப்பெற்ற தாயையே அவர் சந்தேகித்தாராம். ஏனென்றால், எனது பாட்டனுக்கு எங்கள் பாட்டி மூன்றாவது தாரமாம். வயது சென்ற கிழவருக்கு வாழ்க்கைப்பட்ட கட்டிளங் குமரியான தம் தாய் தவறான நடத்தையில் இறங்காது எவ்வாறிருக்க முடியுமென்பது அவரது ஆராய்ச்சி யாகும். பின்னர் அழகு மிக்க என் தாயை அவர் மணந்தபோது அழகற்றவராயும், குள்ளமாயுமுள்ள தம்மைத் தம் மனைவி விரும்புவாளா என்று சந்தேகித்து அடிக்கடி என் தாயோடு காரணமில்லாமலே சண்டையிடுவாராம்.

என் தந்தை இளமையிலேயே பிறருக்குத் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தாராம். ஒரு சமயம் ஒரு பார்ப்பன வாலிபரும், நாயுடு வாலிபரும் எங்கள் வீட்டுக்கு வந்து பாடங் கேட்டுக் கொண்டு வந்தார்களாம். அவர்களில் பார்ப்பன வாலிபர் அழகாக இருந்தமையால், எங்கு அவனைக் கண்டு தம் மனைவி மயங்கி அவனோடு கள்ள நட்பு கொள்வாளோ என்று பயந்து, அவர்கள் வந்திருக்கும்போது என் தாயை அடுப்பங்கரையை விட்டு வெளியே வரக்கூடாதென்று கட்டளையிட் டிருந்தாராம். அவ்வாறிருந்தும், அவர் தம் சந்தேகம் நீங்காமலே, அச் சமயம் என் தாய்க்குப் பிறந்த என் அண்ணனையும், என்னையும் அப் பார்ப்பன வாலிபனோடு சேர்ந்து பெற்றதாகவே கூறி அடிக்கடி துன்புறுத்து வாராம். இவ்வாறு தம் ஆண்மையிலேயே ஐயங்கொண்ட மனிதரும் இவ்வுலகிலுண்டோ! இங்ஙனம் தம் மனைவியைச் சந்தேகிக்கும் இவர் தம் ஒழுக்கங் கெடா திருந்தாரோ என்றால், அதுவும் இல்லை. மற்றும் பல பெண்களிடம் இனிமையாகப் பேசி வசப்படுத்துவதில் அவர் மிகவுங் கெட்டிக்காரராம். எங்கள் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரியோடும் அவர் தேக சம்பந்தம் வைத்திருந்தாரென்றால் அவர் தகுதியைப்பற்றி அதிகஞ் சொல்வானேன்? இதைப்பற்றியெல்லாம் என் தாய் கண்டித்தால் அவளை அநியாயமாக அவர் அடிப்பாராம். நானே நேரே பார்த்த ஒரு சம்பவத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். என் தாய் காச நோயால் இறந்தார் என்று முன்னர் சொன்னேனன்றோ? அவள் இறந்த பதினாறும் நாள்—அதாவது உத்தரகிரியை யன்று மாலை அச் சடங்குக்கு வந்திருந்த அவரது பழங் காதலியான கைம்பெண் ணொருத்தியோடு எங்கள் வீட்டு எதிர்வீட்டுப் புறக்கடையில் கூடிக் குலாவி யிருந்

தையை ஏதோ காரியமாக அங்கே சென்ற யானும் மற்றிரு பெண்களும் கண்ணாரக் கண்டோம். ஆனால் நாங்கள் இவ் வெட்கக்கேட்டை வெளியே சொல்லவில்லை. தம் சொந்த மனைவி இறந்த பதினாறும் நாளே வேறொரு மாதோடு எம் மனித னுயி லுஞ் சேருவானா? தூர்த்தன் கூட அவ்வாறு செய்யானே! மகா மேதாவியாகிய இவர் இவ்வித தகாத செயலைச் செய்ய எவ்வாறு மனங் கொண்டாரோ? அறி யேன். அத்தகைய பெரியாராகிய என் தந்தை பெண்ணுல கைப் பழிப்பதை யறிந்து நீங்கள் ஆச்சரியங்கொள்ள மாட் டீர்க ளல்லவா? தன்னைப்போலவே மற்றவர்களு மிருப் பார்க ளென்பதுதானே பெரும்பாலாருடைய எண்ணம்.

இனி, என் தந்தையாரது இத்தவறான கொள்கைக் கேற்ப, தாம் பயிலும் நூல்களினும் பொருள் கொண்டு யாரோடேனும் பெண்களைப் பற்றிப் பேசும்போது சில பாடல்களைப் பிரமாணமாகக் கையாண்டு வந்தார். அதற்கு ஒரு உதாரணஞ் சொல்லுகிறேன்.

ஒரு நாள் என் காதலரும், தந்தையாரும் மகளிர் நிலை மையைப் பற்றிப் பேசி வரும்போது, எனது தந்தையார், "பெண்கள் சபல சித்தம் படைத்தவர்கள்; அவர்கள் மனம் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறும் தன்மை யுடையது. தம் கணவன் அழகு வாய்ந்தவனாகவும், இளமை யுடையவ னாகவும், சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று இனிமையாகப் பாடும் ஆற்றல் வாய்ந்தவனாகவும், மிகவும் நெருங்கிய உற வுடையவனாகவும் இருந்தாலும், மாதர்கள் மற்ற ஆடவர் களைக் கண்ட காலத்து, தங்கள் மனத்தை அவர்கள் மீது செலுத்தாமல் இருக்கமாட்டார்கள். இவ் வுண்மையையே குமரகுருபர சுவாமிகள்,

'ஏந்துஎழில் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயன்உடை இன்சொல்லான் கேள்எனினும் மாதர்க்கு
அயலார்மேல் ஆகும் மனம்.'

என்று அருளி யிருக்கிறார். அவர் மட்டுமா! நம் திருவள்ளுவருங் கூட,

'இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.'

என்று மகளிர் மனம் இடம் பெற்றால் வேறுபடுந் தன்மையை நன்கு விளக்கிக் காட்டி யிருக்கிறார். ஆதலால், மாதரை நம்பலாகாது. அவர்களுக்குக் கல்வி அளிக்கப் படாது. அவர்களைக் கட்டுத் திட்டத்தில் வைத்துக் காத்தல் வேண்டும்" என்று சொல்லிக்கொண்டு வந்தார்.

எனது காதலர் இடை மறித்து, "ஆமாம்; அண்ணா, பெண்கள் மாத்திரந்தான் சபலசித்த முடையவர்களா? ஆண்கள் சபலசித்த முடையவர்க ளல்லரா? மக்கள் முக்குண வயத்தராய் இருக்கும்போது, யார் மனந்தான் கணத்துக்குக் கணம் மாறாதிருக்கிறது? 'திருவினும் நல்லாள் மனைக் கிழத்தி யேனும், பிறர் மனைக்கே பீடு அழிந்து நிற்பர்' என்று நீங்கள் குறித்த குமரகுருபர சுவாமிகளே கூறியிருக்கிற அமுதவாக்கை நோக்குங்கள். பெரும்பாலும் ஆடவர்களே பார்க்கும் மங்கையர் மீதெல்லாம் மனத்தைச் செலுத்தி அவர் பிறகு ஓடித் திரிந்து அலைகின்றனர். அவ்வித மிருக்க, பெண்கள்தான் சபலசித்த முடையவர்கள்; பிற ஆடவர்கள் மீது மனத்தைச் செலுத்தும் இயல்பு வாய்ந்தவர்கள் என்று கூறுவது சிறிதும் அடாது. 'தான் திருடி அயலாரை நம்பான்' என்றும், 'கூத்திக் கள்ளன் பெண்

டாட்டியை நம்ப மாட்டான்' என்றும் வழங்குகின்ற சாதாரண பழமொழிகளுக் கிணங்க, தூர்த்தத் தன்மையுடைய ஆடவர்களே பெண்களை இவ்விதமாகக் குறை கூறுவார்கள். பெண்களிலும் இழிகுணமும் தீய நடத்தையுமுடையவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்க வில்லை. நல்லது என்று இருந்தால் கெட்டதும் கூட இருக்கத்தானே செய்யும்? அதை விட்டு மாதர்கள் எல்லோருமே பிற ஆடவர்கள் மீது மனத்தைச் செலுத்துபவர்கள் என்று கூறுவது ஒரு சார்பான முடிவாகும். அவ்விதம் நாம் கொள்வோமானால், நாம் எல்லோருமே விபசாரிகளின் பிள்ளைகளாகவே ஆவோம். ஏனென்றால், நம் தாய்மாரும் நம் தந்தையரல்லாத மற்ற ஆடவரை விரும்பியோ—அவர்களோடு சேர்ந்தோ தான் நம்மைப் பெற்றிருக்க வேண்டும். அதுதானே தாங்கள் கூறும் கொள்கையின் கருத்து?" என்று புன்சிரிப்போடு கேட்டார்.

இதற்கு என்ன சமாதானஞ் சொல்வதென்று என் தந்தையார்க்குத் தோன்றவில்லை. அவர் முகம் சாம்பிக் கூம்பியது. எனவே, அவர் பேச்சை வேறு வழியில் திருப்பி விட்டார். இவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த நாங்கள் கல்வியும், உலகானுபவமும் நிறைந்த என் தந்தையின் அறிவைக் காட்டிலும், சிறு பிராயத்தினராகிய என் காதலரின் அறிவு விஞ்சி யிருப்பதைக் கண்டு வியப்பெய்தி அவரை மனத்துக்குள் வாழ்த்தினோம். இவற்றிலிருந்து என் தந்தையார் என் மீது வந்த அலர்தூற்றலைக் கேட்டு என்ன நினைந்திருப்பார் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

எனவே, இப் புகாரைக் கேட்ட அன்றிரவு நாங்கள் படுக்கைக்குச் செல்லும்போது, என் தந்தையார் என்னைப்

பார்த்து வருத்தத்தோடு, "காமு! உன் தொல்லையே எனக்குப் பெரிதா யிருக்கிறது. நீ என் உயிர்க்கு உலை வைத்து விடுவாய்போ லிருக்கிறது. உன் நடத்தையில் அவர்கள் சந்தேகங் கொண்டு கண்டவாறு பிதற்றுகிருர்கள். நீ ஆன்மநாதனை நேசிக்கிறதாகவும், அவனுக்குப் பலமுறை காதற் கடிதங்கள் எழுதியனுப்புவதாகவும், அவனேடு தனித்திருந்து பலதரம் பேசிக் களிப்பதாகவும் அவர்கள் எல்லாரிடமும் அலர் தூற்றி வருகிருர்கள். இச்செய்தி காதுக் கெட்டியதும் என் உயிரே போய் விட்டதுபோ லிருக்கிறது............நீ ஏன் ஆன்மநாதனேடு பேசுகிருய்? இனி நீ அவனேடு பேசலாகாது. அவ்வாறு நீ பேசியதாக அறிந்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன். அவன் இங்கு வந்து வார்த்தையாடிக்கொண் டிருக்கும்போது நீ அவன் எதிரில் வரப்படாது; அவன் கண்ணிலும் படாமல் உன் அறையி னுள்ளேயே இருக்கவேண்டும். தெரிகிறதா?" என்று கூறி முடித்தார்.

என் தந்தையார் கூறிய வார்த்தைகளையும், அவர் இட்ட கடுமையான கட்டளையையுங் கேட்டு யான் என்ன நிலைமையை அடைந்திருப்பேன் என்பதை, சகோதரரே! நீங்கள் தான் உய்த்துணர்ந்து கொள்ளவேண்டும். என் மனம் மயங்கியது. தொண்டை துக்கத்தால் அடைத்துக் கொண்டது. எனவே, பேச என் நா எழவில்லை. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வந்துகொண்டே யிருந்தது. என் தந்தை இதை யெல்லாங் கவனியாது வெகு கோபமாகப் படுக்கைக்குச் சென்ருர். எனக்கு அன்று இரவெல்லாம் உறக்கம் வரவேயில்லை.

ஒன்பதாவது அதிகாரம்

காதலைத் தடுக்கக் கட்டுக்காவல்

நான் படுக்கையில் புரண்டுகொண்டே என் தந்தையார் சொன்ன வார்த்தைகளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தேன். 'ஐயோ! யான் ஆன்மநாதரிடம் காதல் கொண்டு கலந்துறவாடுவது எப்படியோ வெளியாய் விட்டதே! அன்று ஒரு நாள் நான் ஆன்மநாதரைத் தழுவி முத்தமிட்டதை என் அண்ணி பார்த்தா ளல்லவா!—ஆ! அக் காதகிதான் எதிர்வீட்டு இமய பார்வதி யிடத்தும், பக்கத்து வீட்டுப் பங்கஜத்தி னிடத்தும், அயலகத்து அம்மணி யிடத்தும் என் காதல் ஒழுக்கத்தைப் பறைசாற்றி விட்டாள். ஆ! தெய்வமே! அவள் எங்கிருந்து எனக்கென்று எமனாய் வந்து வாய்த்தாளோ! அவள் இன்னும் என் தலையில் என்னென்ன விதமான தீம்பை (பழியை)க் கொண்டு வந்து போடுவாளோ! இவள்தான் தன் கொடுங் குணத்தால் பழி கூறினால், இப் பெண்களாகிலும் சும்மா இருக்கப்படாதா! இவர்கள் ஒன்றை ஒன்பதாகத் திரித்து ஊரெல்லாம் தூற்றிக் கைகொட்டிச் சிரிக்கிறார்களே! இவர்க ளென்ன? என்னைப் போல் பெண்க ளல்லையா? இவர்க ளெல்லாம் தங்கள் கணவன்மாரோடு சேர்ந்து இன்புற்று வாழ்வதுபோல், எனக்கும் காதலரோடு கூடி மகிழ்ந்திருக்க விருப்ப மிருக்கு மென்று தெரியாதா? இவர்கள் எல்லாம் கணவன்மாரோடு கலந்து இன்புற்றிருப்பது தகும்; என் போன்ற ஏழை மகளிர் தாங்கள் விரும்பிய காதலரோடு களித்திருப்பது தகாது என்பது இவர்

களின் எண்ணமா? இவர்களும் என்னைப் போன்று விதவைத் தன்மையில் இருப்பார்களானால் இவ்விதம் நினைப் பார்களா? ஆண்டவனே! என் இனத்தாராகிய மகளிரே இவ்வாறு கருதிக் கொடுமைப் படுத்துவார்களானால் ஆடவர் செய்வதைப் பற்றிக் கேட்க வேண்டுமோ?........

பல அறிவு நூல்களைக் கற்றுணர்ந்த பெரியாராகிய என் தந்தையும்—தம்மைவிட உலகானுபவ முடையவர் ஒரு வரும் இவ்வுலகில் இல்லை என்று தம்மைத் தாமே வியந்து கூறிக்கொள்ளும் என் தகப்பனாரும்—இவ்வளவு அறியாமை யுடையவராக—என் துன்பத்தை யுணர்ந்து பார்க்கக்கூடிய ஆற்றலில்லாதவராக இருப்பாரானால், யான் வேறு யாரை நோவது! யான் விரும்பிக் காதலிக்கும் ஆன்ம நாதருக்கே என்னை மணஞ் செய்வித்தால் அதனால் இவருக்கு வரும் இழுக்கென்ன? மற்ற பாமர மக்களைப் போல இவர் தம் இளம் பருவமுடைய மகளை விதவை நிலை என்னும் கொடிய நரகத்தில் கிடத்தி வருத்தாது, அவள் விரும்பிய காதலனுக்கு மறு மணஞ் செய்து தந்த அருளாளர் என்றன்றோ அறி ஞர்க ளெல்லாம் இவரைப் புகழ்ந்து பாராட்டுவார்கள்? இவரை இவர் பிறந்ததிலிருந்து பலவிதத்திலும் கெடுத்துத் துயரத்தில் ஆழ்த்தி வரும் உறவினர்களுக்குப் பயந்தும், 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறும் மநுதர்ம சாஸ்திரம்' போன்ற ஆபாச நூல்களில் விதித்திருக்கும் மூடப் பழக்கங் களுக்குத் தம் அறிவை அடிமை யாக்கியு மல்லவோ இரக்க நெஞ்சம் படைத்த என் தந்தையார் என் விஷயத்தில் அரு ளுடைமைக்கு மாறாகக் கொடுமைப் படுத்துகிறார்? நான் ஆன்மநாதரோடு பேசக் கூடாதாம்! அவர் எதிரில் வரவும் படாதாம்! அவர் கண்ணில் படாது மறைந்து என் அறையி லேயே அடைபட்டுக் கிடக்க வேண்டுமாம்! என்னே

கொடுமை! இவ்வாறு யான் என் காதலரைக் கண்டு களிக் காதவாறு என்னைக் காவலில் வைத்தால் மாத்திரம் என் மனம் அவர் பால் செல்லாதோ ? என்ன பேதமை!

'சிறைகாக்குங் காப்பு எவன்செய்யும் ? மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை'

என்னும் அருமைத் திருக்குறளை யோதியும், இவர் அதன் பொருளை முற்றும் உற்றுணராதது ஏனோ! என் உடலைத் தான் கட்டி ஒரு அறையில் போட்டு வைக்கலாம்? என் மனத்தைக் கட்ட இவர்களா லாகுமோ ? நான் என் காத லரை நேரே காண முடியா விட்டாலும், என் மனக் கண் ணில் இடை விடாது பார்த்திருப்பே னன்றோ ! யானும் என் காதலரும் மானதத் தந்தியின் மூலம் எங்கள் எண்ணங்களை ஒருவர்க் கொருவர் தெரிவித்துக்கொள்ள முடியுமன்றோ! என் காதலரை வேண்டுமானால், என் தந்தை தம் வீட்டுக்கு வரவொட்டாது நிறுத்தி விடலாம். என் உள்ளத்தில் அழ கொழுக எழுதிப் பார்த்திருக்கும் என் காதலரின் திருவுரு வத்தை இவரால் அழிக்க முடியுமோ ? என் தந்தை என்னை என் காதலர் எதிரில் வரக்கூடாதென்று கட்டளை யிட்டதுபோல், என் காதலருக்கும், அவரைத் தம் வீட் டுக்கு வரக்கூடாது என்று உரைத்தால் என் செய்வது ? என் உயிரினும் இனிய என் காதலரைக் காணாது எவ்வாறு உய்வேன் ? அவரைக் காணப் பெறாமையால் ஏங்கி யேங்கி யுருகி யான் வாளா இறக்க வேண்டியதுதான் ! இவ்விதம் என் காதலரைக் கண்டு களிக்காது துன்புறுவதைக் காட்டி லும், இப்போதே இறந்து விட்டால் நன்மையாக இருக் கும். மறுபிறப்பி லாயினும் அவரை—ஆன்ம நாதரை—என் காதலராக அடைந்து இன்புற ஆண்டவன் அருள்புரியலா மன்றோ !....................

என் இல்லத்தில், என் அண்ணனும், தம்பியும் தங்கள் மனைவிமாரோடு எப்போதும் சரச சல்லாபஞ் செய்து கொண் டிருக்கிறார்கள். கணவனை இளமையிலேயே இழந்து ஒரு சுகமு மறியாது தங்கள் சகோதரி வீட்டில் இருக்கிறாளே என்ற எண்ணமே அவர்களுக்குக்கிடையாது. என் எதிரிலேயே என் கண்முன்னேயே பகற்காலங்களில் தங்கள் மனைவிமாரோடு மனம் போனவாறு விளையாடிக் களியாட்டு அயர்கிறார்கள். அவர்களுக்கென தனித்த இடமில்லையா? கால வரையறை கிடையாதா? காமம் தலைக்கேறி விட்டால் கண்கூடவா தெரியாமல் போய்விடும்? இவ்விதக் கோலாகலங்களைப் பார்த்துக்கொண்டு என் மனம் எவ்வாறு விகாரமடையா திருக்கும்? இச்சிற்றின் பச் சூழலுக்கிடையே இருந்து யான் மனத்தைப் பொறி வழி செல்லவிடாது கட்டுப்படுத்துவதற்கு நானென்ன துற வியா? துறவிகள் கூடவன்றோ நாடு நகரங்களில் மற்ற மக்களிடையே இருந்தால் மனத்தைக் கட்டுப்படுத்தி ஆண் டவன் வழியில் ஒருமுகப்படுத்த முடியவில்லை யென்று கண்டு, மக்கள் சஞ்சாரமில்லாத காடுகளுக்கு ஓடுகிறார் கள்? அவ்வித மிருக்க, ஆணும் பெண்ணும் அணி யணி யாக இருந்து கூடிக் களிக்கும் இடத்தி லிருக்கும் என்னை என் தந்தையும் மற்றவர்களும், காமத்தால் துளங்காத மனத்தோடு துறவிபோல் இருக்க வேண்டுமென்று எதிர் பார்ப்பது எத்துணை அறிவீனம்! இது தகுமோ! இது முறையோ! இது தருமந்தானோ! என்று நீள நினைந்து பெருமூச் செறிந்து நிமலனைத் தொழுதேன்.

மறுநாள் காலையி லிருந்து எனக்குக் கடுங்காவல் வைக்கப் பட்டது. என் வீட்டிலுள்ளார் அனைவரும் ஒருவர் மாற்றி யொருவர் என்னைக் கடைக்கணித்து வந்தனர். என்

காதலர் வரும் ஓசையைக் கேட்டவுடனே, என்னை ஒரு அறைக்குள் போயிருக்கச் செய்து, அவர் என் தந்தை முதலியோரிடம் பேசிவிட்டுப் போகும் வரையும் வெளிவர வொட்டாது காவல் காத்தனர். இதனால் நான் பல நாட்கள் என் காதலரைப் பார்ப்பதற்கு முடியாமல் போயிற்று. என் காதலர் வரும்போதெல்லாம் யான் அவர் கண்ணில் படாததை யறிந்து அவர் என்னென்ன எண்ணினரோ? எவ்வாறு மனம் வருந்தினரோ? யான் என் காதலருக்கு என் நிலையைக் கடித மூலமாக எழுதித் தெரிவிக்கலாமென்றாலோ அதுவும் முடியாத காரியமாயிற்று. ஏனென்றால் யான் ஏதாகிலும் வேலையிட்டால், என் அண்ணியாரை யறியாது, அவள் உத்தரவு பெறாது—செய்யக் கூடாது என்று வேலைக்காரர்களுக்கும் சிறுவர்களுக்கும் கட்டளை யிடப்பட்டிருந்தது. இதனிடையே, யான் காலையிலோ மாலைக் காலங்களிலோ வீட்டின் வெளியே முற்றத்தில் வந்து நின்றால், என் அண்ணி என் பின்னிருந்தோ, ஜன்னலிலிருந்தோ என்னைக் கவனித்துக்கொண்டிருப்பாள். அதுவன்றி, யான் வெளிமுற்றத்தில் போய் நின்றதும், எதிர் வீட்டுப் பெண்களும், பக்கத்து அகத்துப் பாவையர்களும் கும்பல் கும்பலாக வந்து கூடி என்னைப் பார்த்துச் சிரிப்பதும், என்னைச் சுட்டிக் காட்டி ஏதேதோ பேசிக் கேலி செய்வதுமா யிருந்தார்கள். அவர்களின் விஷமச் செய்கையை நான் முதலில் கவனிக்கவில்லை. நாளடைவில் அவர்களின் குறும்புத்தனம் எனக்குத் தெரிந்தது. அதை யறிந்ததும் என் மனம் அடைந்த வேதனையை என்னென்பேன்! அவர்கள் என்ன பெண்களா? பேய்களா? அல்லது அரக்கிகளா? அபலையாகிய என்னை ஏன் அவர்கள் பார்த்துக் கைகொட்டிச் சிரித்துக் கேலி செய்கிறார்கள்? அவர்களுக்கு யான் என்ன தீமை செய்தேன்? ஒன்றுமில்லையே! அவ்வித

மிருக்க, அவர்கள் ஏன் என் மனத்தைத் துன்புறுத்த வேண்டும்? அதனால் அவர்கள் அடையும் நன்மை யென்ன? என் பரிதாப நிலையைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் அவ்வாறு என்னை வருத்துவார்களா? அவர்களை நோவதில் பயனென்ன? இதற்கெல்லாம் மூலகாரணம் என்னை வாழ்விக்க வந்த என் அண்ணியே! அவளைக் கடவுள் காப்பாற்றட்டும்!

இங்ஙனம், இரண்டு மூன்று மாதங்கள் கடந்தன. இதற்குள் நுண்ணறி வுடையவராகிய என் காதலர் இடையே எங்கள் இல்லத்தில் ஏற்பட்டுள்ள வேறுபாட்டை ஒருவாறு உணர்ந்து கொண்டார் என்பதை, இச் சம்பவத்திற்குப் பிறகு அவர் செயல் வேறுபாட்டி லிருந்து யான் அறியலானேன். அவர் எங்கள் வீட்டுக்குத் தினந்தோறும் தவறுமல் வரும் வழக்கத்தை நிறுத்தி விட்டார். வாரத்திற்கு ஒன்றிரண்டு முறையே வந்து சென்றார். அவ்வாறு வந்தாலும் முன்போல் நீண்ட நேரம் இருந்து தந்தை முதலியவர்களோடு பேசுவதில்லை. அவர் வரும் நேரங்களில் நான் தப்பித் தவறி எதிர்ப்பட்டாலும், அல்லது என் தந்தை முதலியோர் இல்லாத சமயம் நான் தனித்துச் சந்தித்தாலும், அவர் என்னை ஏதிலார் (அயலார்) போலப் பொது நோக்காகவே பார்த்துச் செல்லலானார். நான் ஏதேனும் அவரோடு பேச விழைந்து அவரை அணுகினாலும், அவர் அதைக் கவனியாததுபோல் சென்றார். அப்படி ஏதாகிலும் வாயைத் திறந்து சொன்னாலும், அவர் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போலவே பாவனை செய்து மௌனஞ் சாதித்தார். எப்போது பார்த்தாலும் புன்னகை தவழ்ந்த வண்ணமிருக்கும் அவர் முகத்தில் மகிழ்ச்சிக் குறிப்பைக் காண்பிப்பதற் குரியதாகிய சிரிப்

யைக் காண்பதே அரிதாயிற்று. 'அன்று மலர்ந்த செந்தாமரை போன்ற முகத்தில் இதுகாறும் ஒளிர்ந்து வந்த புன்னகை எங்கே சென்று ஒளித்தது? எல்லாரையும் மகிழ்ச்சிக் கடலில் நிலைக்கச் செய்யும் அவரது இனிய மொழி எதில் கட்டுப்பட்டது? அவரது குதூகலம் எக்கடலில் குளித்தது? உற்சாகம் எங்கே போய் மறைந்தது? பலநாளாக முயன்று அருமையாகப்பெற்ற காதலின் பயனை முற்றும் அனுபவியாது இவ்வளவு சீக்கிரத்தில் இழந்த எனது தீவினையை என்னென்பேன்? அவர் காதலை வேண்டி யான் அடைந்த பின், எத்தனை நாள் காதல் மொழிகளால் அமுத தாரைகளை என் செவி குளிர ஊற்றினர்? குமுதம் போன்ற அவரது செவ்வாய் இதழ்களால் யான் பரவசமுற எத்துணை முறை முத்த மழை பொழிந்தார்? அமிழ்தத்தால் ஆக்கப்பட்டதோ அவர் தேகம்? தம் இரு கரங்களாலும் அவர் என்னை வாரித் தழுவி யணைத்து இன்பத்தேன் பருகித் தெவிட்டாது தேக்கித் திளைக்கச் செய்த அம் முயக்கத்தை யான் மறக்க முடியுமோ?—ஆ! இவ்வளவு சீக்கிரத்தில் எங்கள் காதலின் பத்துக்கு இடையூறு ஏற்படுமென்று நான் கனவிலுங் கருதினேனில்லையே? யான் கனவுலகில் எத்தனை கோட்டைகளைக் கட்டினேன்? அவையெல்லாம் ஒரு நிமிடத்தில் இடிந்து விழுந்தனவே! பாதகர்களாகிய என் தந்தை முதலியவர்கள் தாம் என்னைக் கட்டுப்படுத்தித் துன்புறுத்தினும், அருளாளராகிய என் காதலராயினும் சந்தர்ப்பம் வாய்த்தும் ஆறுதல் கூறித் தேற்றக் கூடாதா! அவரும் ஏன் என்னோடு பேசாது இவ்வாறு வன்மஞ் சாதிக்கிருர்?' என்றெல்லாம் எண்ணிக் கவன்றேன். அவர் அச்சமயம் என்னிடம் அவ்வாறு நடந்து கொண்டது என் நன்மைக்கே என்பதைப் பின்னர் அவர் கூறிய வார்த்தையி லிருந்து அறிந்து மகிழ்ந்தேன். எனக்கு மலைபோலத் துன்பம் வருங்காலத்

தெல்லாம் தம் புத்திக் கூர்மையால் சமயத்துக்குத் தக்க வாறு நடந்து அவைகளைப் போக்கி இன்பமடையச் செய்த என் காதலர்க்கு யான் என்ன நன்றி செய்யப் போகி றேன்? என் உடல், (பொருள் இல்லை;) ஆவி யிரண்டையும் அவருக்கே உவந்தளித்த யான் அவருக்கு வேறு என்ன செய்யக்கூடும்?

பத்தாவது அதிகாரம்

மனைவி இறந்த அன்றே மணப் பேச்சு

இங்ஙன மிருக்க, என் தம்பி மனைவியான பூங்கொடி எதிர் பாராதவாறு கொடிய நோய் வாய்ப்பட்டு ஒரு மாத காலந் துன்புற்றாள். அச்சமயம், என் காதலர் செய்த உதவி அளவிடற் பாலதன்று. என் மீதுள்ள பொறாமை காரணமாக, தான் எங்கள் களவொழுக்கத்தை வெளிப் படுத்திப் பறை சாற்றியதன் பயனாக, என் காதலருக்குப் பழியுண்டு பண்ணினாலும், அவர் அதையெல்லாம் பொருட் படுத்தாமல் பெருந்தன்மையோடு சமயம் நேர்ந்தபோது செய்து வரும் உதவியைக் கண்டு என் அண்ணி மனம் நைந்து அவர் முன் வரவும் நாணினாள். அச்சமயம் என் மாமியும் என் அண்ணியும் என் காதலரைத் தெய்வம்போல் கொண்டாடினர். அவர் இப் புகழ்மொழிகளை லட்சியஞ் செய்யாமல் இரக்க நெஞ்சத்தோடு வேண்டிய உதவி செய்து வந்தார். ஆண்டவன் திருவுள்ளப்பாங்கும் எங்கள் முயற்சி யும் சேர்ந்து அம்முறை பூங்கொடி மரணப் படுக்கையி

லிருந்து எழுந்தாள். அவள் குணமடைந்து எழுந்தது மறு பிறப்பென்றே சொல்லவேண்டும்.

அதன் பின்னர், சில மாதங்கள் கழித்து பூங்கொடி கர்ப்ப முற்றாள். இதை யறிந்து நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சி யடைந்தோம். ஏனென்றால், என் அண்ணனுக்கு விவாகஞ் செய்து பதினைந்து வருடமாகியும் பிள்ளையில்லை; என் தம்பிக்குக் கலியாணமாகி மூன்று வருடத்திற்கு மேலாகியும் பிள்ளை பெறுதற்குரிய அறிகுறி யொன்றும் காணாது போகவே, நாங்கள் எங்களை மகிழ்விக்க ஒரு குழந்தை யில்லையே என்று ஏங்கி யிருந்தோம். அதற்காகப் பல தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டோம். என் தந்தையோ, தன் பெயரைச் சொல்ல ஒரு பேரனில்லையே என்று ஏங்கி வந்தார். என் அண்ணி இனி பிள்ளை பெறுவாள் என்ற நம்பிக்கை கிடையாது. இளையவளான பூங்கொடியையே நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். யாங்களெல்லாம் களிகொள்ள அவள் கருப்ப முற்றதும், பூச்சூட்டல், சீமந்தம் முதலிய சடங்குகளை யெல்லாம் முறையே சிறப்பாகச் செய்தோம்.


சீமந்தம் நடந்த ஒரு மாதத்திற்குப் பிறகு பூங்கொடி பிரசவ வேதனை படலானாள். ஆனால் பிரசவத்திற்குரிய குறிகள் மிகவும் பயங்கரமா யிருந்தன. முகம் சவம் போல் வெளுத்து, கண் குழிந்து, உதடுகள் சிவந்து வீங்கிக் காணப்பட்டன. கைகளும் கால்களும் பருத்துப் போயின. உடம்பு மெலிந்துபோ யிருந்தது. முதல் பிரசவ மாயிற்றே, அதனால் இவ்வாறெல்லாம் இருக்கிறது போலும் என எண்ணி நாங்கள் எங்களுக்குத் தெரிந்த சாதாரண சிகிச்சைகளைச் செய்து வந்தோம். ஆனால், நாளடைவில் பயங்கரக் குறிகள் அதிகமாகக் காணப்படவே, சிலரின் யோசனை

யின்படி பிரசவ ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். அங்கு நான்கு நாட்கள் பெரிய டாக்டர் துரைசானி முதலியவர்கள் ஏதேதோ ஆராய்ச்சி செய்து மருந்து கொடுத்து வந்தார்கள். கடைசியில் இவை யெல்லாம் பயன்படாது, பூங்கொடி ஒரு பெண் மகவை மிகவும் துன்பத்துடன் ஈன்று எடுத்து, அந்தோ! சில நிமிஷங்களுக் கெல்லாம் ஜன்னி கண்டு இறந்தாள். நற்குண நற்செய்கைகளை யுடைய அப் பெண் இறந்ததைக் கேட்டு நாங்கள் இடியோசை கேட்ட பாம்பு போலானோம். எங்களைக் காட்டிலும் என் காதலரே அவளுக்காக மிகவும் வருந்தினர். அவர் என் மாமியின் வேண்டுகோளின் வண்ணம் என் அண்ணியையும் பூங்கொடியையும் தம் உடன் பிறந்த சகோதரிகளாகவே பாவித்து நடந்து வந்தார். அதிலும் பூங்கொடி மீது அதிக அன்பு கொண் டிருந்தார். அவளும் இவரிடம் பேரன்பு கொண்டு மரியாதையாக நடந்து வந்தாள். அத்தகையவள் இறந்தது அருள் நெஞ்சங் கொண்ட என் காதலர்க்குத் துயரத்தைக் கொடுக்காம லிருக்குமா?

என் தம்பி தன் மனைவி இறந்ததைப் பற்றி மற்றவர்களைப் போல் அவ்வளவாகத் துன்பப்படவில்லை. இதைக் கேட்டு நீங்கள் தன் மனைவி மரண மடைந்ததைக் குறித்து வருந்தாத மனிதனும் உலகி லிருப்பானா? என்று நினைத்து ஆச்சரியப்படுவீர்கள். அவனது தன்மையை உணர்ந்தவர்கள் அவ்வாறு நினைக்கமாட்டார்கள். அவன் சுயநலமே உருவானவன் என்று முன்னமே சொல்லி யிருக்கிறேன் அல்லவா! அவனுக்கு மனைவி யிடத்தில் கூட அன்பு கிடையாது. வெளியார் ஏதேனும் நினைக்கப் போகிறார்கள் என்று கருதி, வெளிக்கு அன்பாக இருப்பதுபோல் அவன் நடித்து வந்தான். தன் மனைவி விரும்பி ஏதாகிலும் கேட்

டாலும் வாங்கிக் கொடுக்க மாட்டான். அவ்வளவு கருமி அவன். அவன் தனக்குக் 'காமக்கழிவிடம்' என்ற அளவில் தன் மனைவி மீது விருப்பம் வைத்திருந்தான். அவள் இறந்த இப்போதும் அவன் தன் மிருகவுணர்ச்சியைப் பூர்த்தி செய்து கொள்வதற்குச் சிறிது தடையேற்பட்டிருக்கிறதே என்றே வருந்தியிருப்பானன்றி, வேறு அவளிடத்து அன்பு கொண்டல்ல என்பதை, அன்னா, நீங்கள் அறிய வேண்டும்.

அது நிற்க, பூங்கொடி மரணத்தினால் எனது வீட்டார் செயலற்ற நிலைமையி லிருக்க, என் காதலரே எல்லாக் காரியங்களையுஞ் செய்யலானார். ஆஸ்பத்திரியி லிருந்து பிரேதத்தை வீட்டுக்குக் கொண்டு வந்தார். எங்கள் உறவினர்களுக் கெல்லாம் ஆள் மூலமாகச் செய்தி யனுப்பினார். என் தமக்கைமாருக்கும், அவர்களது கணவன்மாருக்கும் இவரே சென்று செய்தி சொன்னார். எங்கள் பங்காளிகள் பூங்கொடி இறந்ததைக் குறித்துச் சந்தோஷங் கொண்டாடினர். உறவினர்களில் ஒரு சிலர், என் தம்பிக்கு இரண்டாந் தாரமாகப் பெண் கொடுப்பதாக அப்போதே கூறினர். என் தந்தையும் அது சம்பந்தமாக அவர்களுடன் வார்த்தையாடினார். இதைக் கேட்டு என் தம்பியும் மனம் மகிழ்ந்தான். இதென்ன அநியாயம்! மனைவி இறந்த அன்றே மணப் பேச்சா? இறந்த மனைவியை இல்லத்தில் கிடத்தி ஏந்திழையார் எல்லாரும் அலறி அழுது கொண்டிருக்க, வெளி வாயிலில் மற்றொரு பெண்ணை மணஞ் செய்து வைப்பதாக உறவின் முறையார் ஓலமிடுவதும், அதைக் கேட்டு கணவன் மன மகிழ்வதும், அவன் தந்தை பெண் கொடுக்க முன் வருபவர்களை வரவேற்பதும் வெகு அழகிது! இவ்வக்கிரமம் எங்கு நடக்கும்? நம் தென்னாட்டைத் தவிர, வேறு எங்காகிலும் இவ்விதம் நடக்குமா?



...........மனைவியின் பிணம் உள்ளே கிடக்க, வெளியில் நடக்கும் மறு மணப் பேச்சைக் கேட்டுக் கணவன் மன மகிழ்கிறான்.

—பக்கம் 78.

மாயையில் அகப்பட் டுழலும் மக்கள் மனப் போக்கு இருந்தவா றென்னே! என்னே!!

என் தம்பி மனைவியின் இறுதிச் சடங்கு ஒருவாறு முடிந்தது. நான்காம் நாள், என் தம்பிக்கு இரண்டாந் திருமணம் நடப்பதைக் குறித்துப் பேச்சு நடந்தது. அதன் பயனாக, என் அண்ணிக்கும், என் தம்பிக்குஞ் சண்டை நடந்து ஒருவரை யொருவர் கண்டவாறு பேசிக் கொண் டனர். இக் குழப்பத்தை யெல்லாம் என் காதலரே ஒரு வாறு அடக்கினர். பின்னர் முறையே நடக்கவேண்டிய உத்திரகிரியை முதலிய சடங்குக ளெல்லாம் நடைபெற்றன. நாட்கள் விரைந்து ஓடின. என் தந்தை என் தம்பியின் மறு விவாகத்தைக் குறித்து ஊக்கமாக முயற்சி செய்ய லானர். அவருக்கு என் தம்பியி னிடத்தில் மிகவும் அச்ச மிருந்தது. ஏனெனில், முதல் விவாகம் நடப்பதற்கு முன், என் தம்பி அவரை மிகவும் அல்லற்படுத்தி வந்தான். ஊரிலுள்ளவர்களுக் கெல்லாம் கலியாணம் நடக்கிற தென் றும், தனக்குச் சீக்கிரம் விவாகஞ் செய்யவில்லை யென் றும், வீதிகளில் மண முழக்கத்தையும், மங்கள வாத்திய ஓசையையும், வாழை, கமுகு முதலியவைகளின் தோரணங் களை யுடைய மணப்பந்தர்களையும் பார்த்தாலே தனக்கு உள்ளக் கிளர்ச்சி மிகுந்து உயிர் போவதுபோ லிருக்கிற தென்றும், இதை யறிந்து கலியாணஞ் செய்யாத தந்தை இறந்து போனல் நலமா யிருக்கு மென்றும், என் தந்தை யிறந்து தாய் இருந்தால் தன் நிலையை யறிந்து இந்நேரம் கலியாணஞ் செய்திருப்பார் என்றும் இவ்வாறெல்லாம் தூற்றி அவர் மானத்தை வாங்கினன். ஆகவே, அப்பயத் தால் என் தந்தை எங்களுக்கு நெருங்கிய உறவிலேயே ஒரு பெண்ணைப் பார்த்து முடிவு செய்தார். அப் பெண்

ணைப் பார்ப்பதற்கு முதலில் என் காதலரும், தந்தையுமே சென்றனர். பின்னர் தான், என் தமக்கையர் போய்ப் பார்த்தனர். ஆனால் இதில் என் அண்ணி கலக்கவில்லை. அவள் மிகக் கடுமையாக என் தந்தை மீதும், தன் மைத்து னன் மீதும் கோபங் கொண்டிருந்தாள். இப்போது பேசிய பெண் அவளது பங்காளிச் சிற்றப்பன் மகளாதலால், அதைத் தடுத்துப் பங்காளிகள் பகையைக் கடன் வாங்கிக் கொள்ள விரும்பாமல் சும்மா இருந்தாள். பூங்கொடி இறந்த மூன்று மாதத்திற் கெல்லாம் என் தம்பிக்கு மேற் குறித்த பெண்ணைக் கன்னிகாதானஞ் செய்து கொடுக்கப் பட்டது. என் காதலர் என் தந்தையின் வேண்டு கோளின்படி பெண்ணை முதலில் போய்ப் பார்த்தது தவிர, மற்ற காரியங்களில் அவர் தலையிடவில்லை. அநீதி யான—பாரபக்ஷமான—இத் திருமணத்திற்கு அவர் எவ் வாறு சம்மதிக்க முடியும்? அதில் கலந்துகொள்ள முடி யும்? விவாகம் நடந்த மூன்றாம் நாளே கணவனை யிழந்து உலக சுகமொன்றையும் அறியாது பதினைந்து வருட கால மாக விதவைத் தனையில் கட்டுண்டு துன்பப்பட்டுக் கொண் டிருக்கும் எனக்கு மறுமணஞ் செய்யக் கனவிலுங் கருதாத என் தந்தை, தக்க வயதில் விவாகஞ் செய்து கொண்டு மூன்று நான்கு வருடம் மனைவியோடு எல்லா விதமான இன்பங்களையும் அனுபவித்து வந்து இப்போதே மனைவியை இழந்த என் தம்பிக்கு மனைவி யிறந்த மூன்றாம் மாதத்திற் குள்ளாகவே அல்லும் பகலும் உறக்க மில்லாது முயன்று மறுமணஞ் செய்து வைப்பதென்றால் அதை நியாயமென்று சொல்வதா? பெண்ணுக்கு ஒரு நீதி; ஆணுக்கு ஒரு நீதியா? ஒரு பெண் மிகவும் இளம் பருவத்திலேயே பெற் றோர்களால் வரிக்கப்பட்ட கணவனை யிழந்து விட்டால் மறுமணஞ் செய்துகொள்ளக் கூடாது; ஆடவனொருவன்

ஒருத்தியைக் கலியாணஞ் செய்து கொண்டு அவளோடு திருப்தி யடையாவிட்டால், மற்றொருத்தியையும், ஒருத்திக்கு மேலாகப் பல பெண்களையும் ஒரே காலத்தில் கலியாணஞ் செய்து கொள்ளலாம்; அல்லது பல்லெல்லாம் விழுந்து மயிர் நரைத்து உடல் திரைத்து எலும்புக் கூடாயிருக்கும் கிழவனாகிய பிறகும் மனைவியை இழந்தாலும் வேறொரு கன்னிகையைக் கலியாணஞ் செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டு அவ்வாறே பெரும்பாலும் நடந்து வருகிறது. இவ்வாறு ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி எச்சாத்திரத்தில் சொல்லி யிருக்கிறது? அவ்விதம் சொல்லி யிருந்தால் அது ஒரு தர்ம சாத்திர மாகுமா? இவ்வித அநியாய வழக்கம் நம் இந்து சமூகத்தி லன்றி, உலகத்திலுள்ள வேறு எந்த சமூகத்தி லாயினும் இருக்கிறதா? இவ்வித அநீதிக்கும், ஆபாச மூடப் பழக்க வழக்கங்களுக்கும் உறைவிடமா யிருக்கும் இந்து சமூகம் இன்னும் ஏன் அழியாம லிருக்கிறது? இந்தியாதேசம் வெள்ளையர்களால் அடிமையாக நடத்தப்பட்டு வருகிறது என்று ஓலமிடும் தேசீய வாதிகள், பெண்கள் விஷயத்தில் இந்து சமூகம் செய்து வரும் அட்டூழியங்களைச் சிறிதும் கவனியாததேனோ! 'ஏழை யழுத கண்ணீர் கூரிய வாள் ஒக்கும்' என்ற நீதி வாக்கியத்தின்படி ஏழையர்களாகிய இளம் விதவைப் பெண்கள் நாடோறும் கதறி யழும் கண்ணீரே, இந்து சமூகத்தை அன்னிய ஆளுகையாகிய பெருஞ் சமுத்திரத்தில் ஆழ்த்தி வைத்திருக்கிறது என்பதை இப்போதாகிலும் இவர்கள் உணர்ந்து அதற்குப் பரிகாரந் தேடுவார்களா?

அது கிடக்க, நீதிநெறி பிறழா நடுநிலையாள ரென்று தம்மைப் பறை சாற்றிக் கொள்பவரும், 'நடுவாய் நில்லாது ஒழிந்தக்கால் நன்றே? எங்கள் நாயகமே'

என்று நடுவு நிலைமையாக இருக்க வேண்டுமென்று இறைவனையே கேட்கும் சிவனடியாருமாகிய எனது தந்தையார், தன் வயிற்றில் பிறந்த மக்களிலேயே பெண்ணுக்கு ஒரு நீதியையும், ஆணுக்கு ஒரு நீதியையுங் கற்பித்து நடுநிலை தவறி, எனக்கு நான் விரும்பும் வண்ணம் விவாகஞ் செய்யாது, என் தம்பிக்கு மட்டும் மறுமணஞ் செய்வாரானல், மற்ற பாமர நிலையிலுள்ளவர்களைப் பற்றி என்ன சொல்வது? அவருக்கு அருளுணர்ச்சியே அற்றுவிட்டதா? உலக இன்பத்தை யடையும் விஷயத்தில் ஆணும் பெண்ணும் ஒன்றுதானே! இருபாலார்க்கும் இன்ப உணர்ச்சியில் வேறுபாடில்லையே! அவ்வாறிருக்க, இவர்கள் கற்பிக்கும் நியாயம் எவ்வாறு பொருந்துமோ!—உடல் நூல் வல்லவர்கள் காம உணர்ச்சி மக்களுக்குப் பொதுவாக இருந்தாலும், ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கே பன்மடங்கு அதிகமாக இருக்கிறதென்று கூறி, அவ்வுணர்ச்சியை அப்பெண்கள் தங்கள் மன உறுதியால் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்களென்றும், பெண்களுக்குள்ள காம உணர்ச்சியில் கால்பாகமே உள்ள ஆண்கள் தங்கள் மனத்தை அது செல்லும் வண்ணம் விட்டு, அதைக் கட்டுப்படுத்த சக்தியற்றவர்களாய் அழிகிறார்களென்றுங் கூறியிருப்பதாக ஒரு முறை என் காதலர் தந்தையாரிடம் சொன்னதைக் கேட்டிருக்கிறேன். அதுவுமன்றி, சமூகக் கட்டுப்பாட்டில், ஆண்மகளுக்குப் பெண் மகளைக் காட்டிலும், அதிக்கிரமமான விஷயங்களில் உரிமை அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆடவன், விவாகஞ் செய்துகொள்ளாமலே, பரத்தையரோடு சேர்ந்து தன் காமத்தைத் தீர்த்துக்கொள்ளலாம்; அல்லது ஒருத்தியையோ பல பெண்களையோ வைப்பாக வைத்துக்கொண்டு அவர்களோடு சுகித்து வாழலாம். ஆனல் பெண்களுக்கோ அவ்விதமில்லை. தங்களுக்குக்

கட்டக்கூடிய கணவன்மாரோ டன்றி மற்ற ஆடவர்களோடு சேரக்கூடாது. பிற ஆடவர்களை மனத்தாலும் நினைக்கக்கூடாது. இச் சமூகக் கட்டுப்பாட்டின்படி பார்த்தால், பெண்களுக்கு முதலில் மறுமணஞ் செய்து வைத்தல் வேண்டும். அதை விடுத்து அதற்கு எதிர்மாறுகக் காரியஞ் செய்வது எந்த நீதியை ஒட்டியோ! தெரியவில்லை. இவ்வித 'அ'நீதியை ஏற்படுத்திய 'புண்ணிய புருஷ'னை என்போன்ற மகளிர் என்ஞான்றும் வாழ்த்தக் கடமைப்பட் டிருக்கிறார்கள்.

என் தம்பியின் மறு மணத்திற்குப் பிறகு எங்கள் குடும்ப நண்பர்களான சில அறிஞர்கள் என் தந்தையிடம் என் மறு மணத்தைப் பற்றிப் பேசி, பிள்ளைக்குச் செய்தது போல் பெண்ணுக்குஞ் செய்து வைத்தல் நலமென்று சொன்னார்கள். என் தந்தை ஒரே பிடிவாதமாய் அவர்கள் வார்த்தைகளை மறுத்து, ஏதேதோ போலிச் சமாதானங்கள் கூறலானார். எனக்குப் பொதுவாகப் பெண்களுக்கே ஆண்டவன் ஒருமுறை கலியாணஞ் செய்து கொள்ள வாய்ப்புக் கொடுத்ததாகவும், அவ்விறைவன் திருவுள்ளத்தின்படி, என் கணவன் இறந்துவிட்டதால், மறுமணஞ் செய்து அவன் நினைப்புக்கு மாருக மற்றொரு வாய்ப்பை யேற்படுத்தக் கூடாதெனவும், அவ்வாறு செய்தால் துன்பமே ஏற்படுமென்றும் என் தந்தை கூறினார். அவ்விதமானல், ஆண்மக்களுக்கும் இந்தவிதமான நியாயத்தைத் தானே கற்பிக்கவேண்டும்? ஒரு முறை ஆண்டவன் எண்ணத்தின்படி மனைவியை இழந்த ஒருவனுக்கு மீண்டும் மறுமணஞ் செய்து அக்கடவுள் விருப்பத்துக்கு மாருக மற்றொரு வாய்ப்பைத் தரலாமா? இந் நியாயத்தைத் தன் பிள்ளையின் மறுமண விஷயத்தில் ஏன் என் தந்தை சிந்தித்

துப் பார்க்கவில்லை? என் தந்தை போன்றார் கூறும் போலி நியாயங்களைக் காரணங் காட்டி மறுத்து, இவற்றில் நீதி யெங்கே யிருக்கிறது என்று கேட்டால், இவற்றிற்கு நியாய வழியில் பதில் சொல்ல முடிவதில்லை. அதற்கு மாறாக, அவர்கள் தங்கள் நாவன்மையாலும் அகம்பாவத்தாலும், தாங்கள் சொல்வதே சரி; இவற்றிற்கு மாறு சொல்லக் கூடாது என்று என்போன்ற ஏழைமகளிரை வாயெடுக்க வொட்டாது அடக்கி யாளுகிறார்கள். என்னே! இவ்வாடவர்களின் அதிக்கிரமம்! சுயநலமிக்க ஆண்மக்களின் ஆணவந்தான் என்னே!

பதினோராவது அதிகாரம்

ஆன்மநாதர் அளித்த வாக்குறுதி

இஃதிங்ஙன மிருக்க, என் தம்பியின் விவாக தினத்தன்று மாலை யான் என் காதலரைத் தற்செயலாய் தனித்த இடமொன்றில் சந்திக்க நேர்ந்தது. அவரைக் கண்டதும், என் மனத்தில் அடைபட்டிருந்த துக்கம் அணையை உடைத்துக்கொண்டு வேகமாக வரும் வெள்ளப் பெருக்கைப்போல் பெருகிக் கண்ணின் வழியாக வெளிப்பட்டது. நான் என் காதலரிடம் எங்கள் காதலொழுக்கம் வெளிப்பட்ட விதத்தையும், என் தந்தையின் கடுமையான கட்டளையையும், ஊர்ப் பெண்களெல்லாம் அலர்தூற்றி நகையாடிப் பழிப்பதையும் விரிவாகக் கூறி, "நாதா! என் மனம் படும் வேதனை சொல்லுந் தரத்த தன்று; இனி ஒருக்கணமும், யான் என் வீட்டில் இருந்து உயிர் வாழ முடியாது. என்னை உடனே வெளியேற்றிச் சென்று இவ் வெமகாத

கர்களிட மிருந்து காப்பாற்றுங்கள். என்னைத் தாங்கள் திருமணஞ் செய்துகொள்ள வசதி யேற்படும் வரை, விதவா விவாக சகாய சபையிலாவது, பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் போன்ற இடங்களிலாவது, சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த சகோதரிக ளிடத்திலாவது அடைக் கலப் படுத்தி வையுங்கள். மேற் குறித்த சமூக சீர்திருத்த சங்கங்கள், என் போன்ற விதவைச் சகோதரிகளுக்கு வேண்டிய உதவிசெய்து மறுமணஞ் செய்து வைப்பதாகத் தாங்கள் முன் ஒரு முறை என்னிடத்தில் சொல்லி யிருக்கிறீர் களே! பின்னர், நாம் ஆண்டவன் அருள் கிடைத்தவுடனே மேற்படி ஸ்தாபனங்களின் பெரியோர்கள் ஆதரவைப் பெற்று திருமணஞ் செய்துகொண்டு இன்புறலாம்" என்று சொன்னேன்.

எனது பரிதாபமான பார்வையும், சோர்ந்த நிலையும், கெஞ்சிய மொழிகளும் என் காதலரின் ஈரநெஞ்சை நெக்கு நெக்குருகச் செய்து விட்டன என்றே சொல்லவேண்டும். அவர் என் கண்களி லிருந்து ஆறுகப் பெருகும் நீரைத் தம் உத்தரீயத்தால் துடைத்து, என்னைச் சேர்த்து அணைத்து, முகத்தை நிமிர்த்தி, "காமாட்சி, என் காதலி! எனக்கு இவ் விஷயங்க ளெல்லாம் தெரியாதென்று நினைக்கிருய்? உன் தந்தை முதலியவர்களுடைய மனப்பான்மையை நான் முற்றும் உணர்ந்திருக்கிறேன். இதை யறிந்துதான் நான் முன்போல் உன் வீட்டுக்குத் தினந்தோறும் வருவதில்லை; வந்தாலும் உன்னிடம் பேசுவதில்லை. நான் உன்னைப் பார்த் தும் பார்க்காதது போலும், உன் சொல்லைக் கேட்டுங் கேளாதது போலும் பாவனை செய்து வாளா சென்றிருக் கிறேன். இப் பராமுகத்தைக் கண்டு நீ விகற்பமாக நினைத்து வருந்தியிருப்பாய் என்பது எனக்குத் தெரியும். உன்னிடம்

பேசி மேலும் மேலும் உனக்குத் துன்பத்தை யுண்டாக்க நான் விரும்பவில்லை. பின்னர், சமயம் நேர்ந்தால் உனக்குச் சமாதானஞ் சொல்லிக் கொள்ளலாம் என்று எண்ணி யிருந்தேன். இப்போது எனது மௌனத்துக்குக் காரணந் தெரிகிற தல்லவா! கண்ணே! இனி என் னிடத்தில் சந்தேக மொன்றுங் கொள்ள மாட்டாயே!" என்று கூறிப் புன்னகை செய்து என் அதரங்களில் முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். பின்னர், சிறிதுநேரங் கழித்து மீண்டும் என்னை நோக்கி, "என் கண்ணே! நீ உன்னை வெளியேற்றிச் செல்ல வேண்டு மென்கிறாய்! அது அவ்வளவு பெரிய காரிய மல்ல! இந்த நிமிடத்திலேயே உன்னை இவ்விடத்திலிருந்து வெளியேற்றிச் செல்ல முடியும். ஆனால், உன் தந்தையைப் பற்றியே பார்க்கிறேன். அவர் ஊரிலுள்ளாரைப் பற்றி யெல்லாங் குறைகூறி மகிழ்பவர். மாசிலாமணியாகிய இறைவனுக்கும் மாசு உண்டு என்று சொல்லக்கூடியவர். இப்பரந்த உலகில் தாம் ஒருவரே குற்றங் குறை யில்லாத வர் என்று எண்ணிச் செருக்கி யிருப்பவர். அத்தகையவர் உன்னை யான் வெளியேற்றி மறுமணஞ் செய்துகொண் டால், தமக்குப் பழி நேர்ந்து விட்டதாகக் கருதித் தற் கொலை புரிந்துகொள்ள முற்பட்டாலும் முற்படுவார். அப் படி அவர் துணியாது வாளாவிருந்தாலும், அவரால் பழிக் கப்பட்ட மக்கள் இதை யொரு வாய்ப்பாக வைத்துக் கொண்டு பலகாலும் பழித்து அவரை அவமானப் படுத்து வர். இத்தகைய இழிநிலையை அவர் அடைய நான் விரும்ப வில்லை. நம் காதலின் தன்மையை அறிந்து 'அகப்பொருள் விளக்க ஆசிரிய' ரான அவர் தாமே முன் வந்து உன்னை எனக்கு மணஞ் செய்வித்து பெரும்புகழ் எய்தலாம். ஆனால், அவர் இவ்வாறு இழிநிலையை யடைந்து இறந்

தாலும் இறப்பாரேயன்றி, ஒருக்காலும் தாமே உனக்கு மறுமணஞ் செய்ய உடன்படார். உன் சகோதரர்களோ மற்றவர்களோ நீ எவ்விதமானாலும் அதைப்பற்றிக் கவலைப் பட மாட்டார்கள். உன்னை வெளியேற்றி நான் மணஞ் செய்துகொள்ள முற்பட்டால் மற்றவர்கள் பழி தூற்று வார்களே! எதிர்ப்பார்களே! என்ற எண்ணமோ பயமோ எனக்குக் கிஞ்சிற்றுங் கிடையாது. நான் அவ்வாறு அஞ்சுபவ னல்லன் என்பது உனக்குத் தெரியும். 'இச் சகத்துளோ ரெலாம் எதிர்த்து நின்றபோதிலும்' என் மனத்துக்கு நல்லது என்று தோன்றியதை—என் கடமை யைச் செய்யச் சிறிதும் தயங்கேன். உன் தந்தைக்கோ அதிக வயதாகிவிட்டது. அவர், தாம் இன்னும் நான்கு வருடங்களே உயிர் வாழ்ந்திருக்க முடியும் என்று ஜோசி யர்கள் சொல்லுவதாகக் கூறுகிறார். அவ்விதம் பார்த் தாலும் மூன்கு நான்கு வருடங்களுக்கு மேல் அவர் உயிருடனிருக்க மாட்டாரென்று ஏற்படுகிறது. அவருக் குப் பிறகு நாம் விவாகஞ் செய்துகொள்வதுதான் நல்லது. அதுவரை நீ உன் வீட்டிலுள்ளாரிடம் தந்திரமாக நடந்து காலத்தைக் கழித்துக்கொண்டு இரு. கடவுள் நம்மைக் கைநெகிழ விடமாட்டான். நம் எண்ணம் முடிய நாம் அவனருளை நம்பி யிருப்போமாக" என்று கூறி, நான் பதில் சொல்வதற்குள் தாம் மேலும் அங்கு என்னோடு தனித் திருப்பது சரியல்ல என்று தெரிவித்து என் பிணைப்பி னின் றும் நீங்கி அவ்விடத்தை விட்டுச் சென்றார். அவரது பெருந் தன்மையான குணமும், இனிய மொழியும் என்னைத் துய ரக் கடலி லிருந்து வெளியேறச் செய்தன. அருங்குண மணியான என் காதலரை விரைவில் விவாகஞ் செய்து மகிழ்ந்து இன்புறக் கூடவில்லையே என்று ஏங்கினும், அவர் தந்த உறுதி மொழியினல் நான் தேறி யிருந்தேன்.

என் தம்பியின் இரண்டாங் கலியாணம் நடந்து ஒரு வருஷத்திற்குப் பின்னர், அவனுக்குச் சேரவேண்டிய சொத்து சம்பந்தமாக வழக்கொன்று ஏற்பட்டது. அதில் எங்களுக்குப் பண விரையம் அதிக முண்டாயிற்று. என்ற ஹம், அவ்வழக்கில் என் தாயாதிகளுக்கே வெற்றி யேற் படும்போ லிருந்தது. அவ்வாறு ஏற்படுமானல் என் சகோ தரர்களுக்குச் சொத்துக்களைப் பங்கு பிரிக்கும் விஷயமாக என் தந்தை எழுதி வைத்திருந்த மரண சாஸனப் பத்திரம் (Will) ரத்து செய்யப்பட்டு மாற்ற வேண்டிவரும். அவ் விதம் வந்தால் அச் சொத்துக்களை எவ்வாறு பங்கிடுவது என்பதுபற்றி, எங்களுக்கு மிகவும் வேண்டிய பெரி யோர்கள் சிலரை வரவழைத்து அவர்களோடு என் தந்தை ஆலோசித்துக்கொண் டிருந்தார். அந்த ஆலோசனையின் முடிவில் அப் பெரியார்களில் ஒருவர் என் தந்தையை நோக்கி, “ஐயா! நீர் உமது சொத்தைப் பிள்ளைகளுக்குப் பங்கிடுவ தெல்லாஞ் சரிதான்; கணவனை இளமையிலேயே இழந்து நிராதரவா யிருக்கும் உம் மகளுக்கு என்ன வைக் கப் போகிறீர்? அதைப்பற்றி யொன்றும் யோசிக்கவே யில்லையே! உமக்குப் பின் அப்பெண்ணின் கதி என்ன? நீர் இருக்கும்போது அவளைக் கவனியாத பிள்ளைகளா உமக்குப் பின்னர் அவளை அருமையாக வைத்துக் காப்பாற் றப் போகின்றனர்? இப்போது உமது மருமகள்மார் அவளைக் கொடுமைப்படுத்தி வருத்துவதாக நீரே கூறு கிறீர்! உமக்குப் பிறகு அவர்களது ஆதிக்கத்தைச் சொல்ல வேண்டுமா? நாங்கள் அவள் கணவனை யிழந்தபோதே சொன்னோம்; தகுதி வாய்ந்த ஒருவனுக்கு மறுமணமாகி லுஞ் செய்து வையும்; அல்லது சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள் மேற் பார்வையில் நடத்தப்பெறும் ‘விதவைகள் விடுதி’யி லாயினுஞ் சேர்த்துப் படிக்க வையும் என்று.

அதெல்லாம் கூடாதென்று ஏதேதோ சாக்கு போக்கு கூறினீர். இப்போது என்ன சொல்லப் போகிறீர்? நீர் இறந்தவுடனே வரப்போகும் 'லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனி' பணத்தையாகிலும் அப் பெண்ணுக்கு எழுதி வையும் ஐயா!" என்று கூறினர். மற்றவர்களும் அதை ஆமோதித்தனர்.

இதைக் கேட்டதும் என் தந்தை முகங் கருகிவிட்டது. எனினும், தம் நிலையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "என்ன அண்ணா! நீங்கள் கூட இவ்விதம் உலகானுபவம் இல்லாமல் பேசுகிறீர்கள். காமாட்சிக்கு யான் கட்டிவரும் 'இன்ஷியூரன்ஸ்' பணத்தை எழுதிவைக்க வேண்டுமென்று நம் ஆன்மநாதன் அடிக்கடி வற்புறுத்தி கூறி வருகிறான். அவன் சிறு பையன்; உலகானுபவம் இல்லாதவன்; தற்போதைய நவீன நாகரிகத்தில் மயங்கி அவ்வாறு கூறுகிறானென்று நினைத்தால், நீங்கள்கூட இப்போது அப் பாடத்தை ஒப்பிக்க ஆரம்பித்து விட்டீர்களே! அவன் ஏதாகிலும் உங்களுக்கு உபதேசம் பண்ணினானா? என்ன! அந்த நவநாகரிகப் பேச்செல்லாம் நமக்கு வேண்டாம், அண்ணா! நம் முன்னோர்கள் காட்டிய வழியே நாம் போவோம்.—ஆண்பிள்ளைகள் நம்மை மோக்ஷ லோகத்துக்கு அனுப்பக் கூடியவர்கள். அவர்கள் வயிற்றில் பிறக்கும் சந்ததிகளின் மூலம் நம் பெயர் நீண்டகாலம் இந் நிலவுலகில் நிலவப் போகிறது! அவ்விதம் சாயுச்யத்தைத் தரும் புதல்வர்களுக்கு நம் சொத்தை அளித்தல் தகும். நம் வயிற்றிற் பிறந்து வளர்ந்தாலும் பெண்கள் எப்போதும் அயலார் வீட்டுக்குப் போய் அவர்கள் குடும்பத்தை விருத்தி செய்ய வேண்டியவர்கள்; அக் குடும்பத்தின் நன்மை தீமைகளை யனுபவிக்க வேண்டியவர்கள்.

ஏதோ காமாட்சியைப் போல் ஒருவ ரிருவர் தலை விதிப் படி தாலி யறுத்துவிட்டுத் தந்தை வீட்டில் இருந்து வந்தாலும், சகோதரர்கள் முதலியோர் ஆதரவிலேயே எத்துணை கஷ்டப்பட்டாயினும் இருக்க வேண்டுமே யொழிய, அவர்களுக்குத் தனியாகச் சொத்து எழுதி வைத்தல் எவ்விதத்திலும் பொருந்தாது. நீங்கள் சொல்லு கிறபடி காமாட்சிக்கு இன்ஷியூரன்ஸ் பணத்தை யெழுதி வைக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அவள் வீட்டைவிட்டு வெளியேறி எவனையாகிலும் இழுத்துக் கொண்டு போய்விட்டால், அச் சொத்து அவளால் விரும் பப்பட்டவனை யன்றோ சேரும்? யான் அரிதின் முயன்று தொகுத்த செல்வத்தை என் மைந்தர்கள் அனுபவியாது வேறொருவனோ அனுபவிப்பது? பெண்கள் சாதாரண மாகவே பிற ஆடவர்கள்மீது மனத்தைச் செலுத்துபவர் கள்; அவ்விதத் தன்மை வாய்ந்த அவர்களுக்குச் சொத்து மிருந்தால், அதன் பலத்தால் அவர்கள் தாங்கள் விரும்பிய ஆடவர்களோடு கூடி யின்புறத் தைரியமு முண்டாய்விடும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?" என்று நீண்ட தோர் பிரசங்கஞ் செய்தார்.

குறுகிய நோக்கமும், முரட்டுப் பிடிவாதமு முடைய என் தந்தையின் வார்த்தையைக் கேட்ட அப்பெரியார்கள், மேலும் அவரோடு அதுபற்றிப் பேச விரும்பாது வாளா விருந்தனர். இவர்கள் என்னைப் பற்றிப் பேசிய பேச்சைக் கேட்ட என் மனம் என்ன நிலையை அடைந்திருக்கு மென்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள், சகோதரரே!

அஃது ஒருபுறமிருக்க, என் தம்பியின் இரண்டாந் திருமணத்திற்குப் பின்னர், என் காதலர்—என் ஆன்ம

நாதர்—முன்னேயினும் என் வீட்டுக்கு அடிக்கடி வரும் வழக்கத்தைப் படிப்படியாக நிறுத்தி விட்டார். அவர் இரண்டு வாரத்துக் கொருமுறை, மாதத்துக் கொருமுறை எங்கள் விட்டுக்கு வந்து என் தந்தையோடு மட்டுஞ் சிறிது நேரம் பேசிவிட்டுச் சென்றார். அவசியம் நேர்ந்தாலன்றி என் சகோதரர்கள் முதலியவர்களிடம் அவர் பேசுவ தில்லை. என் அண்ணி, தான் எங்கள் களவொழுக்கத்தைப் பற்றி அலர் தூற்றியதை அவர் அறிந்து கொண்டார் என்ப தைக் குறிப்பா லுணர்ந்து, அவர் முன் வரவும் நாணங் கொண்டாள். எனக்கோ, அவர் முன்போல் என்னோடு அளவளாவி மகிழ்வதற்கில்லையே என்ற ஏக்கம் பெரிதா யிருந்தது. அதனால் என் மனம் சலனமுற்றுப் பலவிதமாக எண்ணி யெண்ணி வேதனையுறும்.

என் தந்தை ஆன்மநாதர் முன்போல் தம்மிடம் அளவளாவுவதில்லை யென்றும், தினந்தோறும் தம்மைப் பார்த்துச் செல்வதில்லை யென்றும், தம்மை ஒரு பொரு ளாக மதிப்பதில்லை யென்றும் எண்ணி என் காதலர் மீது மாறுகொண்டு அவரைப் பற்றிப் பலரிடமுங் குறை கூற லானார். என் காதலர் முன்போல் தினந்தோறும் வந்து தம்மோடு அளவளாவாததற்குத் தாமே காரணமென் பதை ஒரு சிறிதுஞ் சிந்தித்துப் பாராது, என் தந்தை என் காதலரைக் குறை கூறுவது அழகேயோ! 'கேடுவரு முன்னே மதிகெட்டு வரும்' என்ற நீதிமொழிக் கிலக் காகிய என் தந்தை, குணக்குன்றான என் காதலரைப் பற்றிக் குறை கூறிப் பலர் பகைக்கு ஆளானார். இவ்வாறே அவர் இளம் பருவத்திலிருந்தே ஒவ்வொருவரைப் பற்றியுங் குறை கூறித் தம் வாணளில் பெரும்பாலாருடைய விரோ தத்தைப் பொருளாகச் சம்பாதித்துக் கொண்டார்.

பங்காளிகள், மற்றும் உறவினர்கள், சிநேகிதர்கள், புலவர்கள் முதலியவர்களெல்லாம் அவரை வெறுப்பது 'புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழும்' தன்மையால் தான் என்பதை உங்களுக்குச் சொல்லவேண்டிய தில்லை. தாமே தமக்குப் பகையாக—தம் நாவே தமக்குப் பகையாக இருப்பதை யுணராத—சிறிதுஞ் சிந்தித்துப் பாராத என் தந்தை, எல்லாரும்—தம்மால் நன்மை பெற்றவர்களும் கூடத் தம்மைப் பகைமை பாராட்டுகிறார்களென்றும், உலகத்திலுள்ள மண், மரங்கூடப் பகையா யிருக்கிறதென்றுங் கூறிச் சில சமயம் தமக்குத் தாமே வருத்தப்படுவார். என் தந்தை, என்னதான் தம்மைப்பற்றிக் குறைகூறி வைதாலும், என் காதலர் அவர்மீதுள்ள அன்பை மாற்றவில்லை. சமயம் நேரும்போதெல்லாம் அவருக்கு உதவிகள் புரிந்து தம் கடமையைச் செய்துவந்தார். இவரன்றோ நற்குண நற்செய்கைகளுக்கு உறைவிடம்! செம்மைக்குச் சேமநிதி! பெருந்தன்மைக்குப் பெருங் கடல்! பொறுமைக்குப் பூமி!

இதுகிடக்க, என் தம்பியின் இரண்டாம் மனைவி பிறந்தகம் விட்டுப் புக்ககம் புகுந்ததும், எங்களது வீட்டில் ஒரு பெரு மாறுதல் ஏற்பட்டது. என் தம்பி மனைவி என் அண்ணியைப் போல் நாட்டுப் பெண்ணல்லள்; ஆதலால் தந்திரத்திலும், வாய் வீச்சிலும் அவள் என் அண்ணியை விட எந்த விதத்திலும் பின் வாங்கியவ ளல்லள். அவள் எங்கள் வீட்டில் அடியெடுத்து வைத்ததும், என் அண்ணிக்கும் அவளுக்கும் துவந்த யுத்தம் நடைபெற்றது. அவர்கள் ஒருவரை யொருவர் அடக்கியாள முயன்றனர். இவர்களிடையே ஏற்பட்ட சச்சரவு என் சகோதரர்கள் வரையில் சென்றது. இதுவரையில் மனத்துக்குள் மாறுபாடிருந்

தாலும், ஒருவருக்கொருவர் எதிரில் நின்று பேசியறியாத என் சகோதரர்கள், தங்கள் மனைவிமாரின் தலையணை மந்திரோபதேசத்தால் கட்டுண்டு அறிவிழந்து, கடுமையாக ஒருவரை யொருவர் வைது கொண்டனர். இவர்களது போரைத் தடுப்பதற்கு என் தந்தையால் முடியவில்லை. அவர் கூறும் நியாயத்தை இவர்கள் செவியில் வாங்கினால் தானே! 'இரண்டாட்டுக் கடாச் சண்டையில் நரி செத்தது' போல், யான் இவர்களின் பூசலுக்கிடையே மிகவுந் துன்பத்தை யடைந்தேன். என் செய்வது! என் தலைவிதி அவ்வாறு இருந்தது! சில சமயங்களில் வீட்டில் இடையறுது நடக்கும் அமளியைப்பற்றியும் அதனால் யானடையும் தொல்லையைப் பற்றியும் வெளியே சென்று வரும் என் தந்தையிடம் கூறுவேன். அவர் ஆயாசப்பட்டு என்மீது சீறிவிழுந்து, 'ஊரில் வரும் சாவு உனக்கு வரவில்லையே' என்பார். சில சமயங்களில், என் காதலரிடமும், மற்றுஞ் சிலரிடமும் என் தந்தையார், "வீட்டில் என் பெரிய மருமகள் செய்யுந் தொந்தரவுக்கு அளவில்லை. என் பிள்ளை அவளுக்கு அடிமையாக இருக்கிறான். அவன் மிஞ்சி ஏதேனுங் கேட்டு விட்டாலோ, ஒரு கூச்சல் போட்டு அவள் இவனைப் பயப்படச் செய்து அடக்கி விடுகிறாள். என்ன செய்வது! இத்தொல்லையை யெல்லாம் பாராது நான் எங்காகிலும் போய் விடுவேன். எனக்கு ஒரு விலங்கு இருக்கிறது. அது என் கால்களை இறுகக் கட்டி எங்கும் போக வொட்டாது செய்து வருகிறது. என் மகள் சீக்கிரம் இறந்துவிட வேண்டுமென்று ஆண்டவனை அநுதினமும் பிரார்த்திக்கிறேன். இன்றைக்கே அவள் செத்தாலும், பிரேதத்தை அடக்கஞ் செய்துவிட்டு உடனே எங்காகிலும் போய் விடுவேன். எனக்கு வரும் பென்ஷனை (உபகார்ரச் சம்பளம்)க் கொண்டு நான் காலங்

கழிக்க முடியாதா! அதுதான் இல்லையென்றாலும், எனக்கு ஒரு கவளம் அன்னம் யாராகிலும் போடமாட்டார்களா!" என்று விரக்தியாகக் கூறி வருந்துவார்.

இவ்வாறு சில நாளானதும், என் அண்ணி, புதுமணப் பெண்ணிடம் தன் கை வரிசை செல்லாதென்று அறிந்து அவளைத் தந்திரமாகத் தன் வசப்படுத்திக்கொண்டு என்னையும், என் தந்தையையும், என் தம்பியையும் துன்புறுத்தலானாள். நான் எப்போதும் வீட்டிலிருப்பதால் மற்றவர்களைக் காட்டிலும் நானே அவர்கள் செய்யுங் கொடுமைகளை அநுபவித்து வந்தேன்.

பன்னிரண்டாவது அதிகாரம்

சோதனை தாங்காமல் சோர்ந்த உள்ளம்

அது நிற்க, இனிக் கடைசியாக இப்போது சொல்லப் போகும் வரலாறு என் வாழ்க்கையிலேயே என்றும் மாறாத பெருங் களங்கமாகும். இக் களங்கமே என் வாணாளின் இறுதிக் காலத்தைக் காணும்படியாகச் செய்தது. ஆனால், சகோதரரே! இதைக் கேட்டு அருளுளங் கொண்ட நீங்கள் என்மீது இரக்கங் கொள்வீர்களன்றிக் கோபங் கொள்ளமாட்டீர்களென்று நம்புகிறேன்.

என் காதலர் என்னிடம் சரியாகப் பேசி இரண்டு வருடங்களாயின. அவர் நட்பு எனக்கு கிடைத்து எட்டு ஆண்டுகளாயின. எனினும், அவர் காதலில் கட்டுண்டு

அளவளாவி மகிழ்ந்த காலம் ஐந்து வருடங்களே யாகும். இவ்வைந்து வருடங்களிலும் என் காதலரோடு நான் காதல் மொழி பயிற்றிக் 'காமக் கடும்புனல் நீந்திக் கரை கண்டது' விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நாட்களே யிருக்கும். இவ்வாறு 'கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலன்'களும் ஆரத் துய்த்து இன்புறுவதற்குள், எங்கள் காதலொழுக்கத்துக்கு முட்டுக்கட்டை போடப் பட்டது. 'மலரினும் மெல்லியதாகிய காமத்'தின் செவ் வியை உணர்ந்து தலைப்பட்டுவந்த எங்களது கூட்டுறவுக்கு இடையூறு ஏற்பட்டதும், நான் அந்தரத்தில் விடப்பட்ட வள் போலானேன். 'காதல் என்பது என்ன? பூதமோ? பேயோ? வெருட்டினால் நாய்போல் ஓடிடும்' என்று எண்ணி யிருந்த காலத்தைக் கடந்து 'சிற்றின்பம் வேம் பெனினும் கைக் கொள்ளக் கூடிய பக்குவ நிலை'யை அடைந்த யான், என் காதலரோடு அளவளாவுத லின்மை யால் மிகவுந் துன்பத்தை யடைந்து வருந்தினேன். நாளாக ஆக, என் உள்ளத்தில் எழுந்த காம எழுச்சியும் வளர்ந்து கொண்டே வந்தது. 'காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும்' இக் காமநோயைத் தீர்க்கும் மருத்துவராகிய என் காதலரைத் தனித்துச் சந்திக்கும் வாய்ப்பை ஒவ்வொரு நாளும் எதிர் பார்த்துக்கொண் டிருந் தேன். 'அந் நன்னாள் விரைவில் வரட்டும்! அப்போது என் பைதல் நோய் எல்லாங் கெட என் காதலரைப் பருகு கிறேன்' என்று என்னுள் எண்ணுவேன். 'கொலைக்களத்து ஏதிலர் (கொலையாளிகள்) போல வரும் மாலை'க் காலத் தைப் பார்த்து நான் நடுங்குவேன். கொடிய இரவு எவ்வாறு கழியுமோ என்று மயங்கி யயர்வேன். காதலைப் போல கண்ணோட்ட (தாக்ஷணியம்) மில்லாத பொருள் இவ்வுலகத்திலேயே கிடையாது என்று எண்ணுகிறேன்.

அது என் நெஞ்சத்தை நடுயாமத்தும் ஆண்டு தொழில் கொள்ளும். இதனால் காதல் தீ கொழுந்து விட்டு எரிந்து என் உடலை வெதுப்பி வந்தது. அவ் வெப்பத்தைத் தாங்காது நான் புழுப்போல் துடிதுடித்தேன். என் கண்ணனைய காதலரைக் காணப் பெறாமையால், என் கண்கள் அழுது அழுது நீரைச் சொரிய முடியாது வற்றிவிட்டன. அவைகளின் பிரகாசமு மற்றுவிட்டது. அவர் திருமணஞ் செய்து கொள்வேன் என்று சொன்ன நாளைச் சுவரிலே குறித்து எண்ணி என் விரலும் தேய்ந்து போயிற்று. காதல் பெருங் கடலே என் முன் தோன்றி நிலைத்திருந்தது; ஆனால் அதை நீந்தும் கருவியாகிய தெப்பத்தை யான் காணவில்லை. இவ்வாறாக வருத்தப்பட்டுக்கொண் டிருக்கும் நான் என் காதலர் தந்த உறுதி மொழியை நினைந்து சில சமயம் மனந் தேறி யிருப்பேன். மற்றொரு சமயம், முன் காதலரோடு அநுபவித்த இன்பத்தை நினைந்து மகிழ்ந்திருப்பேன். எத்தனை நாள் இவ்வாறு காலங் கழிக்க முடியும்? உலகத்திலுள்ள உயிர்களை யெல்லாம் உறங்கச் செய்யும் இரவு, என்னையே துணையாகக் கொண்டதுபோலும்! என்னைத் தவிர அதற்கு வேறு துணை யில்லையோ? என்னவோ? நான் இரவெல்லாம் கண் மூடாது அல்லலுற்று பொழுது எப்போது புலருமென்று ஏங்கி யிருப்பேன்.

உறக்க மில்லாது காதல் நோயால் வருந்தும் எனக்கு உணவும் நஞ்சாகி விட்டது. உணவு உட்கொள்ள யான் மனங் கொள்வதே யில்லை. அவ்வாறு ஏதேனும் உண்டாலும் ஜீரணிப்பதில்லை. அஜீரணத்தால் நான் அடிக்கடி நோய்வாய்ப் படலானேன். என் வீட்டார் என் நோயைத் தீர்க்க ஏதேதோ மருந்துகளைக் கொடுத்தனர். அம் மருந்துகளால் என் உடல் நோய் தீர்ந்தாலும், மனநோய்

தீருமோ? மனநோயைத் தீர்க்க மருந்து முளதோ? உணவு மில்லை; உறக்கமு மில்லை. என் நிறையும் அழிந்தொழிந்தது. மனமோ கட்டுக் கடங்கவில்லை. காமவெள்ளம் கரைபுரண்டு ஓடி என் சித்தத்தை மிகவும் சபலமடையச் செய்துவிட்டது.

ஊண் உறக்க மில்லாது உடல் மெலிந்து கண் குழிந்து கன்னங்கள் வற்றியிருக்கும் என் பரிதாப நிலையைக் கண்டும், என் காதலர் பராமுகமாகவே யிருந்தார். அவரது மௌனத்தையும், அமைதியான தன்மையையும் கண்டு நான் ஆச்சரிய மடைந்தேன். 'பேச்சுக்குக் கூடவா பஞ்சம்? என் வீட்டார் காவ லில்லாதபோது கூட ஏன் அவர் என்னைப் பார்க்கவோ, பேசவோ அஞ்சுகிறார்? என்னைப் போல் அவர் காதலால் வருந்துவ தில்லையோ? என்னை வருத்துவதுபோல் அவரைக் காதல் வருத்தாதோ? என்னோடு அளவளாவி மகிழவேண்டுமென்று அவருக்கு ஆசை யிருக்காதோ? ஒருவேளை மற்ற மங்கையர்களின் மையலில் கட்டுண்டு என்னை மறந்தாரோ? அவர்பால் கலாசாலை மாணவிகள் பலர் தமிழ் இலக்கிய நூல்களைப் படித்து வருகின்றனரே! அப் பெண்மணிகள் அவரைத் தங்கள் வசப் படுத்தி விட்டனரோ? அவ்வாறுதா னிருக்கவேண்டும். நாகரிக நாரீமணிகளாகிய அந் நங்கையர்களின் இளநல முண்டு மகிழ்ந்திருப்பதனால்தான் அவர் என்னை மறந்திருக்கிறார். என்னோடு பேசாமலு மிருக்கிறார்; ஆமாம். இதில் சந்தேகமில்லை' என்று பலவாறு எண்ணி, காமத் தீயைத் தமது செம்மை யென்னும் நீரால் அவித்து நன்னெறியில் ஒழுகிவரும் ஆன்மநாதரது தன்மையை உணராது அவர்மீது கோபமும், வெறுப்பும் கொள்ளலானேன்.

* * *

ஒரு நாள் மாலை என் காதலரும் என் தந்தையாரும் எதைப் பற்றியோ உரையாடிக்கொண் டிருக்கையில், இரு

மங்கையர் எங்கள் வீட்டுக்கு வந்தனர். அவர்களில் ஒருத்திக்குப் பதினெட்டு வயதிருக்கும். மற்றொருத்திக்கு இருபத்தொரு வயதிருக்கும். அவ்விரு காரிகைகளும் பேரழகிகள் என்பதில் ஐயமில்லை. அவர்களுடைய கம்பீரத் தோற்றமும் பெருமித நடையும், அவர்களைச் செல்வச் சீமான்களின் புதல்விகளெனத் தெரிவித்தன. பின்னர், அவர்கள் பேசிய பேச்சிலிருந்து இளையவள் சைவ வேளாளப் பெண்மணி யென்றும், முதியவள் பார்ப்பன மங்கை யென்றும் அறிந்தேன். முதலில் அவர்கள் என் தந்தையைக் காணத்தான் வந்திருக்கிறார்களென்று நான் எண்ணினேன். ஆனால், அவர்கள் என் காதலரை நாடி வந்தனர். அவர்களைக் கண்டதும் என் காதலர் மகிழ்ச்சியோடு வரவேற்று, என் தந்தைக்கு அறிமுகப் படுத்திவைத்தார். பின்னர், அவர் அம் மகளிரோடு வெளி முற்றத்துக்குச் சென்று நீண்ட நேரம் ஏதோ பேசிக்கொண்டிருந்து, கடைசியாக அவர்களுடனேயே மோட்டார் காரில் ஏறிச் சென்றார்.

இக் காட்சியைக் கண்டதும் என் மனம் எவ்வாறு பாடுபட்டிருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். ஒரு பெண் எதை வேண்டுமானாலும்—உயிரைக் கூடக் கொடுப்பாள். தன் வாழ்வைக் கொடுக்கச் சம்மதியாள். தன் கணவன் வேறொருத்தியோடு களிப்புற்றிருப்பதைக் காணச் சகியாள். அவ்வாறிருக்க, நான் என் காதலர் வேறு நங்கையரோடு கூடி யொன்றாக உட்கார்ந்து செல்வதைக் கண்டு மனம் பொறுத்திருப்பேனோ!..........."

நான், "இடையே ஒரு வார்த்தை, காமாட்சி! உன் காதலரைக் கண்டு பேசி அழைத்துப் போக வந்த பெண்மணிகளைப் பற்றி நீ ஏன் இவ்விதங் கருதுகிறாய்? அவர்

கள் அவருடைய மாணவிகளாகவோ அல்லது சிநேகிதைக ளாகவோ இருக்கலாம். அம் மங்கையர் உன் காதலருடன் உரையாடிக் காரில் அழைத்துக்கொண்டு போனதாலேயே அவர்களுடைய கூட்டுறவைப் பற்றி நீ தப்பபிப்பிராயங் கொள்ளலாமா! நீ இவ்விஷயத்தில் மிகவும் அவசரப்பட்டு விபரீதமான எண்ணங் கொண்டது தவறு என்று நான் கருதுகிறேன்" என்று நயமாகச் சொன்னேன்.

காமாட்சி, "அதில் சந்தேகமென்ன, அண்ணா! என் சித்த சபலமும், பொறாமை புத்தியும் சேர்ந்து தான் என்னை அவ்விதம் நினைக்கச் செய்தன. 'அருண்டவர் கண்களுக்கு இருண்ட தெல்லாம் பேய்' என்பது பழமொழி அல்லவா! அதுபோல, என் மன மயக்கத்தால் அவர் மீது கொண் டுள்ள மாற்சரியம் வளர்ந்து, அவரது ஒவ்வொரு நட வடிக்கையையும் தவறாக நினைத்துச் சந்தேகிக்கச் செய் தது.—எனக்கு ஆத்திரம் பொங்கி யெழுந்தது. அப்பெண் கள் அப்போது என்னெதிரில் இருந்தால் அப்படியே கிழித்தெறிந் திருப்பேன். ஆ! என் காதலர் மீது எனக் குண்டான கோபம் அளவிடற் பாலதன்று. ஏற்கனவே நான் கொண்டிருந்த சந்தேகம் இதனால் வலுத்தது. பொறாமைப் பேயால் பீடிக்கப்பட்ட யான் என் காதலர் மீது மிகவும் வெறுப்புக் கொள்ளலானேன். இதனால் என் மனச் சபலமும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது.

அதற்குப் பின்னர், என் காதலரோடு பேச எப் போது சந்தர்ப்பம் வாய்க்கும் என்று ஆவலுடன் எதிர் பார்த்திருந்த யான், அவர் என்னோடு பேச வந்தாலும், நான் முகத்தைச் சுளித்துக்கொண்டு, வெடுவெடுப்போடு பேச லானேன். ஆனால், அவர் என் மன மாறுதலைக் கண்டும்,

ஆத்திரத்தோடு பேசுவதைப் பார்த்தும் என் மீது கோபங் கொள்ளவில்லை. சிரித்துக்கொண்டே தான் செல்வார். இது எனக்குப் பற்றி யெரிகிற நெருப்பில் நெய் விட்டாற்போ லிருக்கும். அவர் தம் களவொழுக்கத்தை யான் அறியா வாறு மறைக்க, அவ்வாறு பொய் நகை செய்கிறாரென்று நினைத்து மேலும் மேலும் அவர்பால் வைரங் கொண்டேன்.

முதலில் மிகச் சிறிதாக என் மனதில் ஏற்பட்ட இம் மாறுதல் நாளடைவில் மிகப் பெரிதாகி என்னை உருக் குலைத் தது. பொறுமைக் குணமும், கோபமும் என்னை அரக்கி யாக்கி, என் நற்குண நற்செய்கைகளை யெல்லாம் படிப் படியாக ஒழித்து வந்தன. என் மனம் கெட்ட குணங்களுக் கெல்லாம் இருப்பிட மாயிற்று என்று கூறின் அது மிகை யாகாது.

இஃதிங்ஙன மிருக்க, மாலைக் காலங்களில் எங்கேனும் வெளியே செல்வது தவிர, மற்ற நேரங்களில் ஒரு வேலையு மில்லாது வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருக்கும் என் தந்தை வீதியில் போவார் வருவாரை யெல்லாங் கூப்பிட்டுப் பேசிக்கொண் டிருப்பார். எங்கள் வீதி வழியாக ஆடம் பரமாக உடுத்திக்கொண்டு கம்பீரத் தோற்றத்தோடு யாரா கிலும் போனால், ஒரு முறைக்குமேல் அவ்வழி செல்வதைப் பார்த்தால் அவர்களை எப்படியாகிலும் தாமே வலியப் போய் சிநேகஞ் செய்து, போகும் போதும் வரும்போதும் எல்லாம் கூழைக் கும்பிடு போட்டு பேச வைத்து விடுவது என் தந்தைக்கு வழக்கம். எங்கள் ஊரில் சினிமாப் படக் காட்சிச் சாலை யொன்று வந்திருந்தது. அச் சாலையின் மானேஜர் எங்கள் வீட்டுக்குச் சிறிது தூரத்திலுள்ள வீட் டில் குடியிருந்து வந்தார். அவர் மாலைக் காலங்களில் சினிமாப் படக் காட்சி சாலைக்கு எங்கள் வீதி வழியாகத்

தான் போவார். இதைப் பார்த்த என் தந்தை அவரை எவ்வாறோ சிநேகம் பண்ணிக் கொண்டார். அதனால் அவர் தினந்தோறும் கால் மணி நேர மாயினும் என் தந்தை யோடு பேசிவிட்டுப் போவார். அவர் நாகரிகமாக உடை யுடுத்திக் கொண்டிருந்ததோடு பார்ப்பதற்கு அழகாகவும் கம்பீரமாகவும் இருந்தார். எனவே, அவரை அடிக்கடி பார்க்கவே, மேற் கூறியபடி சபலமுற் றிருந்த என் மனம் அவர்மீது சென்றது. அவர் நட்பை எவ்விதமாயினும் பெற் றால், நான் நன்றாக வாழலா மென்றும் எண்ணி மனக் கோட்டை கட்டினேன். இத் தீய வெண்ணம் என் மனத் தில் உரங் கொள்ளவே, நான் அம் மனிதர் வரும் நேர மறிந்து வீட்டு வெளிப்புறத்தில் போய் நின்று அவரைக் கூர்ந்து நோக்கி அவர் என்னைக் கவனிக்கும்படியாகச் செய்வேன். இவ்வாறு பலநாள் நான் கற்ற மாய வித்தை களையெல்லாங் காட்டி அவரை என்மீது விருப்பங்கொள்ள வைக்க முயன்றேன். ஊருராகச் சென்று உளவறிந்த அம்மனிதர் என் மாய வலையில் சிக்கவில்லை. என் சாகஸம் பலிக்காது போகவே நான் மனம் சோர்வுற்றேன்; ஆனால் நான் அத்துடன் நின்றுவிட வில்லை.

என் வீட்டுக்கு எதிர் வீட்டில் கிறிஸ்தவக் கனவா னொருவர் குடி வந்தார். அவர் நீதி மன்றங்களில் வழக் கறிஞராக இருப்பவர். அவர் மனைவி ஒரு உயர்தரப் பெண் கள் பாடசாலைக்குத் தலைமை உபாத்தியாயினியா யிருந்து வந்தார். அவர்கள் அங்கு குடியேறிய சிறிது காலத்திற் கெல்லாம் அவர்க ளிடையே ஏதோ குழப்ப மேற்பட்டு, மனைவி கணவனை விட்டு வேறு இடத்துக்குத் தம் மக்க ளோடு சென்று விட்டார். எனவே, நான் உயர் நிலையி லிருக்கும் அம்மனிதரின் கூட்டுறவைப் பெற இதுதான்

நல்ல தருணமெனக் கருதிப் பெரிதும் முயன்றேன். அவர் மேன் மாடியி லிருந்து பார்க்கும்போது நான் வெளியி லிருந்து அவரைப் பார்ப்பேன். கீழிருக்கும்போது ஜன்னல் வழியாக இருந்து கூர்ந்து கவனிப்பேன். அவரது வீட்டி லிருக்கும் வேலைக்காரப் பையனைக் கூப்பிட்டுப் பேசிக் கொண்டிருப்பேன். இவ்வாறு என் மனநிலையைக் குறிப் பாக அவருக்கு அறிவித்து வந்தேன். அவர் அதற்கு அசைவதாகக் காணப்படவில்லை.

நான் அக் கிறிஸ்தவக் கனவானைக் கவனித்து வருவதை என் தந்தை எவ்வாறோ அறிந்துவிட்டார். அவர் கடுமை யாக என்னை வைது, இனிமேல் அவ்வாறு நின்று அம் மனிதரைப் பார்க்கக் கூடாதென்றும், அவ்வீட்டு வேலைக் காரப் பையனைக் கூப்பிட்டு பேசக்கூடா தென்றும் கட் டளை யிட்டார். அப்பையன் மூலம் அம் மனிதருக்கு ஏதேனும் கடிதம் எழுதி யான் கொடுக்கப் போகிறேன் என்று அவர் பயந்தார். நான் அக் கிறிஸ்தவக் கனவானைக் கவனித்துக் கொண்டிருந்ததை என் காதலர் ஒரு நாள் பார்த் துக் கொண்டே வந்தார். எனினும், அவர் அதைக் குறித்து என்னை யொன்றுங் கேட்கவில்லை. அச்சமயம் அவர் முகம் மாறுதலடைந்து காணப்பட்டாலும், தாம் அதைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

கிறிஸ்தவக் கனவான்மீது வைத்த குறியுந் தவறி விடவே, யான் மற்றும் பலரை நாடினேன். என் தந்தை வீட்டிலிருக்கும் காலங்களில் ஜன்னல் வாயிலாகவும், மற்ற நேரங்களில் வீட்டு வெளிப்புறத்தில் நின்றும் யான் வீதி வழியாகச் செல்லும் சுந்தர ரூபமுள்ள வாலிபர்களையும், நாகரிகமாக உடுத்திச் செல்லும் ஆடவர்களையும் கவனித்து

அவர்கள் பின்னே என் மனதைத் தொடர்ந்து செல்ல விட்டு வந்தேன்............"

நான் என் உள்ளத்தில் கிளர்ந்து எழுந்த உணர்ச்சியை யடக்க மாட்டாமல் மீண்டும் குறுக்கிட்டுப் பேசத் தொடங்கி, "ஐயோ, அம்மா, கடைசியில் இவ்வளவு கேவலமாக வெல்லாமா உன் மனத்தைச் சிதறவிட்டுச் சீர் அழிந்தாய்?—என்ன தான் காமவுணர்ச்சியால் விழுங்கப் பட்டாலும், இவ்வளவு பலவீனமாகவா மனத்தைப் பேதலிக்கச் செய்து, புலன்கள் போனவழியே பொறிகளைச் செல்லவிட்டு அல்லலுறுவது?—ஆன்மநாதர் மீது நீ கொண்டது உண்மைக் காதலாய் இருக்குமானால், உன் மனம் இவ்வளவுதூரம் பேதுற்று இருக்காது என்று நான் கருதுகிறேன். முதலில் உயர் காதலுக்கு உன்னத ஸ்தானம் அளித்த உன் உள்ளத்தில் சதையுணர்ச்சி மேலீட்டால் காமத்துக்கு இடங்கொடுத்து விட்டாய்..............." என்று குறுக்கிட்டு அபிப்பிராயங் கூறலானேன்.

"கண்ணா, இவ்விதம் சொல்வது எல்லாருக்கும் சுலபம் தான். வாய் வேதாந்தம் பேசுவது ஒன்றும் பிரமாதமில்லை. ஆனால், நடத்தையில் நடத்திக் காட்டுவதுதான் கஷ்டம்.—காமாட்சி ஸ்தானத்தில் நீ இருப்பாயானால்—நீ காமாட்சியாய் இருந்தால்—அப்போது தெரியும் விஷயம். உன் இனத்தவராகிய ஆடவர்கள் காமாட்சி பொறுத்திருந்த அளவுகூட பொறுமையை—அடக்கத்தைக் காட்டியிருக்க மாட்டார்களே?—பெண்கள் என்றால் விசித்திரப் பிறவிகள் என்று ஆண்களாகிய நீங்கள் எண்ணுகிறீர்கள். மகளிர் வெறும் சடப்பொருள்க ளல்லர். அவர்களும் உங்களைப் போல, மனித ஜன்மங்கள்தாம். உங்களுக்கு இருப்பது போன்றே அவர்களுக்கும் உள்ளமுண்டு; உணர்ச்சியுண்டு;

காமம், மோகம் போன்ற தாபங்கள் உண்டு என்பது உனக்கு நினைவிலிருக்கட்டும்........" என்று உணர்ச்சியுடன் கூறிக்கொண்டே என் அன்னையார் நாங்கள் இருக்குமிடத்துக்கு வந்தார். அவர் பேசிய தோரணையிலிருந்து, முதலில் வீட்டுக்கு வந்த விருந்தினர்களை உபசரிக்க வெளியே போயிருந்தாலும், வெகு சீக்கிரத்தில் திரும்பி வந்து, அறைக்கு வெளியிலிருந்தே காமாட்சி சொல்லி வந்த சுய சரிதையை ஒன்று விடாமல் முற்றுங் கேட்டுவந் திருக்கிறார் என்று தெரியலாயிற்று.

என் தாயாரின் எதிர்பாராத வருகையும் பேச்சும் காமாட்சிக்கு நாணத்தைக் கொடுக்கலாயின. இவ்வெட்க உணர்ச்சியைக் கண்ட எனக்கு, என் அன்னையும் உடனிருந்து காமாட்சியின் கதையைக் கேட்டிருந்தால் அவள் சொல்லிய விதமே வேறுயிருக்கும் என்று உணர்ந்தேன். தன் இனத்தைச் சேர்ந்த பெண்களிடமும் சொல்ல நாணங் கொண்ட விஷயங்களை, காமாட்சி என்ன காரணத்தாலோ ஆடவனாகிய என் பால் தன் உள்ளத்தைத் திறந்து தன் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் உள்ளது உள்ளவாறே (சிறிது விரஸமான விஷயங்களையும்) ஒளியாது உரைத்து விட்டாள் என்பதை ஊகித்தறிந்தபோது, எனக்குக் காமாட்சி விஷயத்தில் ஏதோ பொறுப்பும் கடமையும் இருப்பதாக உணரலானேன்.

காமாட்சி தன் நாணத்தை ஒருவாறு நீக்கி விட்டுப் பேசத்தொடங்கி, "அண்ணா, அம்மாவின் பேச்சைக் கேட்டீர்கள் அல்லவா! இப்போதாயினும் என் இரங்கத்தக்க நிலையை உணர்ந்தீர்கள் அல்லவா! இதற்குத்தான் தன் கட்சியைப் பேச எப்போதும் ஆள் இருக்க வேண்டும் என்று சொல்வது? அம்மா என் இனத்தவரா யிருந்ததால்தான்

உண்மை நிலையை உணர்ந்து சொன்னார். பாம்பின் கால்களைப் பாம்புதான் அறியமுடியும். அதுபோல, பெண் உள்ளத்தைப் பெண்களால்தான் அறியமுடியும். அம்மா என் போன்ற பெண்களின் மனநிலையை நன்கு அறிந்து இருந்ததனால், என் சித்த சபலத்தை உங்களைப் போன்று குற்றமாகக் கருதவில்லை. இவ்விதம் சொல்வதனால், நான் மன நிறையை இழந்தது தவறல்ல என்று வாதிப்பதாக நீங்கள் எண்ணப்படாது. நிலையும் சந்தர்ப்பமும் எப்பேர்ப்பட்ட சித்த முடையவர்களையும் சலனமடைய வைத்து விடும் என்ற உண்மையையே உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்பினேன். எனது அப்போதைய சோதனை நிலையும் சந்தர்ப்பமும் சுற்றுப்புற உணர்ச்சியும் என்னை மதிமயங்க வைத்து விட்டன என்பதை நீங்கள் அறிய வேண்டும். என் வாழ்க்கையில் கடைசியாக ஏற்பட்ட சோதனைகளுக்குத் தாங்காது மனம் சோர்ந்து விட்டேன். இதன் பயனாக, உயிரினும் சிறந்த காதலை இரண்டாம் பட்சமாக்கி, விரக தாபத்துக்கு முதல் இடங்கொடுத்து விட்டேன். இதனால் தான், காலத்தைக் கருதிக் காத்திருந்த காதலரைப் பற்றித் தப்பபிப்பிராயங் கொண்டு வெறுத்ததோடு, கண்டவர்களை யெல்லாம் காமுற்றுக் கருத்து அழியும் இழிநிலையையும் அடைந்தேன். இதனால் யான் கண்ட பயனென்ன? வீண் பழியும் பாவமுமே யல்லாமல் வேறு என்ன!...........என்னுடைய துயரவாழ்க்கையின் வரலாறு இன்னுங் கொஞ்சந்தான் இருக்கிறது. அதையுஞ் சொல்லி முடித்து விடுகிறேன். அப்புறம் உங்களுடைய அபிப்பிராயத்தைக் கூறுங்கள். மேலே நான் குறித்தபடி என்னுடைய சாகஸங்களால் எல்லாம் யான் ஒன்றும் பயன் காணவில்லை. வீண் பழியையே பெற்றேன். என்னொத்த மகளிரெல்லாம் என் செய்கையைக் கண்டு எளனஞ் செய்து

நகை யாடவே உடல் சுமந்தேன். முன்னர்க் கலாசாலை மாணவ னொருவன் என்னிடம் தகாத வார்த்தைகளைப் பேசிப் பலாத்காரமாக என்னைப் பற்ற வந்து என் அண்ணி யால் துரத்தப்பட்டான் என்று யான் சொன்னது உங்க ளுக்கு நினைவிருக்குமென்று எண்ணுகிறேன். அச் சம்பவத் திற்குப் பிறகு நீண்டநாள் எங்கள் வீட்டுக்கு வராதிருந்த அவன் ஒரு நாள் ஏதோ விஷயமாக என் தந்தையைப் பார்க்க வந்தான். அச்சமயம் என் தந்தையில்லை. அவனைப் பார்த்ததும் நான் முன்னர் அவன் சொன்ன வார்த்தைகளை நினைந்து, இச்சமயம் அவனை என் வசப்படுத்தி என் அவனுடன் சென்று வாழலாகாது என்று எண்ணினேன். உடனே நான் அவன் என் தந்தையைப் பற்றி வினவிய தற்குப் பதில் கூறிவிட்டு, என் குறிப்பை அவன் அறியும் படி வெளிக்காட்டி புன்னகை செய்து நின்றேன். இதைக் கண்டு அவன் அருவருப்பான முகத்தோடு அசட்டுச் சிரிப்பு சிரித்து என்னோடு ஒன்றும் பேசாது போய் விட் டான். இதனால் அவன் என்னை விரும்பவில்லை என்பதை அறிந்து மனமாழ்கினேன். இவ்விதத் தன்மை வாய்ந்த அவ் வாலிபனின் வார்த்தையை நம்பி அவனுடன் சென் றிருந்தால் என் கதி என்னவாயிருக்கும் என்று நினைத்துப் பார்த்தபோது, என்னை யறியாது என் உடம்பெல்லாம் நடுங்கியது. அவன் தன் காம விகாரத்தை யொழித்துக் கொண்டதும் என்னை நடுத் தெருவில் நிராதரவாக விட்டுப் பிச்சை எடுக்கவன்றோ வைத்திருப்பான்? இவ் வாலிப னைப் போன்ற சுயநல மிக்க ஆண்மக்களின் வஞ்சக வார்த் தையை நம்பி என்போன்ற சபல சித்தமுடைய மங்கையர் எத்தனை பேர் தங்கள் கற்பை இழந்து வாணாள் எல்லாம் துன்புற்றனரோ! எத்தனை பேர் மானமிழந்து உயிர் வாழ விரும்பாது தற்கொலை புரிந்து கொண்டனரோ!

பதின்மூன்ருவது அதிகாரம்

காதலர் உணர்த்த கழுவாய் நாடல்

இவ்வாறு யான் கண்டவர்களையெல்லாம் காமுற்றுக் கருத்தழிந்து நிற்பதைப் பார்த்து, என் வீட்டிலுள்ளார் அனைவரும் என் மீது முன்னையிலும் அதிகமாக வெறுப்புக் கொள்ளலாயினர். ஒவ்வொருவரும் என்னைக் கண்டவாறு வையவும் ஆரம்பித்தனர். என் வீட்டுக்கு வந்து செல்லும் பெண்களிடத்தில் எல்லாம் என்னைப் பற்றி என் அண்ணி பழிப்பாகக் கூறி வந்தாள். எனவே, ஊர்ப் பெண்கள் என்னைப் பார்த்ததும் முன்னையிலும் அதிகமாக இகழ்ந்து எள்ளி நகையாடினர். நேராகவே என்னை ஏசலாயினர்.

என் அண்ணியின் தூண்டுதலின் மீது அம்மங்கையரில் சிலர் என் கூடா வொழுக்க நிலையைப் பற்றி என் காதலருக்கு—(இழி குணத்தால் கற்பு நிலையை இழந்த யான் தூய குணம் படைத்த ஆன்மநாதரை என் காதலர் என்று மேலும் குறிப்பிடுவது எனக்கே வெட்கமா யிருக்கிறது. எவ்வாறு இருப்பினும், மனம் பலரை விரும்பி மாசுபட்டாலும், என் உடல் அவர் ஒருவருக்கே—அவரது புனித பரிசத்துக்கே ஆட்பட் டிருந்ததால், கடைசி வரையும் அவரை என் காதலரென்றே அழைக்க எனக்கு உரிமையுண்டு என்று உங்களுக் குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.) விவரித்துக் கூறினர். அவர் இதைக் கேட்டு எவ்வாறு வருந்தி யிருப்பாரென்று நினைக்கிறீர்கள். அவர் அளவிலா மனச் சங்கடத்தை யடைந்தார். ஒரு நாள் அவர் என்னிடம் வந்து வருத்தத்தோடு, 'காமு, உன் மீது பலவிதமாகப் புகார்

வந்தவண்ண மிருக்கிறது. நீ ஏதோ மனச் சபலமுற்று இருக்கிருயென்று நானும் அறிகிறேன். உன் செயலைப் பலரும் அறியுமாறு செய்து ஏன் பழிப்புக் காளாகிருய்? ஐயோ! இவ்விதம் மனமாறுதலை யடைவா யென்று நான் கனவிலும் நினைக்க வில்லையே!...........உம். (என்று பெருமூச் செறிந்து மீண்டும்) முன்னர் நீ எனக்கு உன் நிராதரவான நிலைமையைத் தெரிவித்தாய். என் மீது காதல் கொண் டிருப்பதாகச் சொன்னுய். நானும் உன்பால் காதல் கொண்டு உன்னை விவாகஞ் செய்துகொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொண்டாய். அதன்மீது, நானும் உன் வேண்டு கோளுக்கிணங்கி உன் தந்தைக்குப் பின்னர் உன்னை விவாகஞ்செய்து கொள்வதாக வாக்குறுதி தந்தேன். அதற்கு ஏற்ப உன்னிடம் அன்பும் பாராட்டி வருகிறேன். ஆனல், நீ இடையே ஏற்பட்ட தடையால்—நம்மிடை அளவளாவுத லின்மையால், மனச் சபலமுற்று அம்மனஞ் செல் லும் வழியே சென்று பரத்தை போல் பலரைக் காமுற்று கருத்தழிந்து மானமும் இழந்தாய். என்னே, உன் மனநிலை இருந்தவாறு! நீ உண்மையாக என் மீது காதல் கொண் டிருப்பாயானல் இவ்வாறு மனம் மாறுவாயோ! தூயதான காதலின் தன்மையை உணராது, காதல் காதல் என்று சொல்லி, மனமழிந்து சாதலில் பயனென்ன! நீ என் மீது கொண்ட காதலை மாற்றிக் கொண்டதைப் பற்றி நான் வருந்தவில்லை. நீ என்பால் காதல் கொண்டிருக்க வேண்டு மென்று எதிர் பார்க்கவில்லை. நிராதரவா யிருக்கும் உன் நலன் கோரியே நான் உன் விருப்பத்துக் கிசைந்தேன். உன்னை மணப்பதால் எனக்கு ஏற்படும் பழிப்பையும், எதிர்ப்பையும் பொருட் படுத்தாமல் எதிர்த்து நிற்கத் தயாரா யிருந்தேன்! கடமை செய்வதையே என் வாணுளின் குறிக்கோளாகக் கொண்டு ஒழுகும் என் தன்மையை நீ அறியா தொழிந்தாய்!

விதிவழி மதி செல்கிறது! அதற்கென்ன செய்ய முடியும்....? வேறு ஆடவரை விரும்பும் நீ இனி என்னை மறந்து விடு! நாம் பழமைபோல் சகோதரப் பான்மையுடனேயே ஒழுகி வரலாம். நீ வேறு யாரையேனும் விவாகஞ் செய்து கொள்ளும் விஷயத்தில் வேண்டுமானால், நான் உனக்கு உதவி செய்கிறேன். ஆனால், நீ உனக்கு வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் மிக விழிப்பாக இருக்க வேண்டும். அவனுடைய குணத்தையும், செயல்களையும், தகுதியையும் பல நாள் ஆராய்ந்து, அவன் உன்னிடம் மாறா அன்பு கொண்டு உன்னைக் கடைசிவரை காப்பாற்றுவானா என்று பார்த்து, அவனை விவாகஞ் செய்து கொள்வாயாக! நீ வாழ்க்கை நலன்கள் அனைத்தையும் பெற்று இன்பத்தோடு வாழவேண்டும் என்று விரும்பும் யான் இதற்கு மேல் அதிகமாகச் சொல்வதற்கில்லை" என்று கூறிவிட்டு என் வார்த்தையை எதிர்பாராமலே சென்று விட்டார்.

என் காதலரின் அருள் மொழியைக் கேட்டு நான் என்ன நிலையை அடைந்து இருப்பேன் என்பதை உங்களால் சிந்தித்துப் பார்க்கவும் முடியுமோ! அப்போதைய என் மன நிலையை ஆண்டவ னொருவனே அறிவான்.

என் காதலரது வார்த்தைகள் என் நெஞ்சைப் பிளக்கும் அம்புக ளாயின. கண்ணீரும் கம்பலையுமாய் அவ்விடத்திலேயே நீண்ட நேரம் என்னை மறந்து நின்றேன். அன்று நான் உணவும் உட்கொள்ளவில்லை. படுக்கையில் குப்புற விழுந்து நான் ஓவென அலறி யழுதேன். என் அழுகைக்கு இரங்கி என்னை ஏனென்று கேட்பார் யாருமில்லை. கடவுள்கூட என்பால் கருணை யற்றவனாகப் போய்விட்டான். என் அழுகை யொலி அவன் செவிகளுக்கு எட்டவில்லை போலும்! உலகெலாம் கண்ணுடையவனா யிருந்தும்

கடைக் கண்ணாலும் பாதகியாகிய என்னைப் பார்க்க அவன் விரும்பவில்லை. இரவெல்லாம் உறக்க மில்லாது இதே சிந்தனையில் ஆழ்ந்தேன். என் காதலர் கூறிய சொற்களின் உட்பொருளை யொவ்வொன்றாக ஆராய்ந்தேன். மன மாசு அடைந்த என்னை இனித் தன் காதலியாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் மறைமுகமாக எடுத்துச் சொன்னார் என்பதைத் தெளிவாக உணர்ந்தேன். இவ் விதம் என் காதலர் மன்னிக்க முடியாத என் குற்றத்தை உணர்த்திய பின்னர் தான், நான் ஒழுங்கான வாழ்க்கையி லிருந்து எவ்வளவு தூரம் வழுக்கி விழுந்து விட்டேன் என் பதை யுணரலானேன். அப் படுபாதாளத்திலிருந்து நான் சாமானியமாகக் கரையேற முடியாது என்றும் அறிந்தேன். ஆகவே, நான் மனதாலாயினும் செய்துள்ள குற்றத்துக்கு-பாவச் செயலுக்கு கழுவாய்-பிராயசித்தம் மாசுண்ட என் மனதுக்கு நிலைக்களனாக உள்ள தேகத்தை மாய்த்துக் கொள்வதுதான் என்ற முடிவுக்கு வந்தேன்.

'ஐயகோ! என் செய்வேன்! என் காதலரும் கைவிட் டனரே!—என் தந்தை என்னை வெறுக்கிறார்! என் சகோ தரர்கள் என்னை வெறுக்கிறார்கள்! அவர்களது மனைவிமார் என்னை வெறுக்கின்றனர்! உற்றார் உறவினர் என்னை வெறுக்கின்றனர்! ஊரிலுள்ளார் என்னை வெறுக்கின்ற னர்! என் காதலரும் என்னை வெறுத் தொதுக்குவ தென் றால், இனி யார் துணை பெற்று இவ்வுலகில் வாழ்வேன்? உலகிலுள்ள எல்லாரும் வெறுக்கும் ஒரு உயிர் இருந் தென்ன? போயென்ன? என் காதலரின் புனிதப் பரிசத் துக்குத் தகுதியற்ற மன மாசுபட்ட என் உடல் சுமந்து உயிர் வாழேன்! உயிர் வாழேன்!!' என்று கூறியவாறு படுக்கையினின்றும் எழுந்து, என் அறையை விட்டு வெளி

வந்தேன். என் தந்தை முதலியோ ரெல்லாம் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். கடிகாரத்தைப் பார்த்தேன். மணி மூன்றரை அடிக்குஞ் சமயமா யிருந்தது. அடிமே லடி வைத்து நடந்து பின்புறமுள்ள கதவை மெல்ல ஓசைபடாது திறந்து தலையை நீட்டி வீதியின் இருமருங்கும் பார்த்தேன். ஒருவருங் காணப்படவில்லை. கதவை வெளிப்பக்கந் தாளிட்டு விட்டுப் படிகளின் வழியாகக் கீழே இறங்கித் தெற்கு நோக்கித் தெருவழியாக நடந்தேன். பிறைச் சந்திரன் மேற்கே சாய்ந்துகொண் டிருந்ததால் எங்கும் இருளாகவே இருந்தது. என் வீட்டி னுள்ளேயே இருண்ட அறைக்குள் போகப் பயப்படும் யான் இப்போது இருட்டில் தனியே செல்வது அச்சத்தைத் தரவில்லை. சாகத் துணிந்த பின் சஞ்சல மென்ன இருக்கின்றது?

சிறிது தூரஞ் சென்றதும், என்னெதிரே கள் காவடி தூக்கிக்கொண்டு சிலர் வந்தனர். 'ஹே! ஹோ!! ஹே! ஹோ!!!' என்று அவர்கள் கூவிக்கொண்டு வருவதைக் கேட்டு யான் சிறிது அச்சமடைந்தேன். அவர்களுக்குப் பின்னர், காய் கறிகளையும், கீரை வகைகளையும் கூடைகளில் எடுத்துக் கொண்டு பெண்களும் ஆண்களுமாக ஒரு கூட்டம் வந்தது. அந்நேரத்தில் அவர்கள் ஒருவரோ டொருவர் பெருங் கூச்சலிட்டுப் பேசிக்கொண்டு வந்தனர். அவர்கள் யான் தனியாகச் செல்வதைக் கண்டு சந்தேக முற்றுத் திரும்பித் திரும்பிப் பார்த்துச் சென்றனர். ஒரு இளம் பெண் பின்னிரவில் தனியாகச் செல்வதைப் பார்ப்பவர்கள் வியப்பும் சந்தேகமுங் கொள்ளாதிருக்க முடியுமா? அவர்கள் எங்கே என்னை மடக்கி ஏதேனுங் கேட்கிறார்களோ என்று எனக்கு மாத்திரம் உள்ளுக்குள் பயம்தான். நான் அவர்களை யெல்லாங் கடந்து வெகுதூரஞ் சென்று,

கிழக்கே செல்லும் பாதை வழியாகத் திரும்பினேன். அப் பாதையின் ஒரு பக்கம் சுடுகாடு இருந்தது. மற்றொரு பக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் குடிசைகள் இருந்தன. சுடுகாட்டில் பிணங்கள் பற்றி யெரிவதால் உண்டாகும் நாற்றம், என் மூக்கைத் துளைத்தது. பன்றி களின் உறுமல் என்னை வாய்விட்டு அலறச் செய்தது. பகலில்கூட அவ்வழி சென்றறியாத யான், அந்நேரத்தில் தனியாகச் செல்வது பேரச்சத்தை யுண்டாக்கிய தெனி னும், நான் முடிக்க எண்ணிய எண்ணத்தை விரைவில் நிறைவேற்றத் தைரியமாக மேலே நடந்தேன். நடுவே ஒரு கழி குறுக்கிட்டது. நான் வாராவதியின் மீது நடந்து போனேன். வாராவதியைக் கடந்ததும், எனக்கு வலது பக்கத்தில் பெரிய கட்டிடங்களும், இடது பக்கத்தில் பள்ளர்கள் பயிரிட்டிருந்த புன்செய் பயிர்களும் காட்சி தந்தன. ஒருபக்கம் கட்டிடங்களின் வெண்மையும், மற் றொரு பக்கம் பயிர்களின் பசுமையும், எதிரே கடலின் நீலமும் அல்லலுற்ற என் மனத்தைக் கவர்ந்து ஆறுத லளித்தன. மேற்படி கட்டிடங்கள் மகளிர் வாசிக்கும் கலாசாலை என்பது எனக்குத் தெரியும். அக் கலாசாலைக் கட்டிடங்களைப் பார்த்த நான், 'இக் கலாசாலையில் இது வரை படித்தவர்களும், இப்போது படிப்பவர்களும், இனி இதில் சேர்ந்து படிக்கப் போகிறவர்களும் என்ன வாரிக் கொள்ளப் போகின்றனர்? என்ன பயன் கருதி இம் மங்கையர் உயர்தரக் கல்வி பயில்கின்றனர்? ஆயிரத்தில் ஒருவர் கூட அப் படிப்புக்குரிய பயனை யடைய முடி யாதே! ஏதோ இந்தியப் பெண்களாகிய நாங்களும் பிற நாட்டு மகளிரைப்போல் உயர்தரக் கல்வி படித்திருக்கி றோம்' என்று திருப்திகொண் டிருக்கலாமே யொழிய, வேறென்ன சாதித்து விட முடியும்? நான் இவ்வுலகில்

பெண்ணாய்ப் பிறந்து என்ன பயனை யடைந்தேனோ, அது போன்றுதான் இவர்களும் பயனடையப் போகிறார்கள்' என்று பெருமூச்சோடு கூறிக்கொண்டே சென்றேன்.

பதினைந்தாவது அதிகாரம்

"அலைகடல் அரசியே! அபயம்!!"

இவ்வாறு யாவற்றையுங் கடந்து கடற்கரையை அடைந்தேன். கிழக்கே வானம் இன்னும் வெளுக்க வில்லை. கடல் அலைகளை மும்முரமாக ஆரவாரத்தோடு எறிந்து கொண் டிருந்தது. கருங்கடல் அலைகளை வீசி வெண்ணுரைகளைக் கரையில் எறிந்து செல்வது, நிராதர வான எனக்கு அடைக்கலங் கொடுக்கத் தன் கைகளை நீட்டி அழைப்பது போலத் தோன்றியது. கடலில் ஒரு பக்கத்தில் கட்டு மரங்களும், மற்றொரு பக்கத்தில் படகு களும் கரை நோக்கி வந்துகொண்டிருந்தன. அவைகளி லிருந்த செம்படவர்களின் கூக்குரல் என் காதுக்கு எட்டி யது. எனவே, அவை இல்லாத இடத்தை நாடி கரையோர மாகவே சென்றேன். மக்கள் நடமாட்டமே இல்லாத அவ்விடத்தை யடைந்ததும், நான் என் கூந்தலை யவிழ்த்து விட்டேன். என் ஆடையை வரிந்து கட்டினேன். பின் னர் நான், "அலைகடல் அரசியே! அபயம்! அபயம்!!" என்று கூறியவாறு, நீரில் இறங்கினேன். ஆனால், கடல் அபலையாகிய என் வேண்டுகோளுக்கு இரங்கி அடைக் கலம் அளிப்பதாகத் தோன்றவில்லை. அது எனக்கு வழி விட்டுப் பின்னுக்குச் செல்வதுபோல் காணப்பட்டது. யான் போகப் போக, அலைகளும் பின்னுக்கு ஓடிக்

கொண்டே யிருந்தன. 'சாகத் துணிந்தவருக்கு சமுத்திரம் முழங்கால் அளவு' என்ற பழமொழி என் விஷயத்தில் அச்சமயம் உண்மை யாயிற்று. 'உற்றார், உறவினர், காதலர், எல்லாரும் வெறுத்துத் தள்ளிய என்னை, குறை நேர்ந்து வரும் எல்லாருக்கும் தஞ்சமளிக்கும் கருணைமிக்க இக் கடலும் வெறுத்துத் தள்ளுகிறது போலும்' என்று என்னை ஏங்கினேன். அப்போது எனக்கு எனது இறந்த கால வாழ்க்கையின் நிகழ்ச்சிக ளெல்லாம் நினைவுக்கு வந்தன.

"இவ்வுலகில் யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்? துன்பத்தை யனுபவிக்கவோ? இன்ப துன்பம் இன்னதெனப் பகுத்தறியக் கூடாத பருவத்தில், நான் என் பெற்றோரால் அருமையாக வளர்க்கப்பட்டேன். ஆனால், உற்ற வயதடைந்து இன்ப உணர்ச்சி முகிழ்க்க ஆரம்பித்ததிலிருந்தே, அவ் வின்பத் தேனைப் பருகுவதற்குப் பதிலாக துன்பமாகிய நஞ்சையே குடித்துக் குற்றுயிராக வருந்தி வந்திருக்கிறேன். முதலில் என் அம்மான் மகன் விரித்த வஞ்சக வலையில் சிக்குண்டேன். பின்னர், என் தந்தையால் வரிக்கப்பட்ட கணவனை மணந்து மூன்றாம் நாளே தாலி யறுத்து, விதவை யென்னும் 'கௌரவ'ப் பட்டத்தைப் பெற்றேன். அப்போதிருந்து என்னை அறுதலி, முண்டை யென்று மக்கள் என் முகத்தில் விழிக்கவும், என் முன் வரவும் அஞ்சி அபசகுன மெனை ஒதுக்கி வந்தனர். என்னை விவாகஞ் செய்து செல்வதாக வாக்குறுதி யளித்திருந்த என் அம்மான் மகன் அவ்வாறு செய்ய முன் வராது வாளாவிருந்ததோடு, யானே பல தடவை செய்தி சொல்லி யனுப்பியும் பதில் சொல்லி யனுப்பாது ஏமாற்றிக் கடைசியாக வெளியூர் சென்றான். யான் செய்த தீவினையே ஓர்

உருவெடுத்து என்னை நலிய வந்தது போன்று என் அண்ணி எனக்கு எமனாக வந்து வாய்த்து அளவிலாக் கொடுமைகளைச் செய்து வந்தாள். இந்நிலையில் என் அன்புள்ள தாய் என்னைத் துயரத்தி லாழ்த்தி மரண மடைந்தாள். என் பங்காளிச் சகோதர னொருவனை நான் கைப்பிடித் திழுத்ததாகப் பழிக் காளானேன். கலாசாலை மாணவனொருவன் என்னிடம் தகாத வார்த்தை பேசி என்னைப் பலாத்காரமாகக் கைப்பற்ற வந்து என் அண்ணியால் துரத்தி யடிக்கப்பட்டான். உறவினரில் ஒரு சிறுவன் என்னிடம் அடிக்கடி வந்து விஷமச் செயல்களைச் செய்ய ஆரம்பிக்கவே அவனை விரட்டி யடித்தேன். பின்னர் என் தந்தையிடம் பாடங் கேட்க வரும் வாலிபர்களிட மெல்லாம், நான் சரச சல்லாபம் செய்து வருவதாகப் பழி தூற்றப்பட்டேன். பின்னர், யானே அருங்குண மணியாகிய ஆன்மநாத ரென்னும் வாலிபர் மீது காதல் கொண்டேன். அவர் அன்பை அருமையாகப் பெற்று அவரோடு சிறிது காலம் அளவளாவி வருகையில், என் அண்ணியால் அலர் தூற்றப்பட்டு அவரோடு கூடி யின்புறும் வாய்ப்பை யிழந்தேன். ஊர்ப் பெண்களால் பலவாறு பழிக்கப்பட்டேன். உற்றாரால் வெறுக்கப்பட்டுப் புறக்கணிக்கப் பட்டேன். ஐயகோ! கடைசியாக, என் மனச் சபலத்தால், என் காதலர் தந்த உறுதி மொழியையும் மறந்து கண்டவர்களை யெல்லாம் பார்த்துக் கருத்தழிந்து கெட்டொழிந்தேன். அதனால், என் நன்மையையே கருதி வந்த என் காதலரது அன்பையும் இழந்தேன்.

"இப் பரந்த உலகில் எத்தனையோ பெண்கள் தோன்றினார்கள்! எத்தனையோ மாதர்கள் இருக்கிறார்கள்! அவர்களெல்லாம் யான் எனது வாழ்க்கையில் அனுபவித்த துன்பங்

களைப்போல் அனுபவித்திருப்பரோ? யான் பட்ட துயரத்தைப்போல் ஒருவரும் பட்டிருக்க மாட்டார்கள். நான் தான் இவ்விதத் துன்பத்தை யடைந்து வந்து இறக்க நேர்ந்தாலும், உலகிலுள்ள மற்ற மகளிராயினும் இன்பக் கடலில் திளைத்திருக்கட்டும். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அருட்பெருங் கடலான ஆண்டவனே! நான் இக் கடலில் விழுந்து இறக்குந் தருவாயில் உன்னை நோக்கி வேண்டும் விண்ணப்பம் இது ஒன்றுதான்.—இப்போது இந் நிலவுலகில் வாழ்ந்து வரும் மகளிரும், இனி இவ் வுலகில் உதிக்கப் போகும் பெண்களும் என்னைப்போன்று கைம்மை நிலையை யடைந்து, உற்றார் உறவினராலும், மற்றவர்களாலும் துன்புறா திருக்கச் செய்யவேண்டு மென்பதே யாகும். என் பகைவரும்—என்னை இடையறாது கொடுமைப்படுத்தி வந்த என் அண்ணி முதலியோருங் கூட இவ்வாறு விதவை நிலைமையை யடைந்து வருந்தக் கூடாது. விதவைப் பெண்களின் பூண்டே இனி இவ்வுலகில் முளைக்காதவாறு செய்தல் வேண்டும். இப்போதிருக்கும் என்னனைய விதவைப் பெண்கள் தங்கள் பெற்றோர்களின் உதவியால் மறுமணஞ் செய்துகொண்டு கணவன்மாரோடு உலக இன்பங்களையெல்லாம் அனுபவிக்குமாறு நீ அருள் புரிவாயாக! நான் இவ்வுலகில் பெண்ணாய்ப் பிறந்து அனுபவித்ததெல்லாம் அமையும். இப்போது உன் திருவடிகளே தஞ்சமென்று எண்ணி இக்கடலில் புகுகின்றேன். மறு பிறவியிலாயினும் என் காதலரை—ஆன்மநாதரை—என் இன்னுயிர்த் தலைவரை—அடைந்து இன்ப வாழ்க்கையை இளமையிலேயே நடத்த கருணை பாலிப்பாயாக!—நாதா! நான் சென்று வருகிறேன்" என்று கதறி யழுது நீலக் கடலை நோக்கி நடந்தேன்.

இதற்குள் கிழக்கே இளஞாயிறு தகதக வென தன் கிரணங்களைப் பரப்பி யுதித்துக் கடல் நடுவே ஒரு பொன் பாதையை உண்டாக்கினான். அவ் வொளி என் கால்களுக்கு நேராகப் பிரகாசித்தது. சூரிய னொளியில் நான் மூழ்கியவாறே அப் பாதையில் நடந்தேன். அச் சமயத்தில் "காமு, காமு" என்று யாரோ கூப்பிடுவது போல் என் காதில் ஒலித்தது. நான் அழுகையோடு, "இதோ வருகிறேன்" என்று கூறி மேலும் அப் பொன் பாதையின் மேல் அடியெடுத்து வைத்து நடந்தேன். சிறிது நேரத்திற் கெல்லாம் தண்ணீர் என்னைச் சூழ்ந்து கொண்டது. ஆனால் நான் அதை யுணரவில்லை. என் கண்கள் அவ் வழகிய பாதையை யன்றி வேறொன்றையுங் காணவில்லை. முடிவில் நான் அமைதியோடும், மகிழ்ச்சியோடுங் காணப்பட்டேன். முதலில் என்னைப் புறக்கணித்து ஓடி யொளிந்த கடல் அரசி இப்பொழுது தன் அலைக்கரங்களால் என்னை யன்போடு தழுவிக்கொண்டாள். அச்சமயம் நான் அருக்கனில் சோதி யமைத்து உள்ளிருந்து ஒளிரும் இறைவனை நினைந்து மனங் கசிந்துருகி,

"இன்றுஎனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற்று இன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன்று இல்லை
யார்உனை அறியகிற் பாரே"

என்று பாடியவாறே கடல் அலைகள் கொண்டு செல்லும் போக்கில் போக லானேன்.

அவ்வாறு சிறு சிறு அலைகளினிடையே தள்ளாடித் தள்ளாடி வெகுதூரம் கடலில் சென்று மூழ்கிய நான், ஒரு பெரிய அலையால் தாக்கப்பட்டுக் கரையில் கொண்டு வந்து விடப்பட்டேன். இங்ஙனம் நான் அலைகளால் மோதிக் கரையில் தள்ளப்பட்டும், மீண்டும் மீண்டும் கடலில் இழுத்துச் செல்லப்பட்டும் சிறிது நேரம் வரை இங்கும் அங்குமாக அலைக்கப்பட்டேன். இதனால் என் கை கால்கள் எல்லாம் ஓய்ச்சலுற்றன. மூக்கிலும் வாயிலும் நீர் ஏறிவிட்டதால் மூச்சுத் திணறித் திக்குமுக்காடினேன். கடைசியாக, ஒரு பெரிய அலை வந்து, வெகு வேகமாக என்னை இழுத்துச் சென்று ஆழத்தில் புகுத்தியது. என் உணர்வு அழிந்து கடலில் அமிழப்போகுஞ் சமயத்தில், என் தேகத்தில் ஏதோ ஒன்று பட்டது போன்ற ஸ்பரிச உணர்ச்சியால் சிறிது மேலெழும்பினேன். ஆனால், அடுத்த கணத்தில், கலக்க நிலையிலிருந்த என் உணர்வை அடியோடு இழந்தேன்.

* * * * * *

அதற்குப் பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. அலைகடலிலிருந்து மீட்டவர்கள் நீங்கள்; ஆதலால், அண்ணா, மற்ற விஷயங்களையெல்லாம் நீங்களே அறிவீர்கள். இப்பொழுது சொல்லுங்கள்; நான் வாழ்க்கையில் வெறுப்புற்றுக் கடலில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தது சரியா? தவறா? உங்களுடைய உயிரையும் திரணமாக மதித்து மிகவும் கஷ்டமெடுத்துக் கொண்டு என்னைக் காப்பாற்றியதில் ஏதாயினும் பலன் உண்டா? புண்ணியமுண்டா? என்று.—என் வாழ்க்கை வரலாறு அனைத்தையும் ஒன்றும் ஒளியாமல் உங்களுக்குச் சொல்லிவிட்டேன். பரமகருணா சமுத்திரமாகிய ஆண்டவன் முன்னர் பாவமன்னிப்பு கோருவது போல், நான்

சித்த சபலத்தால் புரிந்த குற்றங்களை யெல்லாம் உங்கள் பால் கூறிவிட்டேன் என்றே நினைக்கிறேன். ஆதலின், நீங்கள் இனி தாராளமாக உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லலாம். அம்மா, உங்கள் கருத்தையும் தான் கேட்கிறேன்" என்று தன் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லி வந்த காமாட்சி கடைசியாகத் தான் 'இனி இருப்பதா? இறப்பதா?' என்ற ஜீவாதாரப் பிரச்சினை பற்றிக் கேள்வி கேட்டு நிறுத்தினாள்.

பதினைந்தாவது அதிகாரம்

அண்ணல் அளித்த அடைக்கலம்

எனக்குச் சில விநாடிகள் வரை இதற்கு என்ன பதில் சொல்வதென்றே தோன்றவில்லை. அன்னையாரும் என் முகத்தைப் பார்த்தார்கள். அக்குறிப்பு காமாட்சியின் கேள்விக்கு இன்ன விதமான பதில்தான் அளிக்க வேண்டுமென்று சூசகமாகக் குறிப்பிப்பது போல் இருந்தது.

நான் யோசனையோடு மெள்ளப் பேசத் தொடங்கினேன்: "சகோதரி, நீ இவ்வுலக வாழ்க்கையின்மீது வெறுப்பு கொண்டதற்குத் தகுந்த காரண மிருக்கிறது. உன் போன்று உலக இன்பத்தை ஒரு சிறிதும் துய்க்காது துன்பத்தையே அனுபவிக்கும் துர்ப்பாக்கிய சாலிகளுக்கு வாழ்க்கையில் விரக்தி யேற்படுவது இயற்கையே. ஆனால், அதற்காக, நீ ஆண்டவன் அளித்த இவ்வருமையான உடம்பை அழிக்கத் துணிந்தது சரியான தென்று நான் சொல்ல மாட்டேன். எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும், அவற்றை யெல்லாம் பொறுமையாகச் சகித்துக்

கொண்டு வருவதுதான் பெண்களுக்கு அழகு. பெண்கள் பொறுமைக்குப் புகலிடம் என்கிறார்களே! அது உனக்கு மட்டும் விலக்கா யிருக்க முடியுமா! நீ உன் தேகத்தைத் துறந்து விட்டால், நீ அனுபவிக்க வேண்டு மென்று இருக்கும் கஷ்டங்களும் துன்பங்களும் போய்விடுமா? அவ்விதம் நினைப்பது அறியாமை. நாம் எத்தனை பிறவி யெடுத்தாலும் வினைத் துன்பம் தொடர்ந்து பற்றும் என்று சமய சாத்திரங்கள் சொல்லுகின்றன..................."

காமாட்சி குறுக்கிட்டு, "துன்பம் தொடர்ந்து வரட்டும். ஆனால், நான் பெண்ணாய்ப் பிறந்த—அதிலும் தமிழ் நாட்டில் பெண்ணாய்ப் பிறந்த ஒரு காரணத்துக்காக அனுபவித்து வருகிறேனே கைம்மைத் துன்பம்; அது நான் இவ்வுடலை விட்ட பின்னர் தொடர்ந்து வராதல்லவா! அத் துணிவினால் தான், தற்கொலை மகாபாவம் என்று அறிந்தும் மேற்கொண்டேன். இவ்வைதவ்யக் கொடுமையைத் தவிர வேறு எந்தவிதமான பயங்கரக் கொடுமைகளையும் அனுபவிக்க நான் தயாரா யிருக்கிறேன்..................." என்று மனக் கோதிப்போடு கூறினாள்.

நான் மீண்டும் பேசத் தொடங்கி, "அம்மா, நீ அனுபவித்த பெருந் துன்பத்தால் அவ்விதம் நினைப்பது நியாயம் தான்.—ஆனால், உன் வாழ்க்கைச் சோதனைகளி னிடையிலும் நேர்ந்திருக்கும் ஒரு அபூர்வ சம்பவம் இல்லையானல், நீ உன் வாழ்வை முடித்துக்கொள்ள முயன்ற செயலை நான் ஒரு விதத்தில் சரியென ஒப்புக்கொள்வேன். கடவுள் துன்ப இருளில் தோய்ந்திருந்த உனக்கு ஒரு சோதியைக் காட்டினார். ஆனால், நீ அப் பேரொளியைக் கொண்டு இன்பத்தை யனுபவிக்கத் தவறி விட்டாய். சிறிது பொறுமை காட்டத் தவறிப்போய் மனச் சபலத்துக்கு இடங் கொடுத்து விட்

டாய். ஆத்மநாதனை எனக்குத் தெரியும். அவன் என் ஆப்த நண்பன். நற்குண நாயகன். அம்மாவைக் கேட்டுப் பார். அவனைப்போல் ஒரு பிள்ளை வாய்ப்பது அருமை என்று அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அவர்களுக்கு என்னை விட அவன் மீதுதான் அன்பு அதிகம்.—அவன் உனக்கு வாழ்க்கைத் துணைவனாக வர ஒப்புக்கொண்டான் என்பதைக் கேட்டபோது, எனக்கு உண்டான ஆச்சரியம் சொல்லி முடியாது. ஏனென்றால், அவன் விஷயம் அப்படிப்பட்டது. அதை நீ அறிந்தால், அவன் உன் வேண்டுகோளுக்கு இணங்கியதைக் கண்டு வியப்புறுவாய். அவன் உன் பொருட்டு இவ்வளவுதூரம் வாழ்க்கையைத் தியாகஞ் செய்ய முற்பட்டது நீ செய்த புண்ணியம் தான். இவ்விதம் எதிர்பாராது ஏற்பட்ட அதிர்ஷ்டத்தை நீ அவசர புத்தியினால்—சபல சித்தத்தினால் போக்கிக் கொண்டதை நினைத்தால் தான் எனக்கு உன்மீது பரிதாப முண்டாகிறது. நீ இப்படி சித்தத்தைச் சிதற விட்டிருக்கலாமா?............" என்று இரக்கத்தோடு கேட்டேன்.

இச் சமயத்தில் என் அன்னையார் இடை மறித்து, "கண்ணா, மீண்டும் இப்படிப் பேசத் தொடங்கி விட்டாயே! காமாட்சி போன்ற பெண்களின் மனநிலையை நீ எப்படி யறிவாய்? நீ காமாட்சியா யிருந்திருந்தால், என்ன செய்திருப்பாய், தெரியுமா? காமாட்சியை விட மோசமாய்க் கூடப் போயிருப்பாய் என்று நான் சொல்வேன். இயற்கையின் வேகத்தை யாராலும் தடுப்பது அரிது. இந்தப் பொல்லாத இயற்கை எவரையும் லேசில் விடாது. காமாட்சி காட்டிய அவசரம், கொண்ட சித்த சபலம், கண்டவர் பால் உள்ளத்தைப் பறி கொடுத்தது அவள் குற்றமன்று; அது பெண்மையின் குற்றம்; பருவ காலத்

தின் அவசரத் தீர்ப்பு..............." என்று கூறிக்கொண்டு வந்தார்.

காமாட்சி குறுக்கிட்டு, "அம்மா, நீங்கள் பெண்மைக்குப் பரிந்து பேசி நான் செய்த குற்றத்தைப் பெரிதாகக் கருதாது பெருந் தன்மையோடு மன்னிப்பு அளிக்கப் பார்க்கிறீர்கள். இவ்விதம் மழுப்புவதில் பயனில்லை. நான் செய்தது குற்றமே; அதுவும் மன்னிக்க முடியாத குற்ற மாகும்.—நான் மகா பாவி. என் மனத்தில் பாவ எண்ணங்களுக்கும் விபரீத சந்தேகங்களுக்கும் இடங் கொடுத்துக் கெட்டொழிந்தேன்.—அன்று குறிப்பிட்டது போல, நான் மனத்தை அடக்கி யாளவில்லை யென்று நீங்கள் கூட எண்ணலாம். என் சித்தத்தைக் கட்டுப்படுத்த முடியாததற்காக, என்னையே நான் எத்தனை முறை நிந்தித்துக் கொண்டிருக்கிறேன்; தெரியுமா ? நான் என் உள்ளத்தோடு நடத்திய போராட்டத்தைக் கடவுள் ஒருவன்தான் அறிவான். என்ன செய்தும் என் சித்தம் எனக்கு வசமாக மாட்டாமல் போய்விட்டது.—நான் கண்டவர்களையெல்லாம் நோக்கிக் கருத்தழிந்தது அல்லது நேசித்தது உண்மையா ? ஒரு சமயம் என்னென்னவோ எண்ணி ஏங்கி உன்மத்தங் கொண்டவள்போல அலைந்தேன். எல்லாம் இப்பொழுது புரிகிறது. அது வெறும் மோகமே! என் கண் இழைத்த மாயையே! என் சித்தஞ் செய்த சதியே! மோகாந்தகாரம் வந்து என் அறிவை மறைத்து விட்டது. இதன் பயனாகவே, என் வாழ்க்கையைத் துயர இருள் கவிந்து கொண்டது..........." என்று அளவிலாத். துயரத்தோடு கூறிக்கொண்டு வந்தாள்.

இச் சமயத்தில், "இந்தமாதிரி மோகம், புத்திப்பிரமை, சகோதரி, எல்லோருக்கும் ஒரு சமயம் ஏற்படவே செய்

கிறது. இது இயற்கையே. சிலர் உன்னைப்போல் இம் மோகத்துக்கு ஆளாகிறார்கள். சிலர் இதை மீறி விடுகிறார்கள்; அதாவது இதற்கு இலக்காகாது தப்பித்து விடுகிறார்கள். நடந்தது நடந்து விட்டது. சென்றதை நினைத்து வருந்துவதை விட, இனி, அவ்வித மனச் சலனத்துக்கு இடமளிப்பதில்லை என்று உறுதிசெய்து கொண்டால் போதும். ...." என்று சொல்லிக்கொண்டே உள் நுழைந்தாள் ரஞ்சனி.

இவளது வருகையை நான் எதிர்பார்த்திருந்தேன்; ஆயினும், அத்தருணம் வந்தது எனக்கு வியப்பையே அளித்தது. "வா அம்மா, ரஞ்சனி; நீ நல்ல சந்தர்ப்பத்துக்குத்தான் வந்தாய்" என்று நான் கூறி அவளை வரவேற்க வாயையெடுத்தேன். ஆனால், காமாட்சி இவ்விதஞ் சொல்லியது யார் என்பதையும் கவனியாது, "கண்கெட்ட பிற்பாடு சூரிய நமஸ்காரமா? முறிந்து போன பால் எதற்காயினும் உதவுமா? அது போலத்தான் என் கதியும். இனி, மனஉறுதி கொண்டுதான் என்ன? கொள்ளாது போய்த்தான் என்ன?" என்று கூறிக்கொண்டே நிமிர்ந்தவள் வேற்று மனிதர் வந்திருப்பதைக் கண்டு வாயடைத்துப் போய் வெட்கித் தலைகுனிந்தாள்.

இதைக் கண்ட நான், "காமு அம்மா, உன்னைப்போல் ஒரு பெண்மணியைக் கண்டு உனக்கு ஏன் இவ்வளவு நாணம்? இவர் வேறு யாருமில்லை. நமக்கு வேண்டியவர் தான். நான் உன்னைக் கடலிலிருந்து கரையேற்றியபோது, இந்தச் சகோதரியும் இவரது சிநேகிதைகளும் சேர்ந்து தான், உனக்குச் செய்ய வேண்டிய முதல் சிகிச்சையைச் செய்து, ஒரு ரிக்ஷாவை வரவழைத்து அதில் ஏற்றி யனுப்பினார்கள். நீ இப்போது எப்படி யிருக்கிறாய் என்று

பார்க்கவே இவர் வந்திருக்கிருர். இவர் பெயர் ரஞ்சனி என்பது. இவர் மேரி அரசி மகளிர் கல்லூரியில் வாசிக்கிருர்" என்று ரஞ்சனியைக் காமாட்சிக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன்.

திடுமென வந்த இந் நங்கை யார் என்று திகைப்போடு இதுவரை பார்த்துக் கொண்டிருந்த அன்னையார் நான் கூறிய தகவலிலிருந்து இன்னர் என்று அறிந்து கொண்டதும், "வா அம்மா, இப்படி உட்கார் அம்மா" என்று உபசரிக்கலானர். தன் விஷயம் மற்றுஞ் சிலருக்கும் அதுவும் தன்னை விட வயதில் இளைய பெண்களுக்குத் தெரிந்து விட்டது என்று அறிந்ததும், காமாட்சிக்கு மிகவும் சங்கோஜம் ஏற்பட்டு விட்டது போலும்! அவள் தலை குனிந்தவாறு ரஞ்சனியைக் கடைக்கண்ணுல் பார்த்தாளே யொழிய, வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை.

காமாட்சியையே காருண்ய உணர்ச்சியோடு கவனித்துக் கொண்டிருந்த ரஞ்சனி அவளது மௌனத்தைக் கலைத்து ஆறுதல் கூறத் தொடங்கி, "ஏனம்மா, தலைகுனிந்து பேசாமலிருக்கிருய்? என்னை உன் உடன் பிறந்தாளாக எண்ணிக்கொள். உனது துயர மிகுந்த வரலாற்றை நான் முற்றுங் கேட்டேன். இதிலிருந்து உன்னைக் கடற்கரையில் உணர்வற்ற நிலையில் இருக்கக் கண்டபோது ஏற்பட்ட அன்பைக் காட்டிலும் அதிகமாயிற்றே யொழிய, குறையவில்லை.—'நான் இனி வாழ்ந்து பயன் என்ன? என்னை ஏன் கடலிலிருந்து காப்பாற்றினீர்கள்?' என்றெல்லாம் ஆற்ருமையோடு கேட்டா யல்லவா! நீ அவ்விதம் மன அயர்ச்சி கொள்ள வேண்டாம். உற்சாகமா யிரு. உனக்கு விமோசனம் ஏற்பட்டு விட்டது" என்று கூறினுள்.

இதுவரை அடங்கியிருந்த காமாட்சி துள்ளிக் குதித்து, "எனக்கு விமோசனமா? பாவியாகிய எனக்கா? படு பாதாளத்தில் தலை குப்புற விழுந்து விட்ட எனக்கும் இனி விமோசனம் ஏற்படும் என்று சொல்கிறாய்? அம்மா! அது இந்தப் பிறவியில் இல்லை" என்று ஆவேசத்தோடு கூறி யயர்ந்தாள்.

ரஞ்சனி சாவதானமாகவே, "என் சகோதரி, அப் படி சொல்கிறாய்? உன் வாழ்க்கையில் விடிவே ஏற்படா தென்று நீ தீர்மானித்து விட்டாய்?........" என்று கேட் டாள்.

"அதில் சந்தேகமென்ன? என் துயர வாழ்வுக்கு இனி விமோசனம் ஏற்படும் என்று நம்பிக்கை கொள்வதற்கு என்ன ஏது இருக்கிறது? ஒரு சமயம் நான் இவ்வித நம் பிக்கை கொண்ட துண்டு. புயலில் அகப்பட்டு அலமந்த பூங்கொடிக்குப் பற்றுக்கோடு கிடைத்ததுபோல், வாழ்க் கைப்புயலில் சிக்கி விதிர்ப்புற்றிருந்த எனக்குக் கணகண் ணாக ஒருவர் எதிர்பாராது வாய்த்தார். என்னை வாழ்விக்க வந்த பெம்மான் என்று நான் அவரை மதித்து பெருமிதங் கொண் டிருந்தேன். என் துரதிர்ஷ்டம் அவரது தோழ மையை இழக்கச் செய்தது. எனது சித்த சபலமே—நம் பிக்கைத் துரோகமான செயலே அதற்குக் காரணமாகும். துன்ப வாழ்வினின்றும் என்னை விடுவித்து எனக்கு இன்ப வாழ்வளிப்பார் என்று நம்பிய உத்தமரின் உறவு என் செய லாலேயே அற்றுப்போன பிறகு, எனக்கு இனி ஒரு போதும் விமோசன மேற்படாது எனத் திட்டமாகத் தெரிந்த பிறகு, நான் எதற்காக உயிர் தரிக்க வேண்டும்? நான் இருப்பது பூமிக்குப் பாரத்தைத் தவிர வேறு பலன் என்ன? அதனால்தான் நான் மரணத்தை விரும்பி யேற்

றேன். எமன் ஒருவன்தான் என் துயரவாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கக்கூடியவன். இனி எனக்கு நல் வாழ்வு ஏற் படும் என்று நம்பிக்கை வைப்பது பைத்தியக்காரத்தனம்.... ...." என்று காமாட்சி உணர்ச்சியோடு பேசிக் கொண்டே போனுள்.

ரஞ்சனி அவளை மேலே பேச விடவில்லை. "எவ ருடைய உறவு அற்றுப்போய் விட்டது என்று நீ கருதி யிருக்கிருயோ, அவர் உன்னை வந்து ஏற்றுக் கொள்ளுகிருர் என்று வைத்துக்கொள். அப்போது கூடவா நீ வாழ்வில் நம்பிக்கை கொள்ள மாட்டாய்?" என்று வினவினுள்.

காமாட்சி, "அவ்விதம் என்னைப் பொய்க் கனவு கண்டு பூரிக்கச் சொல்கிருயா, அம்மா! உன் பேச்சைக் கேட்டு நான் அவ்விதம் நினைத்தால், என்னை நானே ஏமாற்றிக் கொண்டவ ளாவேனே யொழிய வேறில்லை. நடக்கக் கூடாத காரியத்தைப் பற்றி, ஏன் அம்மா பேசுகிருய்? இம்மாதிரி தேறுதல் வார்த்தைகள் எல்லாம் இனி என் மனத்துயரை மாற்ருது, அம்மா!" என்று சலிப்போடு கூறினுள்.

ரஞ்சனி, "அப்படி சொல்லாதே, சகோதரி! நான் உன்னைத் தேற்றுவதற்கு வாய் அனுதாபமாக ஒன்றுஞ் சொல்ல வில்லை. உண்மையாக நடக்கப் போவதையே உனக்கு உரைக்கிறேன்.—உன் காதலரை எனக்கு நன்கு தெரியும். அவர் சற்குண சம்பன்னர். கருணை உள்ளம் படைத்தவர். பிறர் நலத்துக்காகத் தன்னலத்தைத் தியாகஞ் செய்பவர். அவர் உனக்குக் காதலராக வாய்த்தது, அண்ணு, சற்று முன் கூறியதுபோல், நீ முற்பிறப்பில் செய்த புண் ணியம்தான். நீ அவர் விஷயத்தில் தவருக நடந்தாலும், அவர் உன்னைக் கைவிடமாட்டார்...." என்று கூறினுள்.

"ஆமாம்; அம்மா! ரஞ்சனி சொல்வது அனைத்தும் உண்மை. ஆத்மநாதன் அருங்குணச் செல்வன். நீ அறியாது செய்த பிழைகளை நினைந்து இவ்வளவுதூரம் வருந்துகிறாய்; உன் உயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிந்து விட்டாய் என்று அறிந்தால், அவன் பரிந்து ஓடிவருவான். பிறர் குற்றங்களை மன்னிக்கும் சுபாவமுள்ள அவன் அபலையாகிய உனக்குக் கட்டாயம் மன்னிப்பு அளிப்பான்" என்று நான் கூறினேன். அன்னையாரும் நான் சொல்வதை ஆமோதிப்பது போல் தலையை யசைத்தார்கள்.

நான் ரஞ்சனியை நோக்கி, "அம்மா, உனக்கு ஆத்மநாதனைத் தெரியுமா? என்ன! எப்படித் தெரியும்?" என்று கேட்டேன்.

ரஞ்சனி புன்முறுவலோடு, "அவர் எங்கள் ஆசிரியர்; கல்லூரித் தமிழ்ப் பாடத்தை நானும் மற்றுஞ் சில மாணவிகளும் அவரிடம் பிரத்தியேகமாகப் பாடம் கேட்டு வருகிறோம். அது மட்டுமல்ல; எங்கள் கல்லூரித்தலைவி எங்களுக்கு வைக்கப்பட் டிருக்கும் பாட விஷயங்களை அவரைக் கொண்டு அடிக்கடி சொற்பொழிவு செய்வது வாயிலாக விளக்கச் சொல்வார். அவ்வகையில் எங்கள் கல்லூரியிலுள்ள ஆசிரியைகள் மாணவிகள் அனைவருமே அவரை நன்கு அறிவர். அவர்பால் எல்லாருக்குமே நன்மதிப்புண்டு" என்று கூறினாள்.

"ஓ! அப்படியா!" என்றேன் நான்.

இதனிடையே ஆழ்ந்த சிந்தனையி லிருந்த காமாட்சி, "எனக்கும் மன்னிப் புண்டா? நான் செய்துள்ள குற்றம் மன்னிப்பளிக்கக் கூடிய சாதாரண குற்றமா?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

"நீ என்ன குற்றஞ் செய்திருந்தாலும் பாவம் புரிந்திருந்தாலும், நீலக்கடலில் மூழ்கிய பின்னர் போய்விட்டதென்றே நான் சொல்வேன். கடல் நீர் உன் பாவத்தைக் கழுவிவிட்டது. கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி, கொள்ளிடம், கிருஷ்ணா, கோதாவரி முதலிய மகா புனித நதிகள் சங்கமமாகும் அக் கடல் நீர் சகல பாவங்களையும் போக்கும் சக்தி வாய்ந்தது என்பதில் சந்தேகம் என்ன? அப்பேர்ப்பட்ட கடல் நீர் உன் மனமாசைப் போக்காதிருக்க முடியுமா?—மேலும், நீ மறுபிறப்பு எடுத்திருக்கிறாய். நீ பழைய காமாட்சியல்ல; புத்துயிர் பெற்ற மகா பரிசுத்தையான காமாட்சி யாவாய். ஆதலால், பரம தயாளுவான எனது ஆசிரியர் உன்னைப் பரிந்து ஏற்றுக் கொள்வார் என்று நான் உறுதி கூறுகிறேன்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

காமாட்சி முகத்தில் தெளிவு ஏற்பட்டது, ஆயினும் அவள், "நீங்கள் எல்லாம் சொல்கிறீர்கள்? என்மீது உண்டான பரிவு காரணமாக, என் காதலர் என்னை ஏற்றுக் கொள்வார் என்று உறுதி கூறுகிறீர்கள்? ஆனால், அவர் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமே! அவர் என்னைப் பற்றி என்ன நினைக்கிறாரோ! அவர் எனக்கு மன்னிப்பு அளிப்பாரா? என்றே, நீங்கள் எல்லாம் இவ்வளவுதூரம் கூறிய பிறகும் நான் ஏக்கங் கொள்ளுகிறேன்" என்று சோர்வோடு சொன்னாள்.

"எல்லாம் வல்ல இறைவனே பாசத்தால் கட்டுண்ட உயிர்களுக்குப் பாவமன்னிப்பு அளிக்கும் போது, கேவலம் நான் உனக்குப் பாவமன்னிப்பு அளிப்பதா பெரிது?—காமு, நான் உனக்கு எப்போதோ மன்னிப்பு அளித்துவிட்டேனே!" என்று கூறிக்கொண்டே ஆத்மநாதன் இச்

சமயம் உள்ளே வந்தான். அவனது எதிர்பாரா வருகையைக் கண்டு நாங்கள்—ரஞ்சனி தவிர—அனைவரும் பேராச்சரியங் கொண்டோம். காமாட்சி தலை குனிந்தாள். அவளது உடம்பு குளிர்சுரத்தால் நடுங்குபவன் உடல்போல் நடுங்கியது.

“வா அப்பா, ஆத்மா! இன்று நீ ஆபீஸுக்குப் போகவில்லையா? காமு இங்கிருப்பது தெரிந்துதான் வந்தாயா? அல்லது............” என்று என் தாயார் கூறியவாறு ஆத்மநாதனை உவப்போடு வரவேற்றார். நான் அவனை அன்புடன் நோக்கினேன்.

“இல்லை யம்மா, நான் ஆபீஸுக்குப் போவதற்கு முன், கல்லூரிக்குச் சென்றுவர வேண்டிய வேலையொன்று இருந்தது. அதைக் கவனிக்கப் போனபோதுதான், ரஞ்சனி என்னைக் கண்டு விடியற்காலையில் கடற்கரையில் தான் கண்ட நிகழ்ச்சியைத் தெரிவித்தாள். கண்ணன் பெயரைத் தெரிவித்து அவன் காப்பாற்றிய பெண்ணின் தோற்றத்தைப்பற்றிக் கூறியதிலிருந்து, கடலில் விழுந்த பெண் ஒருவேளை காமாட்சியா யிருக்கலாமோ என்று என் மனம் என்ன காரணத்தாலோ எண்ணியது. ஆகவேதான், நான் உடனே உங்கள் வீட்டுக்கு விரைந்து வந்தேன். ரஞ்சனியும் தான் அப் பெண் எப்படியிருக்கிறாள் என்று பார்க்க வருவதாகச் சொன்னாள். ஆகவே, நாங்கள் இருவரும் ஒன்றாகவேவந்தோம்.நாங்கள் வீட்டினுள் நுழையுஞ் சமயத்தில் காமாட்சி தன் வரலாற்றைக் கூறிக்கொண் டிருப்பதையறிந்தோம். என்னைக் கண்டால் தான் கூறுவதை நிறுத்திவிடுவாள் என்று நான் வெளியிலேயே நின்று விட்டேன். ரஞ்சனியும் என்னுடனிருந்து எல்லாவற்றையுங் கேட்டாள். காமாட்சி என் பெயரைக் குறிப்பிட்டபோது அவள்

ஆச்சரியத்தோடு என்னை நோக்கினாள். எல்லாவற்றையும் கேட்ட பிறகே அவளுக்கு விஷயம் புரிந்தது. ஆனாலும் அவளுக்கு ஒரு விஷயத்தில் மட்டும் இன்னும் சந்தேகம் தான். கண்ணாலுக்கும் அச் சந்தேகம் மனத்தி லிருப்பது எனக்குத் தெரியும்" என்று கூறி நிறுத்தினான் அவன்.

நானும் ரஞ்சனியும் ஒருவரை யொருவர் குறிப்பாகப் பார்த்துக் கொண்டோம். அன்னையார், "அவ் விஷயத்தை நான் அறியலாமோ?" என்று கேட்டார்.

ஆத்மநாதன் முகத்தில் சங்கோஜம் நிலவ, சிறிது நேரம் பேசாம லிருந்தான்.

நான் பதட்டத்துடன், "ஆத்மநாதனின் சங்கதி உனக் கொன்றும் தெரியாதா, அம்மா! இவன் ஒரு பெண்ணைக் காதலித் திருந்தான். அவளும் இவனை உயிருக்குயிராக காதலித்து வந்தாள். தாங்கள் ஒருவர் மற்றொருவருக் காகவே இறைவனால் படைக்கப்பட் டிருப்பதாக இவர்க ளுடைய எண்ணம். இவ்வளவுதூரம் தீர்மானத்துக்கு வந்திருந்த இவர்கள் தங்கள் காதலைப் பெற்றோர்களுக்குத் தெரிவித்திருக்கலாம். ஆத்மநாதன் ஒரு வார்த்தை கேட் டிருந்தால், பெண்ணின் தாய் தந்தையர் மறுத்துக் கூறி யிருக்க மாட்டார்கள். செல்வப் பெருமிதம், சாதி வேற் றுமை முதலியவைகளைக் கூடக் கவனியாது, தங்கள் அரு மந்த செல்வியை ஆத்மநாதனுக்கே மணஞ் செய்து வைத் திருப்பார்கள். அவ்வளவுதூரம் இவன்மீது அவர்களுக்கு அன்பும் மதிப்பும் உண்டு. இவன் என்ன காரணத்தாலோ கேட்கத் துணிவில்லாது மீனமேஷம் பார்த்துக் கொண் டிருந்தான். அப் பெண்ணும் பெண்ணியற்கைக் கேற்ப விஷயத்தைத் தன் அன்னையிடமும் மூச்சு விடா திருந்தாள். இந் நிலையில், இவர்கள் சிறிதும் எதிர்பாராத விதமாக,

பெண்ணின் பெற்றோர் வேறொருவனுக்கு அவளை மணம் முடித்து விட்டார்கள். இக்காதல் ஏமாற்றத்தினால் அப் பெண் எப்படி மனம் புழுங்குகிறாளோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆனால், இவன் மட்டும் வெகு காலம்வரை உத்தியோகம், ஊண் உறக்கம் எதிலும் மனதைச் செலுத் தாமல் பைத்தியக்காரனைப் போல் திரிந்துகொண் டிருந் தான். இவன் நிலையை யறிந்து இவனுடைய காதலி இவனை நேரில் கண்டு தங்களை விதி சதி செய்து விட்டதாகவும், இருந்தாலும் இவன் வாழ்க்கையில் விரக்தி கொண்டு இவ் விதம் அலைவதை விட்டு, வேறு அழகிய படித்த பெண் ணொருத்தியை விவாகஞ் செய்து கொண்டு வாழ்க்கை நடத்துமாறும் வேண்டிக் கொண்டாள். ஆனால், இவன் ஒரே பிடிவாதமாக மனதாலும் இன்னொருத்தியை விரும்ப மாட்டேன் என்று கூறி விட்டான். அப்பேர்ப்பட்டவன் எப்படி காமாட்சியின் காதலை ஏற்றுக் கொண்டான் என்று தான் எனக்கு விளங்க வில்லை....................." என்று கூறிக் கொண்டே வந்தேன்.

ஆத்மநாதன் மௌனத்தை விடுத்துப் பேசத்தொடங்கி, "அதைத்தான், நான் கூற வந்தேன். என்னைப் பொறுத்த வரையில் இப்பரந்த உலகம் சூன்யமாய் விட்டது. என் வாழ்க்கை பாலைவனம் போல் பாழ்த்து விட்டது. நான் நடைப் பிணம்போல் மனித சமூகத்தி னிடையே நடமாடிக் கொண் டிருக்கிறேன். என் உள்ளத்தைக் கவர்ந்த காதலி— என் ஜீவியத்தின் இன்பக் கேணி—இதயத்தின் இனிய நாதம் — பாக்கிய மணி — இன்பப் பெட்டகத்தின் திறவு கோல்—எனது ஜீவனின் எட்ட முடியாத உயிரோவியம்— என்னிடமிருந்து பலாத்காரமாகப் பிரிக்கப்பட்ட பின்னர், நான் வாழ்ந்தென்ன? கெட்டென்ன? இவ்விதம் வியர்த்த

மாகப் போகும் என் வாழ்க்கையைப் பிறர் நலத்துக்காகப் பயன் படுத்துவதென நாளடைவில் நான் நிர்மானித்தேன். வாழ்க்கையில் பற்று கொண்டிருந்த காலத்திலேயே தேச சேவை, சமூக சேவை முதலியவைகளில் ஈடுபட்டிருந்த நான், எனக்கென ஒன்றும் இவ்வுலகில் இல்லை என்ற நிலை யேற்பட்ட பின்னர், பொதுநல சேவையிலேயே என்னை முற்றும் அர்ப்பணித்து விட்டேன். இதன் பின், என் இச்சை, என் விருப்பம், என் மொழி, என் செயல் என்ற பேச்சே கிடையாது. எல்லாம் பிறர் விருப்பம், மொழி, செயல்களை அநுசரித்துத்தான் நான் நடக்க முற்பட்டேன். நான் பார்ப்பதெல்லாம் மனம், மொழி, மெய்களால் நான் செய்யும் சேவை அதாவது நான் நினைக்கும் நினைப்பு, பேசும் பேச்சு, செய்யும் செயல் ஆகியவை பிறர்க்கு நன்மையை யுண்டு பண்ணுகின்றனவா? என்பதுதான். இப்போது என் நிலைமையை நீங்களெல்லாம் தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

"இந்நிலையில்தான், காமாட்சி என்னைக் காதலிப்பதாகக் கூறித் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டியதும், அவள் விருப்பத்துக்கு இணங்கினேன். வாழ்க்கையில் தகுந்த ஆதர வின்றி யிருக்கும் காமாட்சி தனக்கு நான் தகுந்த துணைவன் என்று கருதித் தேர்ந்தெடுத்ததால், எவ்வகையிலேனும் யாருக்கேனும் நான் பயன்படுவதா யிருந்தால் உதவி புரி வோம் என்ற கொள்கையில் அதை நான் அங்கீகரித்தேன். நம் சமூகத்தில் இளம் விதவைப் பெண்களின் பரிதாப நிலை உங்களுக்குத் தெரியாததா ? இவர்களின் விமோசனத்தை யுத்தேசித்துத்தான் மகாத்மா காந்தி ஒரு முறை இளைஞர்க ளெல்லாம் விவாகஞ் செய்து கொள்வதா யிருந்தால், விதவை இளம் பெண்களையே திருமணஞ் செய்து கொள்ள வேண் டும் என்று கூறியிருக்கிறார். அடிகளின் ஆப்த மொழியை

யநுசரித்தும், நான் சமூகப் படுகுழியில் விழுந்து கிடக்கும் அபலைகளில் ஒருத்தியான காமாட்சியைக் கைக் கொடுத்து தூக்கி உதவ முனைந்தேன். இவ் விஷயத்தில் என் வைராக்கிய மட்டுமல்ல; சமூகக் கட்டுப்பாடு, சாதிபேதம், குரு சிஷ்ய பாவம் முதலிய பல முட்டுக்கட்டைகளைத் துணிகரமாக மோதித் தள்ளிவிட்டு நான் போகவேண்டியிருப்பதை, கண்ணன் நன்கு அறிவான். நான் அவைகளையெல்லாம் லட்சியஞ் செய்யவில்லை. எதிர்ப்புகளையெல்லாம் தீரமாக எதிர்த்து நிற்கவே துணிந்தேன். என் காதல் விவகாரம் பட்டுப் போன பின்னர், இடும்பைக்கே கொள்கலனான இச் சரீரம் சமூகத்தின் சரிபாதியான பெண்களுக்குச் சாபக் கேடாக உள்ள வைதவ்விய நிலையை விரட்டியடிப்பதற்குச் செய்யப்படும் நன்முயற்சிக்கு, காமாட்சியின் விருப்பத்தை நிறைவேற்றுவது வாயிலாக உதவுவதாயிருக்கிறது என்று உணர்ந்தபோது, சிறிதுந் தயங்காது அவளது காதலையேற்றுக் கொண்டேன்.

"ஆனால், காமாட்சி தான் அவசரப்பட்டுச் சித்தத்தைச் சிதறவிட்டு உறுதி குலைந்து விட்டாள். ஆனாலும், அம்மா, நீங்கள் குறிப்பிட்டதுபோல், காமாட்சி பருவகாலத்தின் உணர்ச்சி வேகத்தைத் தாங்க மாட்டாமல், வெளித் தோற்றத்தினால் கண் சிதறிப்போய் ஏற்படும் மோகத்துக்கு அதிகமாக இடங் கொடுத்து விட்டாள். காமாட்சி மட்டுமல்ல; மனிதருள் பெரும்பாலார் இத்தகைய தவறுதலுக்கு ஆளாகிறார்கள். ஆதலால், காமாட்சியை நிந்திந்து யாதொரு பயனும் இல்லை. காலச் சக்கரத்தின்கீழ் அவள் ஒரு சிறு துரும்பு. அவள் தான் மோகாந்தகாரத்தில் மூழ்கியது—சித்த விகாரத்துக்கு இடங்கொடுத்தது தவறு என்று இப்போது உணர்ந்து கழிவிரக்கங் கொண்டு வருந்து

கிருள்; உயிரை மாய்த்துக் கொண்டாயினும் கழுவாய் தேடிக் கொள்ளத் துணிந்துவிட்டாள் என்று அறிந்த பின்னரும் நான் வன்மஞ் சாதிப்பது அழகாயிருக்குமா? மனிதர்கள்தாங்கள் அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்களை உணர்ந்து வருந்தினால், ஆண்டவன் அவர்களுக்குப் பாவ மன்னிப்பு அளிக்கிறான் என்று நம் சாத்திரங்களெல்லாம் சாற்றுகின்றன. கிறிஸ்தவ சமயம் இப்பாவ மன்னிப்பையே தன் சிறந்த கொள்கையாகக் கொண்டிருக்கிறது. ஆகவே, நான் காமாட்சியை மன்னித்து ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்றே கருதுகிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்னுடைய செயலுக்கு நீங்கள் அனைவரும் அங்கீகாரமும் ஆசியும் அளிப்பீர்களா?" என்று தன் நிலைமையைத் தெளிவுபடுத்தி எங்கள் கருத்தைக் கேட்டான்.

"தாராளமாக. பேரறிவாளனான நீ செய்யுஞ் செயலுக்கும் நிர்மாணிக்கும் முடிவுக்கும் நாங்கள் தவறு சொல்ல முடியுமோ?" என்றோம் நானும் என் அன்னையாரும்.

இச்சமயத்தில், "ஐயோ! இதென்ன!" என்று ரஞ்சனி அலறிக்கொண்டு காமாட்சியண்டை ஓடினாள். நாங்கள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தோம். காமாட்சி ஆத்மநாதனின் உணர்ச்சி ததும்பிய பேச்சைக் கேட்டு உண்டான உணர்ச்சி தாங்க மாட்டாமலோ வேறென்ன காரணத்தாலோ, உணர்விழந்து துவண்டு விழலானாள். ரஞ்சனிக்கு முன் ஆத்மநாதன் தாவிச் சென்று காமாட்சி கீழே விழுவதற்குமுன் அவளைத் தன் கரங்களால் தாங்கிக் கொண்டான். இதற்குள் அம்மா கூஜாவிலிருந்து கொஞ்சம் குளிர்ந்த நீரைக் கொண்டு வந்து காமாட்சியின் முகத்தில் தெளித்தார். ரஞ்சனி மூலையில் மாட்டியிருந்த விசிறியை யெடுத்து வந்து விசிறலானாள். நான் மட்டும்

இருந்த இடத்தை விட்டு அசையாமல் கவலேயோடு காமாட்சியின் முக மாறுதலேக் கவனித்துக் கொண்டிருந் தேன். ஆத்மநாதன் காமாட்சியைத் தன் கரங்களிலிருந்து மார்பில் செளகரியமாகச் சார்த்தியவாறு முகத்தின் முன்னுல் சுருண்டு விழுந்திருந்த கூந்தலே விரல்களால் கோதி விட்டுக் கொண்டிருந்தான்.

அம்மாவும் ரஞ்சனியும் செய்த சைத்தியோபசாரங்க ளால் காமாட்சி விரைவில் மூர்ச்சை தெளிந்தாள். முதலில் மெள்ளக் கண்களேத் திறந்து பார்த்த அவள், தான் தன் காத லன் மார்பில் சாய்ந்து கொண்டிருப்பதையும் அவன் தன் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதையும் மற்றவர்கள் சூழ்ந்து நின்று தன்னே மூர்ச்சை தெளிவிக்க வேண்டியவைகளேச் செய்து கொண்டிருப்பதையும் கண்டு நாணங் கொண்டு மீண்டும் கண்களே மூடிக் கொண்டாள்.

"காமாட்சி, இப்போது எப்படி யிருக்கிறது? கொஞ்சம் தண்ணீர் குடிக்கிருயா?" என்று ஆத்மநாதன் பரிவோடு கேட்டான்.

இக் குறிப்பறிந்து அன்னேயார் எனக்கும் ரஞ்சனிக் கும் ஜாடை காட்டிவிட்டு, "ஆத்மா, கொஞ்சம் காபி போட்டுக் கொடுத்து அனுப்புகிறேன். காமாட்சிக்குப் புகட்டு" என்று கூறிக்கொண்டே வெளியே சென்ருர். அவர் பின்னே ரஞ்சனி சென்றுள். நான் அவ் விருவரையும் பின் தொடர்ந்தேன்.

"ஐயனே, உங்கள் பெருமை யறியாது தவறிழைத்த-அலட்சியஞ் செய்த-என்னே மன்னிப்பீர்களா? மனப்பூர்வ மாக மன்னித்து விட்டீர்களா? என்னே மன்னித்து விட்ட தாக இப்போது மீண்டும் சொல்லுங்கள். எனக்கு அடைக்கலம் அளித்து ஆதரிப்பதாக வாய்விட்டுச் சொல்

னுங்கள். என் காது குளிரக் கேட்கிறேன். அப்போது தான் மனம் ஆறுதல் அடையும்."

"காமு, இனியும் கவலை ஏன்? உன்னை மன்னித்து விட்டதாக எத்தனையோ முறை சொல்லியாய் விட்டதே! எப்போது என்னைப் புகல் என்று அடைந்தாயோ அப் போதே நான் உனக்கு அடைக்கலம் அளித்து விட்டேனே! இன்னும் என் சந்தேகம்? சென்றதைப் பற்றி யெல்லாம் சிறிதுஞ் சிந்தியாதே! அடியோடு அவற்றை மறந்து விடு. எதிர்கால ஏற்றத்தில் இன்பங் கொள். இனி உனக்கு யாதொரு குறைவும் இல்லை. உன்னை இன்பத்தி லாழ்த்தி மகிழ்விப்பதே எனது முதற் பெருங் கடமையாகும். உன்னுடைய நல் வாழ்வுக்காகவே என் வாணாளை அர்ப் பணஞ் செய்து விட்டேன்!"

நான் வெளியே வந்து கதவைச் சாத்தும்போது காமாட் சியும் ஆத்மநாதனும் உரையாடிய மேற்குறித்த மொழிகள் என் காதில் விழுந்தன.

சில நிமிஷங்களுக் கெல்லாம் என் தாயார் காபியுடன் பலகாரங்களைத் தயாரித்து விட்டார். இதைவிட அவர் ரஞ்சனியைக் கொண்டு செய்த மற்றொரு காரியம் என்னை பெருவியப்பால் விம்மிதமுறச் செய்தது. ரஞ்சனி ஒரு வெள்ளித்தட்டில் புறக்கடையில் பூத்திருந்த முல்லை மலர் களைப் பறித்து மாலை தொடுத்து வைத்துக் குங்குமச் சிமிழு டன் கொண்டு வந்தாள்.

அம்மா, "ஆத்மா," என்று அன்போடு அழைத்துக் கொண்டே போனார். அதே சமயத்தில் ஆத்மநாதன் "கண்ணா! கண்ணா!!" என்று கூப்பிட்டுக்கொண்டு வந்தான். "காமுவுக்கு முன்னே கொஞ்சம் காபியும் பலகாரமும் கொடுக்கலாம். நீங்களும் சாப்பிடுங்கள்" என்று அம்மா

கூறியவாறு என்னைப் பார்த்தார். அக் குறிப்பறிந்து நான் பலகாரத் தட்டையும் காபி கூஜாவையும் டம்ளர்களையும் எடுத்து வந்தேன். காமாட்சி மகிழ்வே நிறைவாய் ஆனால் நாணத்துடன் நின்று கொண்டிருந்தாள். தாயார் அவளையும் ஆத்மநாதனையும் மாறி மாறிப் பார்த்துப் புன்முறுவலோடு, "ரஞ்சனி" என்று கூப்பிட்டார். அப் பூங்கொடி மலர்ந்த முகத்துடன் மலர்த்தட்டை யேந்தி வந்தாள்.

அன்னையார், "ரஞ்சனி, மலர்த்தட்டை உன் ஆசாரியனிடம் நீட்டு.—ஆத்மா, மக்களுக்கு மங்களகரத்தைப் புரிந்து வரும் சங்கரனை மனதில் தியானித்தவாறு குங்குமச் சிமிழிலிருந்து குங்குமத்தை யெடுத்து காமாட்சியின் நெற்றியில் இடுவாயாக. மலர்மாலையை யெடுத்து அவளது கூந்தலில் சூட்டுவாயாக" என்று கட்டளை யிட்டார்.

ஆத்மநாதன் ஆச்சரியத்தால் சில கணங்கள் அசைவற்று நின்று விட்டான். பின்னர் அவன் தழுதழுத்த குரலுடன், "அம்மா, என் மனத்தை எந்த அமங்கலக் கோலம் உறுத்தி வருத்திக் கொண்டிருக்கிறதோ, அந்த அமங்கலத்தைப் போக்க நீங்கள் குறிப்பறிந்து செய்த காரியத்தை நான் எவ்விதம் பாராட்டுவேன்? நீங்கள் உங்களுடைய செயலால், கைம்மை நிலையைப் பெண்ணினம் எவ்வளவு தூரம் வெறுக்கிறது என்பதை விகசிதப்படுத்தி விட்டீர்கள். பத்தினித்தெய்வம் கண்ணகி தேவியும் பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டும் கைம்மை நிலையை வெறுத்துரைத்த மொழிகளை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். நான் விதவை இளமகளிரைக் காணும்போதெல்லாம், வாலி மனைவி தாரையை விதவைக் கோலத்தில் கண்டபோது இலக்குமணன் அடைந்த நிலையையே நான் அடைந்து வந்திருக்கிறேன். இம் மனநிலையின் முதிர்ச்சிதான் காமாட்சி

பின் கைம்மையைப் போக்க, என்னை—என் வாழ்க்கையைத் தியாகஞ் செய்ய வைத்தது. நீங்கள் செய்த அரும் பெருஞ் செயல் மூடப் பழக்க வழக்கங்களை—அர்த்தமற்ற கொள்கைகளை—மேற்கொண்டிருக்கும் நம் பெண்களின் கண்களைத் திறக்கும் என்பது நிச்சயம்" என்று கூறிய வாறு, குங்குமத்தை யெடுத்து நாணத்தால் தலை கவிழ்ந்திருந்த காமாட்சியின் முகத்தை நிமிர்த்தி நெற்றியில் இட்டு, மலர்மாலையைக் கூந்தலில் சூட்டினான். அப்போது காமாட்சியின் வதனம் மேகத்திரையினின்றும் நீங்கிப் பிரகாசிக்கும் முழுமதியைப் போன்று பொலிவுபெற்று விளங்கியது. பின்னர், அவன் காமாட்சியைக் கைப் பிடித்து அழைத்து அன்னையார் முன் வந்து கைகூப்பி, "அம்மா! நீங்களே என்னைப் பெற்ற தாயினும் பெரிய தாய். உங்களுடைய மனமுவந்த நல்லாசி எங்களை வாழ்விக்கும் என்று திடமாக நம்புகிறேன்" என்று மொழிந்து அவர் காலில் விழுந்து வணங்கினான். காமாட்சியும் உடன் வணங்கினாள். அன்னையார் ஆனந்தக் கண்ணீர் ததும்ப, "ஆத்மா, காமு! நீங்கள் இருவரும் நகமும் சதையும் போல ஒற்றுமையாக இருந்து வாழ்க்கை நடத்தி, எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் பதினாறு பேறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்விர்களாக!" என்று ஆசிர்வதித்தார்.

இக்காட்சி ரஞ்சனியையும் என்னையும் உள்ள நெகிழ்ச்சி கொள்ளச் செய்தது. நான் ரஞ்சனியைக் கனிவோடு நோக்கினேன். அவள் தன் குவளைக் கண்களால் என்னை ஆதரத்துடன் பார்த்து விட்டு, முகத்தில் முறுவல் கொப்பளிக்க நாணத்தோடு தலை குனிந்து கொண்டாள்.

முற்றுப் பெற்றது.

கைம்மை நிலையின் கைதவம்

கதாநாயகன் ஆத்மநாதன் கடைசியாகக் குறிப்பிட்ட சரித்திர காலச் செய்திகளை அதாவது ஆடவர்களில் இலக்குமணனும், பெண்களில் கண்ணகிதேவியும், பெருங்கோப் பெண்டும் விதவை நிலையைக் கண்டு வருந்தி வெறுக்க நேர்ந்த நிகழ்ச்சிகளை வாசகர்கள் விவரமாகப் படித்தறிந்து பயன் பெறும் பொருட்டு, அம் மூன்று காட்சிகளையும் சுருக்கமாகவும் அழகாகவும் சித்திரித்து இங்கே அநுபந்தமாகச் சேர்த்திருக்கிறோம்.

1

தமக்கு வாக்குறுதி கொடுத்தபடி, சுக்கிரீவன் நான்கு திங்கள் கழிந்தும் தன் வானர சேனையோடு வரவில்லை என்பதைக் கண்டு இராமர் கோபங் கொள்ளுகிறார். தம்பி இலக்குமணனை நோக்கி, "சுக்கிரீவன் நம் கருணையால் தான் எதிர்பாராது கிடைத்த அரச நல்வாழ்வில் மயங்கி யிருக்கிறான் போலும்! அவன் அறத்தை மறந்து விட்டான். நம் மறத்தை (வீரத்தை) அறியவில்லை. நன்றி கொன்று அரிய நட்பை மறந்திருக்கிறான். ஆதலால், நீ கிட்கிந்தை போய் அவன் நிலை என்ன? என்ன சொல்லுகிறான்? என்று அறிந்து வா" என்று ஆணை யிடுகிறார். மரமும் மலைகளும் கிடுகிடுக்க இலக்குமணன் அம்புங் கையுமாக வேகத்தோடு செல்கிறான். இவனது ருத்திராவேச நிலையைக் கண்டு வானரங்களெல்லாம் நாலாபக்கமும் நடுங்கி யோடலாயின. காலனைக் கண்டது போல் மண்டி யோடிய வானரங்கள் அங்கதனை யடைந்து, 'ஐய, இளையபெருமாள் சண்ட வேகத்தோடு சீறி வருகிறார்' என்று கூறுகின்றன. அங்கதன் இலக்குமணனது வருகைக்குரிய கார

ணத்தை உடனே அறிந்து கொண்டான்; ஆதலால், அவன் அரண்மனை அந்தப்புரத்திற் சென்று, இளமகளிர் அடி வருட மலரணையில் மயங்கி யிருக்கும் சுக்கிரிவனை எழுப்பி, "எந்தாய், இலக்குமணர் கோபத்தோடு வந்திருக்கிறார். என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்கிறான். ஏற்கனவே, செல்வமென்னும் கள்ளினால் அதிகங் களித்துள்ள அவன் மதுவினாலும் மயங்கி யிருந்தான்; ஆதலால், தன்னை யுணராதவனாய் மீண்டும் உறங்கலானான். அங்கதன் இனி செய்வது என்னவென்று தோன்றாது அநுமனை நோக்குகிறான். மாருதி அங்கதனை அழைத்துக்கொண்டு அன்னையான தாரையிடஞ் செல்கிறான். அவளிடம் விஷயத்தைத் தெரிவித்து யோசனை கேட்கின்றனர். 'வாக்குறுதி யளித்தபடி குறித்த காலத்தில் வானரப் படையுடன் செல்லாதது நன்றி கெட்ட செயலாகும்' என்று அவள் இடித்துக் கூறுகிறாள். ஆயினும், முதலில் வீராவேசத்துடன் வரும் இலக்குமணனுடைய கோபத்தைத் தணிப்பதற்கு வழி செய்யவேண்டும் என்று கூறி, அவள் இலக்குமணன் வரும் வழியைக் குறுக்கிடலானாள். இலக்குமணன் அரச வீதியைக் கடந்து வருகையில் தாரை சேடியர் சூழ எதிர்ப்படுகிறாள். வேகமாக வந்து கொண்டிருந்த இலக்குமண்ன் திகைத்து நிற்கிறான். மெல்லியர் வளைந்து கொண்டபோது இலக்குமணனின் கோபம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அப் பெண்களை அவன் ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சுகிறான். 'மாமியர் கூட்டத்திலிடையே அகப்பட்ட மருமகனை'ப் போல், அவன் ஒருபுறம் ஒதுங்கித் தனுவைத் தரையில் ஊன்றித் தலைகுனிந்து நிற்கிறான்.

வானர மகளிர் நடுவே இருந்த தாரை இலக்குமணனை நோக்கி, "அனந்தகோடி காலம் தவம் செய்தாலும் இந்திரர் முதலியோராலும் அடையக்கூடாத திருவடிகளால் நடந்து, ஐயனே! எங்கள் மனை வரப்பெற்றது நாங்கள் செய்த பெருந்தவமே யாகும். தாங்கள் இங்கு எய்தியதற்குக் காரணமென்ன என்று நாங்கள் அறியலாமா?" என்று வினயமாகக் கேட்கிறாள்.

இவ்விதம் மொழிந்தது யார் என்று அறிய இலக்குமணன் நிமிர்ந்து நோக்குகிறான். இரவில் வெண்ணிலவைப் பொழியும் சந்திரன் பட்டப்பகலில் தோன்றினால் எப்படி யிருக்குமோ அவ்விதம் சோபை யிழந்த முகத்தோடு தாரை அவன் கண்களுக்குக் காட்சி

யளிக்கிறாள். அவளது விதவைக்கோலம் இலக்குமணனுக்குத் தங்கள் தாய்மாரை நினைந்து வருந்தச் செய்கிறது.

"மங்கலஅணியை நீக்கி மணியணி துறந்துவாசக்
கொங்குஅலர் கோதைமாற்றிக் குங்குமஞ்சாந்தங் கொட்டாப்
பொங்கும் வெம்முலைகள் பூகக்கழுத்தொடு மறையப்போர்த்த
நங்கையைக் கண்டவள்ளல் நயனங்கள் பனிப்பநின்றான்."

என்று கம்பர் பெருமான் தாரையின் விதவைக் கோலத்தையும், அந்நிலையைக் கண்டு இலக்குமணன் அடைந்த வருத்தத்தையும் வருணிக்கிறார்.

"'இளையராம் என்னைஈன்ற இருவரும்' என்னவந்த
நினைவினன் அயர்ப்புச்சென்ற நெஞ்சினன் நெடிதுநின்றான்."

என்று மேலும் அவன் மனநிலையை விவரிக்கிறார். இத்துயர நிலையிலிருந்து நீங்குவதற்கு அவனுக்கு வெகு நேரமாயிற்று. அதற்கு அப்புறம்தான், கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமலிருக்கப்படாது என்று எண்ணி அவன் தான் வந்த காரியத்தைத் தாரைக்குச் சொல்லுகிறான்.

2

சிலம்பு விற்றுவரச் சென்ற தன் கணவன் இன்னும் வரக்காணோமே என்று கண்ணகி கலங்குகிறாள். இச்சமயத்தில் தங்கள் குறையை முடிக்குமாறு மாயவனை நோக்கி முறையிட்டு ஆய்ச்சியர் குரவைக்கூத்து ஆடி முடிக்கின்றனர். கோவலன் கொலையுண்ட செய்தியை ஊரரவத்தின் வாயிலாகக் கேட்டுவந்த ஒரு பெண்மணி ஆய்ச்சியரிடம் மெள்ளக் கூறுகிறாள். எல்லோரும் கண்ணகியை நோக்கி இரங்குகின்றனர். கண்ணகி விஷயமென்ன என்று வற்புறுத்திக் கேட்கிறாள். வேறு வழியின்றி அவர்கள் செய்தியை மெள்ளத் தெரிவிக்கின்றனர். கண்ணகி கணவனின் அநியாயச் சாவைக் கேட்டு துடிக்கிறாள்; பதைக்கிறாள்; அழுகிறாள். கணவன் பிரிந்த பின்னர், மங்கையர் அடையும் நிலை என்ன என்பதை எண்ணிப் பார்த்துக் கதறுகிறாள். கணவன் இறந்து விட்ட பிற்பாடு மகளிர் உயிர் வாழ்வது என்பதை அவள் அறவே வெறுக்கிறாள். அவள் மகளிரின் கைம்மை நிலையை அவள் எவ்வளவுக்கு

வெறுக்கிறாள் என்பதை அவள் வாய் மொழியாகவே, பின்வரும் பாடல்களில் இளங்கோ அடிகள் படம்பிடித்துக் காட்டுகிறார்.

"இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறுஇழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண்டு அழிவலோ!"

"நறைமலி வியன்மார்பின் நண்பனை இழந்திரங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறுஇழைப்ப
அறனென்னு மடவோய்யான் அவலங்கொண்டு அழிவலோ!"

"தார்பூண்ட பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கார்மலர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறுஇழைப்ப
இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி அழிவலோ!"

என்று கண்ணகி கதறியவளாய்,

'பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர் செல்வனே! கள்வனோ என்கணவன்?'

எனக் கேட்கிறாள்.

'கள்வனோ அல்லன்; கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி யுண்ணும் இவ்வூர்'

என்றது ஓர் குரல். இது கேட்டதும் அவள் பாண்டியனைப் பழி வாங்கிவிட்டுப் பதியுடன் சுவர்க்கஞ் செல்ல ஓடுகிறாள்.

3

பெருங்கோப் பெண்டு ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனுடைய தேவியார். புலவனும் வீரனுமாய்ச் சிறந்து விளங்கிய அவனுக்குத் தகுந்தபடி அருங்கலை கற்றவள்; அருந்ததி போன்ற கற்புடையவள். நற்றமிழ் உணர்ந்த நங்கையார். அவள் தன் கணவருடன் இல் லறத் துணையாய் ஒழுகும் நாளில், அறிவில் பெருங் கூற்றம் அப் பூதபாண்டியனின் இன்னுயிரைக் கவர்ந்தது. இந்நிலை அறிவுடைக் கோப்பெருந் தேவியாரின் மனநிலையை யுருக்கியது. பின்னர்,

அவள் ஒருவாறு தேறிக் கணவனுடன் தீப்புக முயல்கிறாள். இச் சமயத்தில் ஆண்டு குழுமியிருந்த புலவரும் சான்றோரும் அறிவுடை யரசனை இழந்துள்ள இந்நிலையில் அரசியையும் இழக்க மனந் துணியாது, தேவியாரை தீப்புக வொட்டாது தடுக்கின்றனர். அப்போது தேவியார் ஈமத்தீப்புறத்து நின்றவாறே ஆவேசத்தோடு பின்வருமாறு பாடுகிறாள்:—

"பல் சான்றீரே! பல் சான்றீரே!
செல்கெனச் செல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே!
அணில்வரி கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ லல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிபெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ!
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்,
நுமக்கரி தாகுக தில்ல வெமக்குஎம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே."

என்று அவள் தன்னைத் தடுத்தவர்களுக்குக் கைம்மை நிலையை எடுத்துக் கூறி, "அவ்விதக் கேவல வாழ்வு வாழ மாட்டேன்" என்று சொல்லித் தீயிற் பாய்ந்து கணவன் சென்ற உலகை யடைகிறாள்.

இந் நூலைப் பற்றிய பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேச மித்திரன்:— * * * விதவைப் பெண்களுக்கு மறுமணம் செய்து வைக்காததால் ஏற்படும் தீங்கை உலகினருக்கு அறிவூட்டுவதே இந்தக் கதையின் நோக்கமாகும். அதன் மூலம் உண்மையில் சீர்திருத்தம் ஏற்படும்படி செய்யக் கூடும் என்பதே ஆசிரியரின் கருத்து. அவருடைய நோக்கம் அநுதாபத்திற்கு உரிய தென்பதில் அபிப்பிராய பேதத்திற்கு இடமில்லை. இக் கதையைப் படிக்கும் எவரும் இது கொடுமை யென்பதை உணராம லிருப்பதற்கில்லை. காலப் போக்கும் மாறி வருகிறது. பழைய காலத்துத் தளைகள் ஒவ்வொன்றாக அறுபட்டு வருகின்றன. இப்போதைய நிலைமையைக் கொண்டு நிதானிப்பதாயின், ஆசிரியர் கோரும் சீர்திருத்தம் ஏற்படும் காலம் அதிகத் தொலைவிலில்லை யென்றே காண்கிறது............இதன் நடை அழகாகவும் ஆசிரியருடைய செந்தமிழ்ப் பயிற்சியைக் காட்டுவதாகவும் இருக்கிறது. இடையிடையே சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. * * *

* * * *

நவமணி:— * * * தற்கால சமூகக் கோரங்களுள் ஒன்றான வைதவ்வியத்தை ஒழிக்க இளைஞர்களும் குடும்பத் தலைவர்களும் முன்வரவேண்டுமென்பதே இப் புத்தகத்தின் கருத்து. நல்ல எளிய நடையில் எழுதப்பட் டுள்ளது. கதைப் போக்கும் வசீகரமாய்த்தா னிருக்கிறது. காமச் சுவை சிற்சில இடங்களில் சிறிதளவுக்கு வரம்பை மீறிச் சித்திரிக்கப்பட் டிருப்பதுபோல் காணப்பட்டாலும், உண்மையில் கட்டுப்பாட்டுக்குள்தான் சித்திரிக்கப்பட் டிருக்கிறது. * * *

—"இளங்கோவன்."

* * * *

தமிழ்நாடு:— * * * "இயற்கையாக ஒருவர் உள்ளத்தில் அரும்பி வளர்ந்து வரும் இன்ப உணர்ச்சியானது திரண்டு சோபிக்கவேண்டிய காலத்தில் 'விதவை' என்னும் ஒரு பெயர் கூறப்பட்ட வுடனேயே அப்படியே அவை யாவும் நசித்துப்போய் விடக் கூடுமென எல்லோரிடமும் எதிர்பார்க்க முடியாது. விதவை

என்ற சந்நியாச வாழ்க்கை பிறரால் பலாத்காரமாகச் சுமத்தப் படுவதே யன்றி, ஒரு பெண்ணுக்கு இயற்கையாக ஏற்படுத்துவ தன்று. இவ்வித வாழ்க்கைக்கு விரக்தியும், மன உறுதியுமே அடிப்படை யாகும். இதைச் சிறிதும் யோசிக்காமல், ஒன்று மறி யாப் பேதைப் பெண்களைச் சமூகக் கட்டுப்பாட்டிற்கு அஞ்சி மூலே யில் கிடத்துவதால் ஏற்படும் விபரீதங்களையும் பரிதாபங்களையும் ஓர் பெண் தன் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு எழுதுவது போல இக் கதை எழுதப்பட்டிருக்கிறது. பொதுவாக, 'உலக இன் பம் அறியாப் போதிலேயே விதவைப் பட்டம் பெற்ற ஒரு பெண் நாளாக ஆக, எவ்வித உணர்ச்சிக்குள்ளாகக் கூடும் என்பதையும், தன் வீட்டிலேயே, தன் கண் முன்பாகத் தன் வயதுப் பெண் களும், தன் சகோதர சகோதரிகளும், பெற்றோரும் மற்றோரும் இயற்கை யுணர்ச்சியின்பம் தடைப் பெருமல், தன் கணவன் மனைவியுடன் கூடிக் குலவிக் கொஞ்சி விளையாடுவதைக் காணும் போது, அப் பெண்ணின் மனதில், அவை ஓர் தூண்டுகோல்போல் நின்று செய்யக்கூடிய உள்ளக்கிளர்ச்சிகளையும் அதன் வயப் பட்ட அப் பெண் மான அவமானத்தையும் மறந்து நடந்து கொள் ளும் பரிதாபத்தையும் முடிவில் கடலில் விழுந்து தற்கொலை புரிந்துகொள்ள முயற்சிப்பதையும் மிகவும் தெளிவாக, சந்தர்ப்பத் திற்கேற்ற பல படங்களுடன் இந் நூலாசிரியர் **ஸ்ரீ நாரண-துரைக் கண்ணன்** கற்பனை செய்து எழுதி முடித்திருப்பது பெரிதும் போற் றத்தக்கதாகும். ஆனல், இக் கதையை, பெண்ணின் பரிதாப மரணத்தில் முடிக்காமல் ஒருவரை மணந்துகொண்டு இயற்கை இன்பத்தில் திளைத்து குழந்தை குட்டிகளுடன் சுகித்திருப்பதாகவே மங்களகரமாக முடித்திருப்பது குறிப்பிடத் தக்கது. * * *

* * * *

தாருல் இஸ்லாம்:— * * * விதவா விவாகம் வேண்டும் என் பதை வற்புறுத்துவது இந் நவீனத்தின் நோக்கம்.........எழுத்து வன்மையும், காதல் வர்ணனையும், பெண்ணுரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற ஆர்வமும் கதை முழுதும் ததும்பி நிற்கின் றன. * * *

PRINTED AT THE
"ANANDA BODHINI" POWER PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET,
SOWCARPET, MADRAS.